


கல்கி

KALKI 25-1-81 90 காசு



"நான் செக்ரெட்டரி
ஆகையால் ஸ்மார்ட்டாக இருக்கத்தக்க உடை அணிய வேண்டுமல்லவா."





உங்கள் அந்தஸ்தே தனி
அதற்கேற்ற துணி

ம:பத்லால் :பேப்ரிக்ஸ்

சூட்டிங்குகள், ஷர்ட்டிங்குகள், புடவைகள் மற்றும் துணிகள்
மற்றும் பெட்ஷீட்கள்

ம:பத்லால் இண்டஸ்ட்ரீஸ் நியூ ஷோராக் மில்ஸ் **ம:பத்லால் :பைன்**

MF-4-TAM



குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்!

குரங்கிலிருந்து பிறந்தவன்—மனிதன்
கொம்பேறித் தாவும்
குரங்கிலிருந்து பிறந்தவன்—மனிதன்!
என்று தொடங்கும் திரைப்படப்
பாடல் அந்த நாளில் பிரசித்தம்!
இந்த விஞ்ஞான உண்மையை
நிலைநாட்டவே எடுக்கப்பட்ட
உன்னதமான திரைப்படம்!
Ape And Super Ape.
மனிதனுக்கும் மிருகங்கள் — பறவை
களுக்கும் இடையில் அதிக
வித்தியாசமில்லை; பல்வேறு
விதமான உணர்ச்சிகள்
பொதுவானவைதான் என
நிரூபிக்கும் சிறந்த படம்.
மனிதன் வேறுபடுவது பகுத்தறிவில்
தான். அறிவாற்றல் அவனை
ஆராய்ச்சியில் இறக்கி, அரக்க
குணத்தையும் பல சந்தர்ப்பங்களில்
வளர்த்து விடுகிறது. பல மிருக
இனங்களை இவன் விளையாட்டாக
வேட்டையாடியே அழித்து
விட்டான். தனது விஞ்ஞான
ஆராய்ச்சி நிமித்தமும் கேளிக்கைக்
காகவும் மிருகங்களைக் கொடுமைப்
படுத்துகிறான். ஒரு மிருக இனம்
அதே இனத்தைச் சேர்ந்த இன்
னொரு மிருகத்துடன் சண்டை
போடும், ஆனால் கொல்லாது.
மனிதனோ மனித இனத்தை
அழிக்கத் தயங்குவதில்லை.
பல்வேறு வகையான மிருகங்களின்
வாழ்க்கை முறைகளை,
தங்கள் இனம் அழிந்துபடாதிருக்க
அவை நடத்தும் போராட்டங்களை
அவை தங்களுக்குள்ளாகவே
ஏற்படுத்திக் கொள்ளும் சட்ட
திட்டங்களை, கட்டுப்பாடுகளை
எல்லாம் பிரமிக்க வைக்கும் படப்
பிடிப்பின் மூலமாக நமக்கு
எடுத்துச் சொல்கிற அறிவியல் படம்.

ஊர்வன, நடப்பன, பறப்பன,
நீந்துவன, ஆகிய அனைத்து விதமான
ஜீவராசிகளின் சுக துக்கங்களிலும்
நாம் படத்தைப் பார்க்கும்போது
பங்கு பெறுகிறோம். அறிவாற்றல்
உள்ள மனிதனின்
அறியாமையையும் புரிந்து
கொள்கிறோம்.

கல்வி போதிக்கும் படம்
என்பதால் வரி விலக்கு உண்டு.
எனவே கட்டணம் மிகக் குறைவு.
ஆங்கிலப் படத்தின் விளக்க
உரையைத் தமிழாக்கம் செய்
திருப்பவர் சாண்டில்யன்.
நெருடலற்ற பொருத்தமான
தமிழாக்கம். —குட்டி கிருஷ்ணன்.







தே மதுரத் தமிழும் மாமதுரை மாநாடும்

மீ.ப.சோமு



''இருபது லட்சம் மக்கள் இருக்கும், சந்தேகமில்லை!'' என்றார் ஒரு பத்திரிகை நண்பர்.

''பதினைந்து லட்சத்துக்குக் குறைச்சல் இல்லை!'' என்றார் ஒரு தணிக்கையாளர்.

''கோயிலுக்கு வருகிற கூட்டத்தை வைத்துச் சொல்கிறேன். பதினைந்திலிருந்து இருபது லட்சம் மக்கள் தாராளமாக இருக்கும்!'' என்றார் மீனாட்சி கோயில் பட்டர்!


''சித்திரைத் திருவிழாவுக்கு வருகிற மக்கள் தொகையைப் போல் இரண்டு பங்கு! அதற்கு மேலும் சொல்லலாம்!'' என்றார் ஒரு டாக்ஸி டிரைவர்!

''எந்த விபரீத நிகழ்ச்சியும் இல்லாமல், எப்படிப்பட்ட கலவரமும் உண்டாகாமல், எத்தகைய விபத்தும் நேராமல் இத்தனை மக்களும் கடமையோடும், கண்ணியத்தோடும், கட்டுப்பாட்டோடும் நடந்துகொண்டு, விழாவைக் கண்டு களித்தார்களே, அதைச் சொல்லுங்கள்!'' என்றார் ஒரு போலீஸ் அதிகாரி!

''எல்லாம் அம்மை மீனாட்சியின் திருவருள்! இந்தப் பாண்டிய நாட்டின் அரசி யல்லவா அவள்! அவளுடைய எல்லைக்குள் எந்தச் சீர்கேடும் நடவாதவாறு கண்காணித்தாள்!'' என்றார் ஒரு பக்தர்!

''புரட்சித் தலைவரின் செல்வாக்கு எத்தகையது என்பதற்கு இது ஓர் எடுத்துக் காட்டு!'' என்று பொதுமக்கள் பேசிக்கொண்டார்கள்!

ஆம்: - ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு சீரோடும், சிறப்போடும் நடந்து முடிந்தது. ஆட்காட்டி விரலை நீட்டி எந்தப் பகைவரும் குற்றம் சொல்ல முடியாதபடி குழப்பமோ விபத்துக்களோ இல்லாமல், இத்தனை லட்சம் மக்கள் மதுரையிலே ஒன்றுகூடி இவ்வளவு



1. உலகத் தமிழ் மாநாட்டு நிறைவு விழாவில் தமிழ் அறிஞர்களுக்குப் பத்தாயிரம் ரூபாய் பண முடிப்பு வழங்கினார் பாரதப் பிரதமர். பண முடிப்பு பெற்றவர்கள்: வித்துவான் வேணுகோபால் பிள்ளை, ஔவை துரைசாமி, பி. ஸ்ரீ. ஆசார்யா, கா. அப்பாதுரை, சுத்தானந்த பாரதியார். படத்தில் பரிசு பெறுபவர் ஔவை. துரைசாமி.
2. உலகத்தமிழ் மாநாட்டு மலர் வெளியீட்டுவிழாவில் தமிழகம் பிரதம நீதிபதி மு. மு. இஸ்மாயில், தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்., நிதி மந்திரி நாவலர் நெடுஞ்செழியன்.
3. தமிழ் அறிஞர் திரு கி.ஆ.பெ. விசுவநாதனுக்குத் தஞ்சாவூர் தட்டு வழங்கிக் கௌரவிக்கிறார் தமிழக முதல்வர்
4. ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின் நிறைவு நாளில் அலங்கார ஊர்திகளின் ஊர்வலம்.




✖ ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் ஜன சமுத்திரமெனத் திரண்டிருந்த மக்கள்

ஆனந்த நிறைவோடு நிரம்பி வழிந்தார்கள் என்றால், அது வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு பெரிய நிகழ்ச்சிதானே!

ஜுலை நான்காம் தேதியிலிருந்து, ஊர்வலம் நடைபெற்ற பத்தாம் தேதி வரை எத்தனை இலட்சம் மக்கள் சாரி சாரியாக வந்து மதுரையிலே சரிந்து கொண்டிருந்தார்கள்! விழாவை முன்னிட்டு மதுரை நகரின் பல பகுதிகளிலும் பொது மனைகளிலும் அன்றாடக் குளிப்பு முதலிய வசதிகளுக்கு ஏற்பாடு செய்து தந்ததை, அதன் முன்யோசனையை ஆரம்பத்தில் புரிந்து கொள்ள முடியாதவர்கள் பலர் உண்டு. ஆனால் ஆயிரம் ஆயிரமாகப் பொதுமக்கள் கைப் பையிலே உணவுப் பொட்டலங்களுடனும், விரிப்பு, படுக்கைகளுடனும் மதுரையின் வீதிகளில் விடியற்காலையிலிருந்து நடந்து சென்றதைப் பார்த்தால், இவர்கள் எல்லாம் தங்களுக்கு வேண்டிய நித்தியத் தேவைப் பொருட்களுடன் ஆங்காங்கே தங்கிவிடும் நோக்கத்தோடு கிளம்பியிருக்கிறார்கள் என்பது புரிந்தது. நிகழ்ச்சிகளைப் பார்க்க வேண்டியது, சொற் பொழிவுகளைக் கேட்க வேண்டியது, பசிக்கும்போது சாப்பிட வேண்டியது, பொது வசதிகள் இருப்பதால் பயன்படுத்திக் கொண்டு அங்கங்கே தங்கிவிட வேண்டியது என்று திட்டம்! விடுதிகளையோ, உறவினர், நண்பர்களின் வீடுகளையோ நாடிச் செல்ல வேண்டிய அவசியமே இல்லை! இரவு நேரங்களில் மைதானங்களிலேயே ஆயிரக் கணக்கான மக்கள் கண் துயில்வதைக் கண்டபோது இந்த உண்மை மேலும் உறுதியாயிற்று!

உலகத் தமிழ் மாநாட்டின் ஒரு பெரிய சிறப்பு என்னவென்றால், லட்சக் கணக்கான தமிழ் மக்கள், முக்கியமாகத் தென்பகுதி மக்கள், மதுரை நகரிலே கூடி, ஒரு பெரிய திருவிழாவிலே கலந்து கொண்ட ஆனந்தத்தோடு கூடிப் பிரிந்தார்கள்! இத்தனை லட்சம் மக்களும் ஒரே காலத்தில் இப்படி ஓர் ஆனந்தக் களிப்பிலே மூழ்கித் திளைப்பதற்காகவே இப்படி ஒரு திருவிழாவை நடத்தலாம்! இதை விட வேறு பயனே இந்த ஜனநாயக யுகத்தில் வேண்டியதில்லை என்று பட்டது! ஆனால் உண்மையில் வேறு பல நிலையான பயன்களும் மதுரை மக்களுக்கும் மதுரை மாவட்ட மக்களுக்கும் இந்தத் திருவிழாவினால் ஏற்பட்டுள்ளன.

மாநாடு நடைபெறுகிற நாட்களில் பொது மக்கள் எந்த வசதிக் குறையும் இல்லாமல் விழாவைக் கண்டு களிக்க வேண்டும் என்ற திட்டத்துடன் இந்த ஏற்பாடுகளைச் செய்ததோடு, நிலையான சில வசதிகளும் ஏராளமான பொருட் செலவிலே மதுரை மாநகரில் செய்யப் பட்டிருந்தன. மேலூர், இராமநாதபுரம், அருப்புக்கோட்டை, கன்னியாகுமரி, தேனி ஆகிய இணைப்புச் சாலைகளிலே அழகிய வாயில் வளைவுகள் நிலையான முறையில் நிறுவப்பட்டன. விழாவுக்குப் பிறகும் இவை நிலைத்து நின்று நான்மாடக் கூடல் நன்னகரை அணி செய்யும்! இவை தவிர, தமுக்கம் கலையரங்கிலும், மூவேந்தர் நுழைவாயில் உலகத் தமிழ் மாநாட்டை நினைவூட்டிக் கொண்டு நிற்கிறது! தமிழ் நாடு சுற்றுலா வாரியம் மதுரையில் ஒரு மாபெரும் புதிய விடுதியைத் தொடங்கியிருக்கிறது. மாரியம்மன் தெப்பக்குளம் பயணிகளுக்கு வேண்டிய உல்லாசங்களோடு புதிய பொலிவு பெற்றிருக்கிறது. குடிசைப் பகுதிகள் எல்லாம் சீர்திருத்தம் செய்யப் பட்டு, மதுரையின் அழகைச் செப்பம் செய்து நிற்கின்றன. இந்த நிலையான பணிகள் தவிர, அறிஞர் பெருமக்களின் சிலைகள் திறக்கப்பட்டு, தமிழ்ப் பண்பாட்டுச் சின்னங்களாகத் தமிழர்களின் பெருநகரான வரலாற்றுப் பின்னணி கொண்ட மதுரையிலே



அவன்: ''அந்த டாக்டருக்கு ஒன்றுமே தெரியலேன்னு, எப்படி சொல்லறே?...''
இவன்: ''பல்ஸ்'' பாக்கணும்ன்னு சொல்லிட்டு வாயப் பாக்காம, கையைப் புடிச்சுப் பார்க்கறார்!...'' — கை. இராமமதி

கொலுக் காட்சி தருகின்றன. கடல் கடந்த உலக நாடுகளில் உள்ள முக்கிய நகரங்களிலே நாம் காணுகிற இத்தகைய காட்சிகள், இனி மதுரையிலும் நிலைபெற்று, உலகத் தமிழ் மாநாட்டின் விளைவாக உலக நகரங்களில் ஒன்றாக மாமதுரை காட்சி தரும்!

இத்தனை ஏற்பாடுகளிலும் மிகவும் பாராட்ட வேண்டிய நிலையான வசதிகள், சாலைகளின் சீரமைப்பும், நடைப்பாதை பெருக்கமும், புதிய மின் இணைப்புக்களும் ஆகும்! இப்படி ஒரு மாநாடு நடக்கவில்லை யென்றால், இந்தக் குடிசைகளின் சீரமைப்புக்கும், இத்தனை ஒளிமயமான மின் இணைப்புக்கும் எத்தனை யுகங்கள் பிடித்திருக்கும்! மதுரை மக்கள் இந்த அரிய வசதிகளுக்காகவே உலகத் தமிழ் மாநாட்டை வாழ்த்திக் கொண்டே இருக்கலாம்!

மாநாட்டுக்காகப்பந்தல்கள் போட்டோம், முடிந்ததும் பிரித்து விட்டோம் என்றில்லாமல், மதுரை நகரத்துக்கும் அக்கம் பக்கத்துக்கும் இப்படி ஒரு புதிய அழகும் உறுதிப்பாடும் நிலையான முறையிலே உண்டாகியது. என்பது இந்த மாநாட்டின் நிரந்தரமான பயனாகும். இனி, மாநாட்டினால் பொது மக்கள் என்ன அனுபவம் பெற்றார்கள்?

சாறெலாம் வளர்க்கும் வீதி!
தமிழெலாம் வளர்க்கும் மன்றம்!

என்று ஒரு நாட்டின் நல்லாட்சிக்கு இலக்கணம் கூறுகிறது தமிழ் இலக்கியம்! ''சாறு'' என்றால் திருவிழா. ''தமிழ் எலாம்'' என்றால் மூன்று தமிழும் அதன் விரிவுகளும்! நன்னல நாட்டிலே அழகு வீதிகள் எல்லாம் விழாக்களை வளர்க்கும் வீதிகளாகவும், மன்றங்கள் எல்லாம் தமிழையும் தமிழ் இயல்களையும் வளர்க்கும் மன்றங்களாகவும் விளங்க வேண்டும். மதுரை நகரம் உலகத் தமிழ் மாநாட்டினால் இந்த வளர்ச்சியைக் கண்டது!

விழா நடந்த ஒரு வாரத்திலும் தமிழ்ப் பொதுமக்கள் கண்டு கேட்டு மகிழ்வதற்கு என்று மதுரை நகரத்தின் பொது நிலைகளிலே பல கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பல இலக்கிய மகிழ்வுகள் நிகழ்ந்தன. ஆராய்ச்சியாளருக்கும், உலகின் பல நாட்டு அறிஞர்களுக்கும் என்று வேறு தனியாக மதுரைப் பல்கலைக் கழக வளாகத்திலே பல கருத்தரங்கு நிகழ்ச்சிகள் நடந்தன. இந்த இரண்டும் இரு வேறு பங்கீடுகளாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன!

பொதுமக்களுக்காக மதுரை நகரத்தின் உட் பகுதியிலே நடைபெற்ற நிகழ்ச்சிகள் மூன்று வகைப்படும்.

பந்தய மைதானத்திலும், கலையரங்குகளிலும் நாடகங்கள், நடன நிகழ்ச்சிகள், களியாட்டங்கள், வியரங்குகள், பட்டி மண்டப நிகழ்ச்சிகள், க்காடு மன்றங்கள் என்று பற்பல நடந்தன. அத்தனை ஆயிரம் மக்களும் அங்கங்கே தங்கினார்கள், குடியிருந்து விட்டார்கள் என்று கூடச் சொல்லலாம்!

இந்த இலக்கிய, கலை நிகழ்ச்சிகள் தவிர, பொது மக்களின் மகிழ்வுக்காகத் திருமலை நாயகர் மகலில் ஓர் ஒலி—ஒளிக் காட்சி தொடங்கப்பட்டது. (மகல் என்பதை மகால் என்று ஏனோ அழைக்கிறார்கள்!) இந்தஒலி — ஒளிக் காட்சி ஹாலந்து நாட்டின் கலைத்திறனுதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது. சிலப்பதிகாரக் காட்சிகள் சிலவும், திருமலை மன்னர் வரலாறு போன்ற நிகழ்ச்சிகள் சிலவும் இந்தக் காட்சியிலே இடம் பெறுகின்றன. இதைப் போலவே கண்காட்சி ஒன்றும் எல்லாரும் சென்று பார்த்துக் களிக்கும் முறையில் தமுக்கம் மைதானத்தில் அமைத்திருக்கிறார்கள். அரசாங்கத் துறையினரின் சாதனைகளை எடுத்துக் காட்டும் கூடங்களோடு, கலையழகும் வரலாற்றுச் சிறப்பும் நிரம்பிய சில கூடங்கள் பண்டிதரும் பாமரரும் அனுபவிக்கும் விதத்தில் காட்சி தருகின்றன. முக்கியமாக அறநிலையத் துறையினரின் காட்சிக் கூடமும், புதைபொருள் ஆய்வாளரின் காட்சி வரிசையும், மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தினரின் சில அரிய அமைப்புக்களும் மிக மிகப் பாராட்டத் தக்க முறையில் உள்ளன. இந்த மூன்றையும் பற்றி மூன்று நூல்கள் எழுதலாம்! இவர்களே இந்த மூன்று விளக்கக் கையேடுகளையும் எழுதி வெளியிட்டால் நீடித்த பயன் ஏற்படும் என்று கருதுகிறேன். அத்தனைநேர்த்தி இந்தக்காட்சி அமைப்புக்கள்!

பொதுமக்களின் களிப்புக்கு என்று இந்த மாநாட்டிலே முக்கியமாகத் நிகழ்ந்தவை மூன்று வகை என்றேன். முதலாவது பிரிவிலே கலை இலக்கிய நிகழ்ச்சிகளைச் சொல்ல வேண்டும். இரண்டாவது வகையிலே அடங்கும் காட்சி வரிசைகள். மூன்றாவது சொல்ல வேண்டியது, பத்தாந்தேதி நடைபெற்ற ஊர்வலம்! தமிழ் அன்னையின் எழில் மேனியை இலக்கிய அணிகலன்களால் அலங்கரித்த தமிழ்ப் புதல்வர்களும், சங்கத் தமிழ்க் காட்சிகளும், இலக்கியச் சிற்ப ஓவியங்களும் — எல்லாம் ஊர்தி ஊர்தியாக அணிவகுத்து அசைந்து வந்த காட்சி நேர்த்தியாக இருந்தது. ஊர்திகளுக்கு இடையிடையே தமிழகத்தின் வழி வழி இசையும், கலைகளும், ஆடல் பாடல்களும், மாணவ மாணவியரின் பயிற்சி அணிகளுமாகக் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன!

இந்த மூன்று வகையான கலைக் களிப்புக்களும் தவிர, இந்த மாநாட்டை ஒட்டி ஒரு திரைப்படம் எடுத்து அதையும் வெளியிட்டிருக்கிறார்கள். பொதுமக்களுக்கு என்று வெளிவந்த போதிலும் இந்தத் திரைப்படம் ஆராய்ச்சியாளர்களின் கருத்துக்கும் விருந்தாக அமைந்திருப்பதால் இதைத் தனியாகவே குறிப்பிட வேண்டும். இந்தத்

திரைப்படம் காந்தி கண்காட்சி நிலையத்தின் திறந்த வெளி அரங்கிலே காட்டப்பட்டது. இதன் அமைப்பிலே நீண்ட நெடுங்கனவுகள் பல பின்னி ஓடுகின்றன. தமிழ் மகன் இன்று தனது பழைமை வரலாற்றின் செம்மைப் பகுதிகள் பலவற்றை இழந்து, தனது மூதாதையர்கள் தனக்கென்று கட்டி நிறுத்திய எத்தனையோ காவிய மாளிகைகளையும், இசையரங்குகளையும், கலைக் கருவூலங்களையும் கடலுக்கு இரை கொடுத்துவிட்டுக் கேட்பவர்களுக்குப் பதில் சொல்ல முடியாமல் ''திருதிரு'' என்று விழித்து மயங்குகிறான் அல்லவா, அந்த அவலங்களை யெல்லாம் மனம் உருகும்படி சித்திரிக்கிற லெமூரியா கண்டத்தைப் பற்றிய அரிய திரைப்படம் இது! தமிழில் இருப்பது எது, இல்லாதது எது, இருந்திருக்க வேண்டியது எது — அத்தனை பண்புகளையும் வரலாற்றுச் சான்றுகளோடும், இலக்கிய உட்சான்றுகளோடும், மோன நிகழ்ச்சிகளுக்குள்ளே மொழி விளக்கம் கூறும் பின்னணி வருணனையோடும் அழகாகத் திரைப்படம் செய்திருக்கிறார்கள்! பகுத்தறிவுக்கு முரண்படாத வகையில் கடல் கொண்ட தமிழகத்தின் தொன்மையான கதா பாத்திரங்களை நிறுத்தி, நிகழ்ச்சிகளைப் பின்னியிருக்கிறார்கள். புகைப்படப் பிடிப்பும், பின்னணி இசையும், நேர்த்தியாக இருக்கின்றன. தமிழக முதல்வரின் பல ஆண்டுக் கருத்தைச் செயலாக்கிய ப. நீலகண்டன் அவர்களின் தயாரிப்பு இது. அவரையும் அவருக்குத் துணை செய்த மற்றக் கலைஞர்களையும் உன்னதமான சங்கீதப் பின்னணியை வழங்கியிருக்கிற இசைக் குழுவினரையும் மனமாரப் பாராட்ட வேண்டும். அதிலும் படத்தின் முதலாவது பாதி மிக மிக அருமை!

இதெல்லாம் **தமிழ்** மாநாடு என்ற முறையிலே நடைபெற்ற நிகழ்ச்சிகள். ஆனால் வெறும் தமிழ் மாநாடு இல்லையே இது! **உலகத்** தமிழ் மாநாடு அல்லவா! அதற்கு ஏற்ப அனைத்துலக வண்ணத்தையும் இந்த மாநாட்டுக்குத் தந்தது பல்கலைக் கழக வளாகத்திலே நடந்த ஆய்வுக் கருத்தரங்காகும்!

உலக வண்ணம் என்பது இரண்டு விதத்திலே ஏற்பட்டது. ஒன்று, உலகின் பல நாடு களிலுமிருந்து அன்னிய அறிஞர்கள் தமிழ்க் காதலால் உந்தப்பட்டு அந்த ஆசை பற்றியே இந்த ஆய்வு அரங்கத்திற்குப் பல ஆயிரம் செலவழித்துக் கடல் கடந்து பறந்து வந்திருந்தார்கள்! தாய்நாடாகிய தமிழ் நாட்டின் சேய் நாடுகளான இலங்கைமலேயா முதலிய நாடுகளிலிருந்து மட்டுமல்லாமல், இங்கிலாந்து, அமெரிக்கா, செக்கோஸ்லாவேகியா போன்ற தொலை நாடுகளிலிருந்தும் அறிஞர்கள் வந்து கலந்து கொண்டார்கள்! பலர் தமிழிலேயே மழலை பேசினார்கள்! எனவே மெய்யாகவே அனைத்துலக வண்ணமும் மெருகும் இந்த ஆய்வுக்கருத்தரங்கானது மாநாடு முழுவதற்குமே நல்கியது என்று சொல்ல வேண்டும்! மதுரை யில் இருக்கிறோமா அல்லது ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தில் இருக்கிறோமா என்று ஒரு மயக்கம் பல சந்தர்ப்பங்களில் உண்டாயிற்று!

இப்படி ஓர் அகில உலக வர்ணம்! இனி, இன்னொரு விதத்திலும் இந்த ஆய்வு அரங்கம் அனைத்துலக வண்ணத்தை மாநாட்டுக்குத் தந்தது. அதுவே தமிழ் மொழிக்குள்ள உலக இணைப்பு ஆராய்ச்சி!

இந்த மாநாட்டின் ஆய்வுக் கருத்தரங்கிலே ஆராய்ச்சிக் கட்டுரைகள் படித்த பல வெளி நாட்டு அறிஞர்கள் நமது தாய் மொழிக்கு அவரவர்களின் தாய் மொழியோடு எப்படி ஒரு வரலாற்று இணைப்பு இருந்து வந்திருக்கிறது என்பதைத் தக்க சான்றுகளோடு எடுத்துச் சொன்னார்கள்.


கிரேக்க நாட்டுக்கும் தமிழுக்கும் உள்ள வரலாற்றுத் தொடர்பு, நமது பண்பாட்டுக்கும், கிரேக்கர்களுக்கும் இடையே ஏற்பட்ட பரிமாற்றங்கள், நமது சொற்களுக்கும் கிரேக்க மொழிக்கும் உள்ள உறவு, ஒற்றுமை, இது போலவே நீக்ரோப் பண்பாட்டுக்கும் நமது பண்பாட்டுக்கும் உள்ள சில ஒப்புமைகள், ஜப்பானிய மொழிக்கும் தமிழ் மொழிக்கும் உள்ள ஒத்த இயல்புகள், ஒரே மாதிரியான சொல்லாட்சி முறைகள், வேறு சில ஐரோப்பிய மொழிகளின் தொடர்புகள், பாபிலோனிய மொழிக் குடும்பத்துக்கும் தமிழ்க் குடும்பத்துக்கும் உள்ள வியத்தகு ஒப்புமைகள்—என்று பல்வேறு அறிஞர்கள், அன்னிய நாட்டுப் புலவர்கள், துரைமார்கள், அங்கங்கே சான்றுகள் கூறிப் பொருத்தமாக விளக்கம் செய்தார்கள். இந்த உரைகளைக் கேட்ட தமிழ் அறிஞர்கள் எல்லாரும் பூரிப்பு அடைந்தார்கள். தமிழ் மொழி உலக அரங்குக்குரிய மொழி என்று தமிழர்களே சொல்லிக்கொள்வதில் பெருமை இல்லை. இந்த உண்மையை அந்தந்த மொழிக்கு உரியவர்களே சொல்லக் கேட்கும் போது உலகத் தமிழ் என்ற மொழிச் சிறப்பை எண்ணித் தோள்கள் விம்முகின்றன அல்லவா?


மொத்தத்தில் ஆய்வுக் கருத்தரங்கு வெற்றிகரமாக நடைபெற்றது என்றே கூற வேண்டும். என்றாலும் பல்கலைக் கழக வளாகத்திலே சில மகத்தான குளறுபடிகளும் இருந்தன! இவை சில அறிஞர்களின் மனத்தைப் புண்படுத்தின. இது போலவே பொதுநிலை நிகழ்ச்சிகளிலும் சில அவலாதிகள் எழுந்தன. இவற்றையும் இவற்றின் பின்னணிக் காரணங்களையும் அடுத்த இதழில் பார்ப்போம்.

(அடுத்த இதழில் முடியும்)

அவர்: நான்சொல்ற அத்தனை அட்வைஸ்களையும் என் பையன் கேட்கமாட்டேன் என்கிறான் எல்லாம் வேஸ்ட்தான்.

இவர்: ஏன் வேஸ்ட் என்கிறீங்க. நீங்க சொல்ற அத்தனை அட்வைஸ்களையும் உங்க பையன் இன்னும் இருபது வருஷம் கழிச்சு தன் பையனுக்குச் சொல்லப் போறானே! —சரஸ்வதி பங்க




பெட்ரோல் டீசல் காஸ் சிலிண்டர் விலை உயர்வு
கறுப்பு எருமை மாட்டை வெள்ளை மாடாக ஆக்குறேன்!
கறுப்புப் பணம்
தேசிய பாதுகாப்புச் சட்டம் அளித்ததற்கு நன்றி!
கட்டுக் கேட்டு அதிலிருந்து விடுதலை அளித்ததற்கு நன்றி!
எங்களைத் தட்டிக் கேட்காமல் இருப்பதற்கு நன்றி!
காங்கிரஸ்
முஸ்லிம் லீக்

எதிர்காலத் தமிழ்

உலகத் தமிழ் மாநாட்டில் வீண் செலவு ஆனதாக யாராவது சொன்னால் அவர்கள் மீது மான நஷ்ட வழக்கு தொடுக்க இடமிருப்பதாக முதல்வர் கூறியிருக்கிறார். பத்து கோடியில் 99 சதவீதம் நிரந்தர பயனுள்ள திட்டங்களுக்குத்தான் செலவாயிற்றாம்!

அரசு செலவினங்களில் இருவகை உண்டு. உற்பத்திக்கு உதவி செல்வத்தை மேலும் பெருக்கும் செலவுகள். அவ்விதம் உதவாத செலவினங்கள். இலவசக் கல்வி, சாலை அமைத்தல் போன்றவை உடனடியாக இல்லாவிடினும் நாளடைவில் செல்வத்தைப் பெருக்க உதவும். அயல் நாட்டுப் பயணிகள் தங்க ஹோட்டல் அமைத்தல், தொழிலகங்கள் நிறுவுதல் போன்றவை லாபகரமாக நடந்தால் விரைவிலேயே செல்வத்தைப் பெருக்கும். அரசு சிப்பந்திகளை, அதிகாரிகளைத் தேவைக்கு அதிகமாக நியமித்தல், அவர்களுக்குக் காரியாலயக் கட்டிடங்கள் எழுப்புதல், வாகனங்கள் வாங்குதல் போன்றவற்றுக்கு ஆகும் செலவினங்கள் உற்பத்திக்கு உதவாதவை; செல்வத்தை விரயமாக்குபவை.

உலகத் தமிழ் மகாநாட்டுக்குச் செலவான பத்து கோடியில் 99 சதவீதம் வேண்டாம், 90 அல்லது 85 சதவீதம், செல்வத்தை மேலும் பெருக்கும் செலவினமாக இருக்குமானால் போதும், வரி செலுத்துபவன் திருப்தி அடையலாம். இது பற்றி மதுரை மக்கள்தான் சரியான தீர்ப்பு வழங்க முடியும். அவர்கள் கருத்தறிய ஆவலாய் உள்ளோம்!

தொல்காப்பியர் காலம் தொடங்கி அண்ணாதுரை காலம் வரை தமிழின் சிறப்பு மகாநாட்டில் அலசப் பட்டிருக்கிறது. ஆனால் இன்றைய உலகில் விஞ்ஞானம், பொருளாதாரம், இலக்கியம் முதலிய பல துறைகளும் அடைந்து வரும் வளர்ச்சிக்கு ஏற்ப தமிழ் வளர்ந்திருக்கிறதா என்றால் நிச்சயம் இல்லை. இவற்றுக்கு ஈடு கொடுக்கிற மாதிரி தமிழ் வளர வேண்டும் என்பதில் ஐயமில்லை. எப்படி வளர்ப்பது?

''குழந்தையின் தலையையும் காலையும் இருபுறமும் பிடித்து இழுத்தால் வளருமா? கலைச் சொல் ஆக்கங்களும் அகராதிகள் தயாரிப்பதும் இப்படிப்பட்ட காரியங்கள் தாம். குழந்தை நல்ல போஷாக்கு பெற்று இயல்பாக வளரவேண்டும்'' என்றார் ராஜாஜி. நவீன உலகுக்கு ஏற்பத் தமிழ் இயல்பாகவும் துரிதமாகவும் வளர எளிய வழி சொல்லித் தந்தார். அது, ஆங்கிலத்தின் தரத்தைப் பள்ளிகளில் உயர்த்துவது; கல்லூரிகளில் ஆங்கில பாடப் புத்தகங்களை வைத்துக்கொண்டு தமிழைப் போதனா மொழியாகக் கொள்வது. அறிவியலில் ஞானம் பெறுவதுதான் முக்கியம்; மொழியல்ல. பேராசிரியர்களுடன் மாணவர்கள் தமிழில் உரையாடிச் சந்தேக விளக்கங்கள் பெறும்போது ஆங்கில கலைச் சொற்கள் அப்படி அப்படியே இயல்பான தமிழாக்கம் பெற்றுவிடும்; தமிழாகவே ஆகிவிடும்!

மாங்காய் என்பது மேன்கோ ஆனதையும் அரிசி என்பது ரைஸ் ஆனதையும் மகாநாட்டில் சுட்டிக்காட்டிய பிரதமர், இதே போல் ஆங்கிலச் சொற்களைத் தமிழ் ஏற்கத் தயங்கக் கூடாது என்ற அர்த்தத்தையும் உள்ளடக்கித்தான் பேசியிருக்கிறார்.

ஆனால் இதே தமிழ் மகாநாட்டில் ஆங்கிலத்தை விரட்டி அடிப்பதில் பலர் தீவிரம் காட்டியுள்ளனர். வங்கத்திலோ, இதே காலகட்டத்தில், 'வங்க மொழியின் வளர்ச்சிக்கு ஆங்கிலம் அவசியம்; அதனைப் பள்ளிகளிலிருந்து நீக்கக் கூடாது; மாறாக அதன் தரத்தை உயர்த்த வேண்டும்' என்று வங்கமொழி வல்லுனர்களே ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

தமிழின் எதிர்காலம் வளமுள்ளதாக இருக்க வேண்டுமானால் அதைக் கன்னித் தமிழாகவே கட்டிக் காக்காமல், ஆங்கிலத்தைக் காதலித்து மணம் புரிந்து கொண்டு ஏராளமான புதிய வார்த்தைகளைப் பெற்றெடுக்க அனுமதிக்க வேண்டும்.

1981 ஜனவரி 25

ரௌத்திரி தை 12

மலர் 39 : இதழ் : 26



கல்கி



தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

திரைப்பட விழாவில் குழாயடிச் சண்டை



X நி ஸபீரு

ஏழாம் தேதி மாலை சுமார் ஏழு மணி. படம் ஆரம்பித்துப் பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு இருக்கைப் பிரச்னை கிசுகிசுப்பாக ஆரம்பித்து (இந்தியில்) சுத்தல் அளவுக்குப் பெரிசாக உயர்ந்தது. சில நாட்களாகப் பத்திரிகையாளர்களும், டெலிகேட்களும் இடம் கிடைக்காமல் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தனர். திடீர் என்று டிக்கெட் வாங்கி உள்ளே வந்த ரசிகர்களுக்கும் டெலிகேட்டுகளுக்கும் இடையில் புகைச்சல் போராட்டமாக மலர்ந்தது. ஒரே கூச்சல் குழப்பம். எனக்குச் சந்தேகம். நாம் விஞ்ஞான பவனத்தில் இருக்கிறோமா இல்லை நாடாளு மன்றத்திலா?

படம் பாதியில் நிறுத்தப்பட்டு விளக்குகள் போடப்பட்டன. அப்பொழுது முக்தா சீனிவாசன் ஒரு நாற்காலியின் மேல் நின்று கொண்டு எல்லா டெலிகேட்டுகளையும் வெளியில் ஒட்டுமொத்தமாக வந்து எதிர்ப்புத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டிருந்தார். இவ்வளவு நடந்தும் பெஸ்டிவல் டைரக்டர் ரெய்னுவோ, மற்ற நிர்வாகிகளோ அலட்டிக்கொள்ளவில்லை. ஒலிபெருக்கியில் கிடைக்கிற இடத்தில் உட்காரச் சொல்லி வேண்டுகோள். மீண்டும் படம் ஆரம்பித்தவுடன் மறுபடி பிரச்னை ஆரம்பமாகி அதிகரித்தது. டெலிகேட்டுகள் கோபம் கொண்டு திரையை மறைக்க ஆரம்பித்தனர். பட விழா அதிகாரிகளோ படம் போடுவதிலேயே விடாப்பிடியாக இருந்தனர்.

இந்த நிலையில் மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சர் சாத்தே வர, பிரச்னை ஒரு மாதிரி கட்டுக்குள் அடங்க ஆரம்பித்தது. முக்கியஸ்தர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி தினசரி டிக்கெட்டுகளின் விற்பனையை நிறுத்த உத்தரவிட்டார். போராட்டத்தின்போது புரொஜக்டர் துவாரத்தை மறைக்க உதவியது ஒரு சால்வை. ஆனால் அது திரும்பி உரியவரிடம் போய்ச் சேரவேயில்லை. தம் சால்வையைப் பறிகொடுத்தவர் எழுத்தாளர் அகிலன் மகன் சிவசுப்பிரமணியன்.

பத்தாம் தேதி திரும்பவும் விஞ்ஞான பவனத்துக்குப் படம் பார்க்கச் சென்றேன். மூன்று இடத்தில் உட்கார வைத்து எழுப்பினார்கள். பணம் பண்ண ஆசை ஏற்படுவது சகஜம்தான். ஆனால் திரைப்பட விழாவின் பிரதான நோக்கம் அது அல்லவே?

KASS BACH (AUSTRIA) தேசமோ குடும்பமோ தலைவன் சரியாயில்லையானால் கடைசிவரை கோளாறுதான். ஒரு கடை முதலாளி தன் கடையில் வேலை கேட்டு வரும் பதினைந்து வயதுப் பெண்ணையும் அவளது தாயாரையும் அனுபவிக்கிறார். அதைவிட அவருக்கு மகிழ்ச்சி தரக் கூடியது இரவு நேரத்தில் எதிராளியின் கடைகளை உடைத்து நொறுக்குவது. இந்த நிலையில் இவனது மனைவி இவனுக்குத் துரோகம் செய்கிறாள். மகன் கெட்டுப் போகிறான். மகனுக்கும் தந்தைக்கும் ஏற்படும் வாக்குவாதத்தில் தந்தையே மகனை நோக்கித் துப்பாக்கியைக் காண்பிக்கிறார். மகன் காத்திருக்கிறான், குண்டின் வரவை நோக்கி என்று முடிகிறது படம். சிறு முயல்களை முதலாளி துப்பாக்கிப் பயிற்சிக்காகச் சுடுவது பிறகு இரத்த வெள்ளத்தில் அவைகளைக் காட்டுவது அருவருப்பாயிருந்தாலும் அரக்க குணமுள்ள மனிதர்களும் உள்ளனர் என்ற உண்மையை உணர்த்துகிறது.

RICHARD'S THINGS (U. K.) மனமொத்த தம்பதியினர். வேலைக்காக வெளியூர் சென்ற ரிச்சர்டு இருதயக் கோளாறினால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுகிறார். இரண்டு நாளில் மரணமடைகிறார். மனைவி கேட் அதிர்ச்சி அடைகிறாள். அதைவிடப் பெரிய அதிர்ச்சி ரிச்சர்ட் இரட்டை வாழ்க்கை வாழ்ந்ததைக் கண்டுபிடிக்கும்போது. ரிச்சர்டின் காதலியைக் கண்டுபிடித்துச் சண்டையிட்டுப் பிறகு சமாதானமாகி இருவரும் நெருங்கிப் பழக ஆரம்பித்து விடுகிறார்கள். ஆனால் இருவரது தனிமையும், சுதந்திரமும் பறிபோய்விட்டதை கேட் உணர்ந்து ரிச்



⌘ மெய்டன் அண்டு தி பீஸ்ட்



⌘ ஆஸ்திரேலியப் படமான 'அன்னாவைத்தேடி'யில் ஒரு கட்டம்.

சர்டின் காதலியைத் தனியே விட்டுத் தன் வழியே போகிறான். கேட்டாக வில் உல்மன் அபாரமாக நடிக்கிறார். பல்வேறு உணர்ச்சிகளைத் தன் முகத்தில் தேக்கி நம்மை மெய் மறக்கச் செய்கிறார். காதலியாக வரும் அமண்டா ரெட்மன், உல்மனுக்கு ஈடுகொடுத்து நடிக்கிறார். முதன் முதலாக காமிராமுன் நிற்கிறார் என்ற எண்ணமே ஏற்படாமல் செய்துவிட்டார் அமண்டா. சக்களத்தி சண்டையும் சமாதானமும் ஆங்கில பாணியில் பார்க்க அழகாகத்தான் உள்ளது.



⌘ 'சிசர்ட்ஸ் நிக்ஸ்' என்ற படத்தில் ஒரு காட்சி.

THE MAIDEN AND THE BEAST (CZECHOSLOVAKIA) பள்ளிப் பிள்ளைகளின் துணைப் பாட நூல் படிப்பது போல் இருக்கிறது. யுவதியின் ஸ்பரிசம் பட்டு மிருகம் அழகிய குமரனாக மாறும் கதை. இருட்டிலே இரவு என்று தலைப்புக் கொடுத்திருக்கலாம். அவ்வளவு வெளிச்சம் படத்தில்.

ORCHESTRA REHERSAL (ITALY) ஒரு நாடு முன்னேற ஒழுக்கம், கட்டுப்பாடு வேண்டும். அவரவரும் தத்தம் கடமைகளைப் பொறுப்புணர்வுடன் நிறைவேற்ற வேண்டும். அப்படியின்றி சுதந்திரங்களை துஷ்பிரயோகம் செய்து தாறுமாறாக நடந்து கொள்ள ஆரம்பித்தால் முடிவு சர்வாதிகாரம் ஏற்பட்டு அடிமை வாழ்வில் தள்ளி விடும். இதனை உருவகமாக ஓர் ஆர்கெஸ்ட்ரா குழுவை வைத்துக் காண்பிக்கிறார் ஃபெலினி என்ற புகழ் பெற்ற டைரக்டர். வாத்திய இசைக் குழுவினர் தத்தம் கடமைகளைப் பொறுப் புணர்வுடன் நிறைவேற்றும்போது தானே இனிய இசை பிறக்கிறது.

BREAKING AWAY (U.S.A.) நீண்ட தூர ஓட்டப் பந்தயம் அல்லது சைக்கிள் பந்தயத்தில் எல்லோரும் சேர்ந்த மாதிரி தான் சென்று கொண்டிருப்பார்கள். திடீரென்று ஒருவன் பிய்த்துக் கொண்டு கிளம்புவான். மற்றவர்களுக்குப் புறம் காட்டிக் கொண்டு விரைந்து முதலாவதாக வருவான். அந்தக் கட்டத்தை Breaking away point என்பார்கள். அதுபோல் வழக்கமான திரைப்படங்களிலிருந்து விலகிச் செல்கிற இந்தப் படத்துக்கு அதே பெயரைச் சூட்டி சைக்கிள் ரேஸையே நிகழ்களாகவும் கொண்டிருக்கிறார் டைரக்டர். எங்கிருந்தோ வந்தான், வென்றான் என்பது போல் புதிய சைக்கிள் ரேஸ் வீரன் நண்பர்களுடன் வருகிறான்; வெல்கிறான், பெரும் புகழ் பெறுகிறான். அதனுடன் அவனது முதல் பாலுணர்வு அனுபவம் அதன் எதிர்பார்ப்புக்கள், தயக்கங்கள், அச்சங்கள், மெய் சிலிர்ப்புக்கள் ஆகியவற்றுடன் இணைக்கப் படுகிறது. சைக்கிள் ரேஸ்கள் பிரமிக்க வைக்கும் விதமாக எடுக்கப்பட்டுள்ளன. இனி கார் ரேஸும் சேஸும் மவுசு இழந்து விடுமானால் வியப்பதற்கில்லை.

ASYA (U. S. S. R) அழகான காதல் கதையைக் கவிதையாகப் படம் பிடித்துள்ளார்கள். ஆஸ்யாவாக எலினு மிகச் சிறப்பாக நடித்துள்ளார். தம் அழகாலும் கவர்கிறார். உல்லாசப் பயணியாக வந்த ரஷ்ய இளைஞன் மற்றொரு உல்லாசப் பயணி ஆஸ்யாவுடன் பழகி அது காதலாக மலர்கிறது. ஆனால் கல்யாணத்தில் முடிவதற்குள் பிரச்னைகள். ரஷ்ய இளைஞன் தன் காதலி ஆஸ்யாவைக் காணமல் துடிக்கிறான். இன்னும் துடித்துக் கொண்டுதான் இருக்கிறான் என்று படம்முடிகிறது.

SHOGUN'S NINJA (JAPAN) புரூஸ் லீ படங்களையெல்லாம் தூக்கிச் சாப்பிட்டு விடும் சண்டைகள் நிறைந்த படம். இந்தப் படத்தின் ஒளிப் பதிவு கற்பனை செய்ய முடியாத அளவு சிறப்பாக இருக்கிறது. எப்படி, எங்கே காமிராவை வைத்துப் படம் எடுத்தார்கள் என்று பல காட்சிகள் நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றன. கதை ''டிட்டோ'' தான். இரண்டு அரசர்களுக்குள் பகை. காணாமல் போகும் சிறுவன் வளர்ந்து ஜூடோ கற்றுக் கொண்டு மிக்கத் தேர்ச்சி பெற்று எதிர் அணியினரைச் சண்டையிட்டுத் தோற்கடித்து விடுகிறான். சண்டை செய்யும் முறையும், அதைப் படமாக்கிய விதமும் பிரமிப்பு.

THE SABINA (SWEDEN/SPAIN) மர்மக் கதையாகத் தொடங்கி, காதல் கதையாக மாறி, கற்பழிப்புக் கதையாக ஆகுமோ என்று தோன்றி, கடைசியில் மனோ தத்துவ ரீதியான பழிக்குப் பழி வாங்கும் கதையாக முடிகிறது. ஒரு ஹிந்திப் படம் பார்ப்பது போல் இருக்கிறது. ஆனால் தொழில் நுட்பத்தில் உயர்ந்துள்ளது. இரண்டு எழுத்தாளர்கள் — முன்னாள் நண்பர்கள் இப்பொழுது வைரிகள் — ஒரே இடத்தில் சந்திக்கிறார்கள். இவர்கள் சந்தித்த இடத்தில் உள்ள ஒரு குகையில் 'சபீனா' என்ற மோகினி ஆண்களை அனுபவித்துச் சாகடித்து விடுவதாக ஒரு பரம்பரைக் கதை உலவுகிறது. கதை மெய்யாகிறது, இவர்கள் வாழ்க்கையில் நுழைந்த பெண்கள் காரணமாக. கடைசிவரை உட்கார வைத்துவிடுகிறதே படம்; போதாதா?

அரசவைக் கவிஞருக்கு அகாதமிப் பரிசு

சேரமான் காதலி என்ற சரித்திர நாவலுக்காக கண்ணதாசனுக்கு சாகித்ய அகாதமிப் பரிசு கிடைத்திருக்கிறது. அவருக்கு என்றோ கிடைக்க வேண்டிய கௌரவம் இன்றேனும் கிடைத்ததே என்று மகிழ்கிறோம்.

கண்ணதாசன் என்றதுமே கவியரசு என்ற பட்டமும், அரசவைக் கவிஞர் என்ற பதவியும் எண்ணற்ற அவரது கவிதைகளும்தான் முதலில் நினைவுக்கு வரும்; எனவே ஒரு கவிதைத் தொகுப்புக்கல்லவா பரிசு தந்திருக்க வேண்டும் என்ற சர்ச்சையைச் சிலர் கிளப்பலாம்! (எந்த சாகித்திய அகாதமி பரிசுதான் சர்ச்சையைக் கிளப்பாமல் இருந்திருக்கிறது?) ஆனால் கண்ணதாசன் விஷயத்தில் இந்த வாதம் செல்லாது. கவிஞரின் உரைநடையில் கவிதை வடிவம் இல்லாவிடினும் கவிதை உள்ளத்தை நிச்சயம் காண்போம். சேரமான் காதலி நிரம்ப ஆராய்ச்சிக்குப் பின் அவர் எழுதிய சிறந்த சரித்திர நாவல். காதலும் கடமையும் தியாகமும் வீரமும் இறையுணர்வும் நாட்டுப் பற்றும் போட்டி போட்டுக்கொண்டு சிறக்கும் நவீனம். அந்தந்த உணர்வுக்கு ஏற்பக் கொஞ்சவும், கெஞ்சவும், ஓங்கவும், அடங்கவும், ஏக்கவும், உருகவும் செய்யும் எழிலார்ந்த காவிய நடை.

பரிசு பெற்ற கண்ணதாசனைப் பல்லாண்டு கூறி வாழ்த்துகிறோம். பரிசு பெற்ற நாவலை முதன்முதலாகத் தொடர் கதையாகப் பிரசுரிக்கும் வாய்ப்பைக் கல்கி பெற்றிருந்தது என்பதில் பெருமிதம் கொள்கிறோம்.



மீண்டும் மனிதனானேன்!




என் நண்பர்கள் குழுவில் எனக்கு எப்பொழுதுமே தனி கௌரவம். காரணம் நான் பலசாலி. நல்ல கம்பீரமான ஆரோக்கிய தோற்றம். என் மனைவிக்கு இதனால் தனிப் பெருமை.

திடீரென்று ஒரு நாள் எனக்குச்சீதபேதி துவங்கியது. உடனே அதற்கான மருந்து நானே வாங்கிச் சாப்பிட்டேன். அதுவும் கட்டுப்பட்டது. பிறகு சில நாட்களில் திரும்பவும் ஆரம்பித்தது. இந்த முறை வைத்தியர் மருந்து கொடுத்துக் கட்டுப் படுத்தினார். அந்தத் தருணத்தில் அடங்கிய அது சில தினங்களில் மீண்டும் ஆரம்பித்தது. இந்த முறை ரத்தமும் போயிற்று. இது உஷ்ணத்தால்தான் என நினைத்துக் குளுமைக் காகச் சில மருந்துகள் சாப்பிடலானேன். என் மனைவியும் உஷ்ணம் தணியச் சில பக்குவங்களைச் செய்து தந்தாள்.


இந்த முறை அதிக இடைவெளி இல்லாமல் மீண்டும் இரத்தப் போக்கு ஆரம்பித்து விட்டது. வயிற்றில் வலியும் ஏற்பட்டது. எல்லோரும் நான் அதிகமாக வேலை செய்வதால் தான் இந்த மாதிரி ஏற்படுகிறது என்றனர். ஆனால் எனக்குத் தெரிந்தது, வழக்கமாக வேலை செய்யும் அளவுகூட நான் செய்வதில்லை என்று. இதனையடுத்து நான் மிகவும் பலவீனமடைவதை உணர்ந்தேன். சொந்தத் தொழில் நேரடிக்கவனிப்பு இல்லாததால் பாதிக்கப்பட்டது. வைத்தியர்களுக்கே நான் ஒரு பிரச்னை ஆகிவிட்டேன். பல எக்ஸ் ரேக்கள் எடுக்கப்பட்டன. பலமுறை ரத்தப் பரிசோதனை செய்யப்பட்டது. எதிலும் எந்தத் தவறும் தெரியவில்லை. நாளுக்கு நாள் பலவீனம் அடைந்த நான் வீட்டை விட்டு நகர முடியாத நிலைக்கு வந்து விட்டேன். ஐந்து நிமிடத்துக்கு ஒரு முறை சிறிதளவு ரத்தம் போகும். நாளுக்கு நாள் என் எடை குறைந்தது. என் மனைவியையும் குழந்தைகளையும் பார்க்கும்போது எனக்கு நெஞ்சத்தைச் சுடும். இப்படிப் போனால் அவர்கள் கதிதான் என்ன? என்னுடைய உறவினர்கள் எல்லாம் அனுதாபத்தோடு என்னை வந்து பார்க்க ஆரம்பித்தார்கள். ஏதோ விடை கொடுப் பதைப் போல் அவர்கள் வந்து பார்ப்பது எனக்கு ஒரு கிலியை ஏற்படுத்தியது. என் மனைவி பாவம் எதுவுமே தெரியாத வெகுளி! மூன்றும்பெண்குழந்தைகள். வருமானம் நின்று விட்டது. வைத்தியச் செலவோ அதிகமாயிற்று. வியாதியோ சிறிதும் கட்டுப் படவில்லை.

திடீரென்று ஒரு நாள் வயிற்றுப் போக்கு அதிகமாயிற்று. நல்ல ஜுரம் வேறு. நீட்டவே முடியாமல் என் கால்கள் அப்படியே மடங்கிக் கொண்டு விட்டன. ஷாக் முறை வைத்தியத்தில் அவற்றைச் சீர் செய்தார்கள். இதற்குள் என் ஒன்று விட்ட தம்பி

⌘ மீண்டும் மனிதனாக உதவிய டாக்டர் எஸ். சுந்தரராமன்.



⌘ புண்ணாகிப்போனதால் வெட்டி எடுக்கப்பட்ட பெருங்குடல்



⌘ ஆபரேஷனுக்குப் பிறகு வயிற்றில் பை பொருத்தப் பட்டுள்ளது.



'டாக்டர் சுந்தரராமனைப் பார்க்கலாம், அவர் பெரிய சர்ஜன் என்று கூறுகிறார்கள்' என்றார். டாக்டர் என்னைப் பார்த்து விட்டு ''மிகவும் பலவீனமாக இருக்கிறாய். பத்து நாட்கள் இங்கு வைத்துப் பார்த்துத்தான் முடிவுக்கு வர வேண்டும்'' என்றார். பத்து நாட்களில் எனக்குப் பல ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன. உடம்பில் சக்தி ஏற்பட வைத்தார். பிறகு டாக்டர் சொன்னார், ''இது வயிற்றில் பெருங் குடல் புண்ணாகிப் போனதால் ஏற்பட்ட கோளாறு. அதனை அப்புறப்படுத்தினால்தான் முழுமையான நிவாரணம் கிடைக்கும்'' என்று.

கடைசியில் மேஜர் ஆபரேஷன் செய்து பெருங் குடல் பூராவையும் எடுத்துவிட்டனர். சிறு குடலின் முனையை வயிற்றுக்குக் கீழே சற்று வெளியில் தெரிய வைத்து இருந்தார்கள். அது வழியாக மலம் போகும். அதற்காக ஒரு பிளாஸ்டிக் பை கட்டப்பட்டிருந்தது. இதனால் என் தோற்றம் பாதிக்கப்படவில்லை. பிறகு சிறிது சிறிதாக எல்லாத் தொல்லைகளும் குறைந்தன.

நான் மற்ற எல்லோரையும் போல் உழைத்து என் குடும்பத்தைக் காப்பாற்றுகிறேன். பெருங் குடலில் வந்த புண் (அல்சர்)தான் இதற்கெல்லாம் காரணம். அதனை முழுமையாக எடுத்ததால்தான் வாழ முடிகிறது. 'உயில் எழுதியிருக்கிறாயா?' எனக் கேட்டவர்கள் என்னை அணைத்துக் கொள்கிறார்கள். நானும் மனிதனானேன்'' என்றார் ராஜன் உணர்ச்சியோடு.

இவருக்குச் சிகிச்சை செய்த டாக்டர் எஸ். சுந்தரராமன் சொல்கிறார்: ''இது பெருங்குடல் அல்சர். இதனை 'அல்சரேடிவ் கோலிட்டிஸ்' என்கிறோம். இது அநேகமாக 20 முதல் 40 வயது வரை உள்ளவர்களுக்கு வருகிறது. அடிக்கடி மலப் போக்கு இருப்பதால் பலர் சீதபேதி (டிசண்ட்ரி) என நினைக்கிறார்கள். அதற்கே மருந்தும் சாப்பிடுகிறார்கள். மக்களைப் படுக்கையில் போட்டுவிடும் வியாதி இது. அதிக ஜுரம் ரத்தப் போக்கு உண்டு. கவனிக்காமல் விட்டால் இதிலேயே மரணம் ஏற்பட்டு விடும். இந்த ஆபரேஷன் செய்துவிட்டால் எல்லோரையும் போல வாழலாம். மண வாழ்விலும் பாதிப்பு இருக்காது!''

—குயிலி ராஜேஸ்வரி

நீங்கள் புதிதாகக் கல்கி படிக்க ஆரம்பிக்கிறீர்களா?

லக்ஷ்மி எழுதும் **கழுத்தில் விழுந்த மாலை**

தொடர்கதையைப் படிக்க ஆரம்பிக்கும் நீங்கள், கடந்த மூன்று வாரங்களாக வெளி வந்து கொண்டிருக்கும்

சுஜாதா எழுதும் **வஸந்த்! வஸந்த்!**

தொடர்கதையை ஆரம்பத்திலிருந்து படிக்கவில்லையே என்று ஏங்குகிறீர்களா?

அப்படியானால் உங்கள் ஊர் ஏஜெண்ட்டிடம் ஜனவரி 30ம் தேதிக்குள் பின் வரும் கூப்பனைப் பூர்த்தி செய்து அளியுங்கள். உங்களுக்கு **''சுஜாதா''** எழுதிய **''வஸந்த்! வஸந்த்!''** தொடர்கதையின் முதல் மூன்று வார கதைப்பகுதி **இலவசமாகக்** கிடைக்கும்!

—————கூப்பன்—————

நான் கல்கி பத்திரிகையின் புதிய வாசகன் என்றும் **''லக்ஷ்மி''** எழுதும் **''கழுத்தில் விழுந்த மாலை''** தொடங்கும் ஜனவரி 25உ இதழ் முதல் தொடர்ந்து கல்கி வாங்குவதாகவும் உறுதி அளிக்கிறேன். எனக்கு **''சுஜாதா''** எழுதிய **''வஸந்த்! வஸந்த்!''** கதையின் முதல் மூன்று வாரக் கதைப் பகுதி தேவை. பிப்ரவரி 12ம் தேதிக்குப் பிறகு நேரில் வந்து தங்களிடம் (ஏஜெண்டிடம்) அதனைப் பெற்றுக் கொள்கிறேன். தயவு செய்து என் பெயரைப் பதிவு செய்து கொள்ளவும்.

கையெழுத்து

பெயர்

விலாசம்——————————

——————————

கல்கி ஏஜண்டுகள் கவனத்துக்கு :

இப்படி வரும் விண்ணப்பங்களின் அடிப்படையில் தங்களுக்குத் தேவையான **சுஜாதா** கதைப் பகுதி பிரதிகளுக்கு எமக்கு **பிப்ரவரி 3ம்** தேதிக்குள் எழுது மாறு கோருகிறோம்.

மானேஜர், கல்கி, சென்னை-32


அரிப்பின் எதிரி
டெட்மஸால்
சோப்பு
கடுமையான அரிப்பிலிருந்து
நிவாரணம்பெற, உங்கள்
சருமத்தை கவனமுடன் காத்திட
இதோ ஒரு தனி சோப்பு—
டெட்மஸால்
விரைவில் நீண்ட நிவாரணம்
அளிக்கிறது—
டெட்மஸால் சோப்பு
மருந்து கடைகளில்
கிடைக்கும்.
TETMOSOL
விரைவில் நீண்ட
நிவாரணம் அளிக்கிறது-
டெட்மஸால் சோப்பு
CAS: ACCI: 6.80 TAM-C

வஸந்த்! வஸந்த்!

சுஜாதா

முன்கதைச் சுருக்கம்

வஸந்த் தன் காதலி இனியாவின் அப்பா பேராசிரியர் அப்பாத்துரையை வசீகரிக்க சரித்திரம் படிப்பது கணேஷுக்குப் பிடிக்கவில்லை. இனியாவைச் சந்திக்க வஸந்த் செல்கிறான். அவள் கண்ணீருடன் பேராசிரியரைக் காணோம் என்கிறாள். போன் வருகிறது. பேராசிரியர் தான் எழுதிய ராஜராஜன் இறுதி என்கிற கட்டுரையுடன் பல்லாவரம் வா அவசரம் என்கிறார். போகிறார்கள். பல்லாவரம் ரயில் நிலையத்தின் முன் ஒருவன் சரக்கென்று இனியாவிடமிருந்து கட்டுரையைப் பிடுங்கிக் கொண்டு ஓட வஸந்த் அவனைத் துரத்திப் பிடிக்க முடியாமல் திரும்ப வந்தால் இனியா எங்கே?... நொடித்துப் போய்த் திரும்பிவந்து கணேஷிடம் சொல்கிறான். கணேஷ் அதிகம் கவலைப்படாமல் உன் வேலையைப் பாரு என்று வெளியே செல்ல, தனியாக இருக்கும் வஸந்தின் கதவு தட்டப்படுகிறது. திறந்தால் இனியாவும் அப்பாவும்! ஆறுதலடைந்து "என்ன ஆச்சு?" என்று விசாரிக்கலானான். அவர் கணேஷ் திரும்பவந்ததும்தான் நடந்ததைச் சொல்கிறார். விநோதமான அனுபவம். பல்கலைக் கழக வாசலில் ஒரு கப்பல் கார் ஆசாமி அவரிடம் அலட்சியமாகப் பேசி பல்லாவரம் அழைத்துச் சென்றதையும் அங்கே ராஜராஜன் இறுதி எங்கிருக்கிறது என்று கேட்டதையும் பல மணி நேரம் தனியாக விட்டுவிட்டு, கடைசியில் ஏறக் குறைய பயமுறுத்தலாக அவர் எழுதிய கட்டுரையைத் தருவிக்குமாறு கேட்டதும், அவர் மகளுக்கு போன் பண்ணி வரவழைத்ததும் ரயில் நிலையத்தில் விடப்பட்டதும் மகளைத் தனியாகப் பார்த்து அவசரமாக அழைத்துச் சென்று விட்டதையும் சொல்கிறார். 'கட்டுரை எனக்கு மிக முக்கியம் அதை எப்படியாவது மீட்டுத் தரவேண்டும்' என்கிறார். கணேஷ் வஸந்தை ஏவுகிறான்.

[வாசகரே! மூன்று வாரம் மாங்கு மாங்கு எழுதியதை இப்படிச் சுருக்குவது நியாயமா? சோம்பேறித்தனம் பார்க்காமல் சென்ற வாரங்களைத் தேடி ஒரு முறை படித்து விடுங்களேன். -சுஜாதா]

4

வஸந்த் கணேஷை முறைத்தான். "என்ன பாஸ் பலி ஆடுமாதிரி என்னை அனுப்பறீங்க?"



''இதிலே உனக்குத்தானேடா சாமர்த்தியம் அதிகம்?''

''ஏன் ஸார், அந்தக் கட்டுரை ரொம்ப அவசியமோ? 'ராஜேந்திரன் இரைறு'ன்னு இன்னொன்னு எழுதிக்குங்களேன்.''

''இல்லேப்பா, ஆறு மாசம் ஆராய்ச்சி பண்ணி அதை ஆறு பக்கத்திலே சாறுப் பிழிஞ்சு எழுதியிருக்கேன். ராஜ ராஜன் இரைறு கல்வெட்டில எத்தனை விஷயம் இருக்கு தெரியுமா? புதுக்குப்புறம்னு என்னன்னு தெரியுமா?''

''புதுக, குப்புறப் படுத்துக்கறது?''

''இல்லே. காஸ்ட் ஃபார் ரிப்பேருக்கு செந்தமிழ்த் தொடர். அது அந்தக் கல்வெட்டில எழுதியிருக்கு!''

''ஏன் ஸார் நடு ராத்திரியில புதுக்குப்புறமெல்லாம். எனக்குக் கதை வசனம் புரிஞ்சுடுத்து. உங்களுக்கு அந்தக் கட்டுரை வேணும். அது நாளை உங்களை வந்தடையும். அதுக்கு முன்னாடிச் சில கேள்விகள். உங்களை கூட்டிக்கிட்டுப் போனாங்களே அதைச் சரியா சுத்தமா என்ன இடம்னு வர்ணிக்க முடியுமா?''

''பண்ணை மாதிரி இருந்தது'' என்றார் பேராசிரியர்.

''பண்ணை மாதிரின்னு என்ன பண்ணை? பாலா, கோழியா இல்லே பண்ணையார் பண்ணையா?''

''இல்லேப்பா. தனியா ஒரு நிலத்தின் நடுவில ஒரு வீடுன்னு வெச்சுக்கோயேன்!''

''வெச்சுக்கறேன் தாங்க! அப்புறம் வேற ஏதாவது உருப்படியா அடையாளம்? பல்லாவரத்தில் எங்கே?''

''மார்க்கெட் சந்தடியெல்லாம் தாண்டின பிற்பாடு கொஞ்ச தூரம் பெரு வழியில் போனோம்!''

''பெருவழி?''



''ட்ரங்க் ரோடு... ஆதாரம் கல்வெட்டு! அங்க வாசனை அடிச்சுது. அதுக்கப்புறம் வலதுபுறம் திரும்பினோம்.''

''வாசனை! என்ன வாசனை?''

''ஸ்னோ பவுடர் வாசனை இல்லே... அது.''

''ஓ. அங்கே ஏதாவது வாசனை திரவியங்கள் பாக்டரி இருக்கலாம்.''

''பாண்ட்ஸ்'' என்றான் கணேஷ். ''அங்க நாம ஒருமுறை கேஸ் சம்பந்தமாப் போயிருக்கோம் வஸந்த்!''

''ஞாபகம் இருக்கு பாஸ்! அந்தப் பேட்டையே பவுடர் போட்ட மாதிரி வாசனை தீர்த்துக் கட்டிடும்....ம்... ஸார், நீங்க சொல்லுங்க. இப்பத்தான் குண்டர்கள் ஜாக்ரஃபி புரியுது.''

''வாசனையைத் தாண்டியதும் திரும்பினோமா? அங்கிருந்து மண் பாதையில ஒரு மைல் போனதாக ஞாபகம். நடுவே ரேடியோ டிரான்ஸ்மிட்டர் மாதிரி சின்னதா ஒரு கட்டடம் வந்தது....''

''ஸிவில் விமான இலாகாவுடைய மார்க்கர் கட்டிடம்!'' என்றான் கணேஷ். ''அந்த வழியா நான் தண்டலம்னு ஒரு கிராமத்துக்குப் போயிருக்கேன்.''

''கவனிச்சிங்களா நம்ம பாஸை? ஞாபக சக்தின்னு இதானே? போன ஜன்மத்திலே யானை.''

''தனியா கட்டிடம் முன் வேலி... உள் பக்கம் பூட்டியிருந்த கேட்டு.''

''ராஜபாளையம் நாய்?''

''இல்லே. ஏன்?''

''இந்த மாதிரி பண்ணையெல்லாம் கெட்ட காரியத்துக்குன்னேவெச்சிருப்பாங்க.கையைத் தட்டினா ஃபைட்டர் ஷெட்டி வந்தானா?''

''நீ என்ன சொல்றேன்னு புரியலே.''

''நீங்க அமிதாப் பச்சன் படம் பார்க்கிற தில்லையா? ஒரு மொட்டைத் தலை வருவானே!''

''நான் கடைசியாப் பார்த்த படம்...''

''இருங்க நான் சொல்றேன். ராஜ ராஜ சோழன்!''

''கரெக்ட்! அதுக்கப்பறம்....''

''படம் பார்க்கிறதையே நிறுத்திட்டீங்க! சரியா?''

''சரி'' என்று சிரித்தார் பேராசிரியர்.

''சரி. நீங்க அடையாளம் சொல்லிட்டீங்க. நாளைக்கு வஸந்த் போய்ப் பாக்கி வேலையைக் கவனிச்சுப்பான்'' என்றான் கணேஷ்.

வஸந்த், ''சார் நான் அந்தக் கட்டுரையை மீட்டுக் கொண்டு வந்தா நீங்க என்ன தருவீங்க?'' என்றான்.

''எது வேணா கேள். தரேன்.''


வஸந்த் இனியாவைப் பார்த்தான். இனியா அப்பாவுக்குத் தெரியாமல் இப்போது வேண்டாம் என்று அபிநயித்தாள்.

''நீங்க என்னை உங்க மாணாக்கனா ஏத்துக்கிட்டு உங்க வீட்டில வந்து சரித்திர பாடம் கத்துக்க அனுமதிப்பீங்களா? ஸார்?''

''முடியாது!''

''ஏன்?''

''சரித்திரப் பாடமெல்லாம் வேணும்னா யுனிவர்ஸிட்டிக்கு வரணும்.''



எல்லா
வயதினருக்கும்
எல்லா
தேவைகளுக்கும்
கைத்தறி!

கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி


கோ - ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையம்
4, வெங்கடேச அக்ரகாரம்,
மயிலை, சென்னை - 600 004
அருகில் உள்ள
விற்பனை நிலையங்களுக்கு
வருகை தாரீர்!

நாடெங்கும் புகழ் பெற்ற **சாலிடெர்** டெலிவிஷனுக்கு

தமிழகத்தின் தனிப்புகழ் பெற்ற

சூப்பர் டீலர்

ஏஜென்ஸீஸ் &
ஏஜென்ஸீஸ் A/C



18, தெற்கு உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை-17.
போன்: 440004/440725

Solidaire
SOLID STATE TV - that seldom fails!

"சாலிடெர்" டிவிக்குரிய அனைத்து துணை சாதனங்களையும், மிக நியாயமான விலையில் தருகிறோம். இவைகளின் உற்பத்தி யாளர்களாகவோ அல்லது டீலர்களாகவோ நாங்களே இருப்பதால் இவை தரத்தில் மிக உயர்ந்தவை.

''போக்கடா! உங்க வீட்டில வந்து கத்துக்கும்படியா எதுவும் சின்ன வேலை இல்லையா? தோட்டத்துக்குத் தண்ணி ஊத்தறேன். இஸ்திரி போடறேன்.''

''அதுக்கெல்லாம் வேலைக்காரன் இருக்கான்.''

''எதுக்குச் சொல்ல வரேன்னு உங்கமாதிரி சரித்திரப் பேராசிரியர் கிட்டே ஏதாவது ஒரு சேவை செய்யற பாக்கியத்தை எனக்குக் கொடுங்க ஸார்...'' என்றான்.

''பார்க்கலாம். நீ முதல்லே கட்டுரையைக் கொண்டு வா! அப்ப நான் வரட்டுமா? லேட்டாயிடுச்சு. வா போன்னு போகலாம்.''

''பை கணேஷ்! பை வஸந்த்! ஸ்லீப் வெல்!'' என்று இனியா ஒரு புன்னகையை பறித்துக் கொடுத்து விட்டுப் புறப்பட்டாள்.



உறுப்பினர்: சங்கக் கணக்கில் துண்டு 3.50 என்று எழுதியிருக்கிறதே. சங்கத்திற்கு எதற்கு துண்டு?

தலைவர்: சங்கத்தில் கடன் வாங்கி, கொடுக்காதவர்களின் கழுத்தில் போட்டுக் கேட்பதற்கு..

— எஸ். நாகராஜன்

''ஸ்லீப் வெல்லாவது... ஹூம்!
மயக்கத்தைத் தந்தவளே — ஒரு
மருந்து சொல்லிப் போனாலென்ன?''
என்றான் வஸந்த்.

''சரியான ஐஸ் ஃபாக்டரிடா நீ.''

''என்ன செய்யறது பாஸ். பேராசிரியர் பேரா-ஆசிரியரா இருக்காரே. ம்ஹூம்... கிட்ட வரவிட மாட்டார் போலிருக்கே! ஒரு எஸ்கிமோகிட்ட ரெஃப்ரிஜிரேட்டர் வித்துறலாம் போலிருக்கே!''

கணேஷ் மறுபடி கோர்ட் கேஸில் ஆழ்ந்து விட்டான். வஸந்த் கடிகாரத்தைத் திருகி அலாரம் வைத்தான். ''காலேல எழுந்து ஓடணும். பல்லாவரத்துக்கு'' என்றான்.

''காரை எடுத்துக்கிட்டுப் போயிடாதே. பஸ்ல போ! இல்லே, ட்ரெயின்ல போ!''

மறுதினம் காலை வஸந்த் குமார் ஏழரை மணிக்குப் புறப்பட்டுப் பல்லாவரம் வரை மின்சார ரயிலில் சென்று அங்கிருந்து நடந்து நடந்து இன்னும் கொஞ்சம் நடந்து ஃபாக்டரி வாசனையைக் கடந்து மண் ரோட்டில் சென்றான். சொல்லி வைத்தாற்போல் அந்த டிரான்ஸ்மிட்டர் கட்டிடம் வந்தது. அங்கிருந்து சற்றுத் தூரத்திலேயே பேராசிரியர் குறிப்பிட்ட அடையாளங்களில் அந்தக் கட்டிடம் தெரிந்தது. வேலி தடுத்துப் பூட்டியிருந்தது. வெற்று நிலம். பின்னணியில் தென்னந் தோப்பு. நிழலில் ஒரு அமைதியான ஓடு வேய்ந்த வீடு. புறத் திண்ணையில் குண்டான தூண்கள், மரக் கதவு. மாடி. ஆள் நடமாட்டம் இல்லை.

வஸந்த் வேலியோரக் கதவுகளைச் சப்தித்தான். ''ஹலோ! யார் உள்ளே கதவைத் திறங்க'' என்றான்.

பதில் இல்லை. மேலே ஒரு ஏர்பஸ் அலறிக் கொண்டிருந்தது. அதன் நிழல் சடுதியில் நீந்திவிட்டு மறைந்தது. வஸந்த் யோசித்தான். வேலிக் கம்பி மேல் கால் வைத்தான். ஒரு எவ்வு. உட்புறம் வந்து விட்டான். நடந்தான். அந்த வீட்டு வாசலை அடைந்தான். கதவை மெல்லத் தட்டினான். ம்ஹூம். சந்தடி இல்லை. தூரத்தில் ரன் வேயில் இறங்கி விட்ட விமானத்தின் இரைப்பாறல் சப்தம் மட்டும் கேட்டது. வஸந்த் கதவைத் தள்ளிப் பார்த்தான். திறந்து கொண்டது. உள்ளே பாதி இருட்டாக இருந்தது. பழைய காலத்து ஃபர்னிச்சர்களுடன் ஒரு லோபா கம் பெட் இருந்தது. வாரப் பத்திரிகைகள் அடுக்கி யிருந்தன. டெலிபோன் ரிங்கிக் கொண்டிருந்தது. வஸந்த் அதை எடுத்து ''ஹலோ!'' என்றான்.

''யாரு ராமலிங்கமா?''

''ம்.''

''அவங்கள்ளாம் கிளம்பிட்டாங்களா?''

''ம்.''

''வான் அனுப்பிடவா?''

''ம்.''

''கிளவனே என்ன செஞ்சீங்க?''

''ம்.''

''என்னய்யா உம்? கிளவனே என்ன செஞ்சீங்க?''

வஸந்த் படக்கென்று வைத்து விட்டான். அங்கிருந்து நடந்தான். டெலிபோன் மறுபடி அடிக்கத் துவங்கியது. கவனிக்காமல் சுற்று முற்றும் சோதிக்க ஆரம்பித்தான். வீட்டில் யாரும் இல்லை என்று அவன் புலனறிவுக்குத் தெரிந்தது. மாடிப் படி தெரிந்தது. அங்கே போக விரும்பினான். அதே சமயம் இந்தியன் பீனல் கோடின் பதினேழாம் அத்தியாயம் செக்‌ஷன் 449லிருந்து 452 வரை ஞாபகம் வந்தது. House trespass in order to commit an offence. இப்போது மாட்டிக் கொண்டால் நேராக காவல் நிலையம். டெலிபோன் ஓய்ந்தது. அலமாரியில் பழைய வெள்ளிக் கோப்பைகள் இருந்தன. சந்தன யானை மரக் கட்டையை நகர்த்த அருகே தந்த நங்கை, கொக்கு, பிரில் இங்க் பாட்டில் ஏகப்பட்ட மருந்துப் பாட்டில்கள் கீழ்த் தட்டில் சென்ற மாதத்து தினசரி-நாளிதழ்கள். மலையாளப் பத்திரிகைகள்.

அந்தக் குப்பையில் ராஜ ராஜன் இரைற்றை எங்கே தேடுவது? மெல்லப் புரட்டிப் பார்த்தான். எதிர் அலமாரியைத் திறந்து பார்த்....

வாயிற்புறம் கார் கதவு சாத்தப்படும் சப்தம் கேட்டது. கேட் திறக்கப்படும் சப்தம் தொடர்ந்தது. அதன் பின் செருப்புக் கால்களின் சரக் சரக்.

வஸந்த்மறையஇடம்தேடிஅகப்படாமலுடனே மாடிக்குச் சென்றான்.

மரக் கதவு எண்ணெய் எங்கே என்று திறந்தது. இருவர் பேச்சுக் குரல் கேட்டது.

மாடியில் அதிகம் புழக்கம் இருந்ததாகத் தெரியவில்லை.

ஓட்டுக்கு மத்தியில் பதிந்திருந்த கண்ணாடி ஓடு ஒரு வெளிச்ச அருவி அமைத்திருந்தது. அங்கு மிங்கும் சாமான்கள் சிதறியிருந்தன. மண் வெட்டிக்குப் பக்கத்தில் நடை வண்டிக்குப் பக்கத்தில் பழைய ரேடியோவுக்குப் பக்கத்தில் அண்டா. வஸந்த் கவனமாக இடை நடந்தான். வெளியே மொட்டை மாடிக்குச் செல்லும் கதவில் பூட்டுத் தொங்கியது. அதை இலேசாக ஆட்டிப் பார்த்தான். அரை மணிக்குள் திறக்க முடியாது என்று தோன்றியது. ஜன்னல்கள் மூடியிருந்தன.

பைத்தியக்காரத்தனத்தின் சிகரம். எல்லாமே தப்பு. வேலி தாண்டியது, மரக் கதவைத் திறந்தது. டெலிபோனை எடுத்துப் பதிலளித்தது. பார்த்தது, மாடி ஏறியது இப்போது வஸந்தின் ஒரே நம்பிக்கை அவர்கள் மாடிக்கு வரமாட்டாமல் போய்விடுவார்கள் என்பதே. சட்! என்ன தமிழ்! 'வரமாட்டாமல்' நெஞ்சம் பயத்தில் உளறுகிறது கீழே பேச்சுக் குரல் கேட்டது.

''கிளம்பி விருப்பாங்க ராமலிங்கம்!'' அந்தக் குரலுக்கு நிறைய சக்தி இருந்தது. முப்பத்திச் சொச்சம் வயசு. வெற்று குண்டன். குரலே வஸந்த் அனுமானித்தான்.

''இல்லியே வான் வரலியே!''

''பெரிய வண்டியிலே போயிருப்பாங்க!''

''இல்லடா! டெலிபோன் வரும். காத்திருக்கச் சொன்னாங்க!''

டெலிபோன்! இப்போது மறுபடி டெலிபோன் வந்தால்! வஸந்துக்குச் சின்னச் சின்னதாகப் பதினைந்து ஊசிகள் வயிற்றுக்குள் விளையாடின.

டெலிபோன் ஒலித்தது.

''அல்லோ!''

''......''

''சொல்லு.ராமலிங்கம்தான் பேசறேன்.''

''செத்த முன்னாடியா? எப்ப?''

''பத்து நிமிஷமா? ம்ஹூம். நான் இல்லையே!''

''இந்த நம்பர்தான் கூப்பிட்டியா?''

''இல்லேப்பா.வீட்டில ஒருத்தரும் இல்லே.''

''பதில் சொன்னானா?...வெச்சுட்டானா!..''

வஸந்த் மறைவதற்கு ஏதாவது அழுக்குக் கூடை அகப்படுமா என்று சுற்றிலும் பார்த்தான்.

''என்ன ராமலிங்கம்?''

''கொஞ்ச நேரம் முன்னாடி பெரியசாமி இங்க டெலிபோன் செஞ்சானாம். யாரோ போனை எடுத்துப் பேசினாங்களாம்!''

''என்னது? இங்க யார் வர முடியும்? கேட் பூட்டி இருந்ததே?''

''மரக் கதவு திறந்திருந்ததே! யாரா இருக்கும்?''

''ராங் நம்பரா?''

''இல்லேங்கறான்! நீ எதுக்கும் ஒரு காரியம் பண்ணு. வீட்டை ஒரு முறை சோதனை போட்டுரு. எவனாவது உள்ளே வந்திருக்கானான்னு பாத்துடு!''

''இந்த அத்துவானத்துக்கு எவன் வருவான்?''

''சொல்ல முடியாது பாரு. நல்லா எல்லா ரூம்லேயும் தேடிடு!''

வஸந்த், 'டேய்! மாடி வேண்டான்டா மாடி வேண்டான்டா' என்று மனசில் பிரார்த்தித்தான்.

சற்று நேரம் மௌனம். டெலிபோன் டயல் சுழற்றப்படும் கிர்ரக் கிர்ரக்.

''பெரியசாமியா?ராமலிங்கம் பேசறேன். வான் அனுப்பிச்சுட்டியா? சொல்லவே இல்லியே!''

''பத்து மணிக்குள்ள புறப்பட்டு வந்தூர்றேன். சிங்காரத்தையும் கூட்டு வெச்சுக்க.''

ராமலிங்கம், பெரியசாமி, சிங்காரம்... என்ன பேசுகிறார்கள்? எதைப் பற்றிப் பேசுகிறார்கள்?

''டீஸல் நிறையவே போட்டுக்கிட்டு வந்துரு. ஏ.ஆர்.வி. பங்க்லே போட்டுக்க. நாப்பது அம்பது மைல் போகணும். பாரு!..' தேடிக்கிட்டிருக்கான்... தேடிக் கிட்டிருக்கான்.!''

''வந்துரு!''

டெலிபோன் வைக்கப்பட்டு ''என்னடா?'' என்றான். ''முழுக்கப் பார்த்துட்டேன் ராமலிங்கம் ஆள் ஒருத்தரும் இல்லே. ராங் நம்பராத்தான் இருக்கும்.''

''எதுக்கும் மாடில ஒரு முறை பாத்துடு!'' என்றான் நாசமாப் போற ராமலி.........

(தொடரும்)

இஸ்ரேல் நாட்டு அரசியல் சட்டத்தின்படி ஜனாதிபதி டாக்டர் விஸ்மனின் அதிகாரங்கள் கம்மியாகி விட்டிருந்த நேரம்.

ஒருமுறை அவர், ராணுவ அணிவகுப்பொன்றைப் பார்த்துக் கொண்டிருந்த போது, அவருடைய கைக்குட்டை கீழே விழுந்தது.

அதை ஒரு ராணுவ அதிகாரி எடுத்துக் கொடுத்தார். ''நன்றி, நன்றி! ரொம்ப, ரொம்ப நன்றி!'' என்று கூறினார் ஜனாதிபதி. ராணுவ அதிகாரி திகைத்துப்போய் ''ஒரு சின்ன விஷயத்திற்கு இவ்வளவு நன்றி சொல்கிறீர்களே!'' என்றார்.

''சின்ன விஷயமா? இப்போதெல்லாம் நான் மூக்கை நுழைக்கக் கூடிய ஒரே இடம் இந்தக் கைக்குட்டைதானே!'' என்றாராம் ஜனாதிபதி!

—எஸ். ராஜகணேஷ்



பள்ளிகள் செய்திகள்



டாக்டர் பழனியப்பன்

சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியின் தாய் சேய் நல மருத்துவர் டாக்டர் பழனியப்பன், பெரிய நிலைமையைப் பற்றி ஆராய்ச்சி செய்திருக்கிறார்.

ஒருத்தி கருவுற்றிருக்கிறாளா இல்லையா என்று கண்டு பிடிக்கச் சிறுநீரைச் சோதிப்பதுண்டு. இதில் நிலையில்லை. ஆனால் வேறு ஒரு சோதனை முறையில் பெண்ணுக்குத் தரப்படும் ஆர்மோன் தயாரிப்பு மருந்துகள் வயிற்றில் வளரும் குழந்தைக்குப் பெருந்தீங்கு விளைவிக்கின்றன.

Oestrogen Progesteron போன்ற இதே ஆர்மோன் தயாரிப்புக்கள் கருச் சிதைவை உண்டாக்கவும் பயன்படுத்தப் படுகின்றன. பல சமயங்களில் நோக்கம் நிறைவேறாமல் போகிறது. அபார்ஷன் முயற்சி தோல்வியுற்றுக் கரு வளர்கிறது. ஆனால் மருந்து கருவைப் பாதிக்கிறது. குழந்தை குறைபாடுள்ளதாகப் பிறக்கிறது. பிளவுபட்ட தாடை, உதடு, போன்ற குறைபாடுகள் குழந்தைக்குப் பிறக்கும் போதே இருக்கிறது.

பத்து மருத்துவர்களின் உதவியுடன் 160 பெண்களைச் சோதனை செய்து பார்த்த பிறகு சிகப்புக் கொடி காட்டி யிருக்கிறார் பழனியப்பன். லட்சக்கணக்கான பெண்கள் கருவுற்றிருக்கிறோமா என்று அறியவும் கருச் சிதைவுக்கும் இந்த மருந்துகளை உபயோகிக்கிறார்கள். இம்மருந்துகள் இடையில் தடை செய்யப்பட்ட போதிலும் தயாரிப்பாளர்கள் இவற்றை வேறு பெயரில் விநியோகிக்கிறார்கள் என்று எச்சரிக்கிறார் பழனியப்பன்.

—ஜெ. பாரத்செல்வன்



டாக்டர் ரஷீத்

பெட்ரோல் விலை உயர்வு காரணமாய் லிட்டருக்கு எவ்வளவு கிலோ மீட்டர் ஓடும் என்பது இப்போது ரொம்ப முக்கியமாகி விட்டது. அமெரிக்க மோட்டார்கார் தயாரிப்பாளர்கள் எடை குறைவான காரைத் தயாரிக்க விரும்புகிறார்கள். —அதிக ''மைலேஜ்'' கிடைக்கும் என்பதால். ஆனால் எடை குறைந்தால் எஞ்சின் உறுதியும் அதன் வளைந்து கொடுக்கும் தன்மையும் பாதிக்கப்படுகிறது. விபத்து என்றால் கார் பப்படம்.

புதிய டுவல் பேஸ் எஃகு இலேசாக இருப்பினும் உறுதியானது. எந்த உருவிலும் வளைக்க லகுவானது. நீண்ட கால ஆராய்ச்சிக்குப் பின் இதைக் கண்டுபிடித்தவர் ஜெனரல் மோட்டார் ஆராய்ச்சிப் பிரிவில் பணியாற்றும் ரஷீத். இவர் வேலூரில் பிறந்து கிண்டி பொறி இயல் கல்லூரியில் பயின்று பிறகு அமெரிக்கா சென்றவர்.

—நன்றி: ஸ்பிக்ஸோனியன்

சோ

துக்ளக் பத்திரிகை ஆசிரியர் திரு சோ, மனித உரிமைகளுக்கான மக்கள் கழகத்தின் தேசியக் கமிட்டியில் பங்கேற்க இருக்கிறார். (People'sunion for civil liberties, P. U. C. L.) இதற்கான அழைப்பு அவருக்கு வந்திருக்கிறது.

நீதிபதி திரு தார்குண்டே அவர்களைத் தலைவராகவும், திரு அருண் சோரி (ஆசிரியர், இந்தியன் எக்ஸ்பிரஸ்) அவர்களை செயலாளராகவும் கொண்ட அமைப்பு இது. இதன் நோக்கங்கள் தங்கள் உரிமைகள் பற்றிய விழிப்பு உணர்ச்சியை மக்களிடையே ஏற்படுத்துவது: பொது மக்களுக்கு இலவச சட்ட உதவி அளிப்பது: அவ்வப்போது ஏற்படும் சட்ட திருத்தங்களினால் விளையும் தன்மை தீமைகளை மக்களுக்கு விளக்குவது.

—''சிக்கி''





ஒருதலை ராகம் ரூபா

எம்மதமும் சம்மதம் என்று கூறுவதோடு செயலிலும் காண்பிப்பவர் ரூபாவாகத்தான் இருக்கவேண்டும். நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவர் பல்லாவரத்தின் அருகில் உள்ள திருசூலம் திரிபுர சுந்தரி அம்மன் கோயிலுக்குச் செல்கிறார். அதோடு ரூபா நிற்கவில்லை! ஒவ்வொரு வியாழக் கிழமையும் சென்னை அண்ணா சாலையில் உள்ள மசூதிக்கும், ஞாயிற்றுக் கிழமைகளில் மாதா கோயிலுக்கும் செல்கிறார்.



லஞ்சம் வாழ வேண்டும்

ஆர்.எஸ்.மணி

காலிங் பெல் ஓசை கேட்டது. கதவைத் திறந்தேன். கையில் அழுக்கேறியிருந்த கனமான கணக்குப் புத்தகத்துடன் கட்டை குட்டையாக ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

''நான் பில் கலெக்டர். ரெகவரி ஆபீசிலிருந்து அர்பன் லாண்டு டாக்ஸ் விஷயமாக வந்திருக்கிறேன். — டிமாண்டு நோட்டீஸை வாங்கமாட்டேன் என்று சொன்னீர்களாமே'' என்றான் கோபமான குரலில்.

''நான் வரி கொடுக்க வேண்டியிருந்தால் தானே நோட்டீஸை வாங்க வேண்டும்?''

பில் கலெக்டர் தம் கையிலிருந்த கணக்குப் புத்தகத்தைப் பிரித்தார். மளமளவென்று சில ஏடுகளைப் புரட்டினார்.

''உங்கள் பெயர் கே.டி.ராஜன்தானே?''

''ஆமாம்.''

''இது என். எம். தெருதானே?''

''ஆமாம்.''

''இந்த வீட்டு நம்பர் ஒன்பதுதானே?''

''ஆமாம்.''

''பின்னே என்ன சார்? இதோ பாருங்க ரிகார்டை — ஐயாயிரத்து எண்ணூத்து முப்பது ரூபாய் கட்ட வேண்டும் — அஞ்சு பசலி வருஷத்துப் பாக்கி.''

''இந்த இடம் எனக்குச் சொந்தமில்லே. நான் வாடகைக்கு இருக்கிறேன். உங்கள் ரிகார்டில் ஏதோ தப்பு இருக்கிறது.''

''இதையெல்லாம் என்னிடம் சொல்லிப் பிரயோசனமில்லே. வரியைக் கட்டிவிட்டு கோர்ட்டுக்குப் போங்கள்.''

''நீங்கள் தப்புச் செய்ய வேண்டியது! நாங்கள் கோர்ட்டு கேஸ்னு அலைய வேண்டியது — நன்றாக இருக்கிறதே உங்கள் நியாயம்!''

''மூணு மாசத்துக்கு முந்தி இப்படித்தான் ஒருத்தருக்குத் தப்பா ஆர்டர்போட்டு விட்டார்கள். என் கிட்டே வந்து அழுதார். 'நம்மைக் கவனியுங்கள். நான் வழி செய்கிறேன்' என்றேன். கவனித்தார். ஆர்டர் கான்சல் ஆகி விட்டது.''

''கவனிப்பதா? லஞ்சமா? அதற்குத்தான் இப்படி அலைகிறீர்களா?''

''சார், சூடாப் பேசாதீங்க. விடுங்கள் — இந்தாங்க ரெண்டாம் நம்பர் நோட்டீஸ். தாசில்தார் கொடுக்கச் சொன்னார்.''

ஜப்தி நடவடிக்கை எடுப்பதற்கு முன்பு கொடுக்க வேண்டிய கடைசி நோட்டீஸை என்னிடம் கொடுத்து விட்டுப் போய்விட்டார் அவர்.

என் ஆபீசிலிருந்து நகர்ப்புற வரி ஆபீசுக்குப் போன் செய்தேன்.

''எனக்குச் சொத்தே இல்லே. வரி கேட்டிருக்கிறீர்களே. நான் ஒரு குடித்தனக்காரன். நீங்கள் குறிப்பிட்டிருக்கும் விலாசத்தில் நான் குடியிருக்கிறேன்.''

''நீங்கள் வரிப் பணத்தைக் கட்டிவிட்டுச் சொந்தக்காரரிடமிருந்து வசூல் செய்து கொள்ளுங்கள்.''

''எனக்கு என்ன தலையெழுத்தா?''

''அதுதான் சட்டம்.''

''நீங்கள் குறிப்பிட்டிருக்கும் அளவுக்கு அந்த இடத்தில் அவ்வளவு பெரிய மனை இல்லே. ரிக்கார்டுகளைப் பார்த்து ஒழுங்காக வேலை செய்யுங்கள்.''

''அது எங்களுக்குத் தெரியும்.'' — பட்டென்று ரிசீவரை வைத்து விட்டார் பேசிக் கொண்டிருந்தவர்.

ஒரு மாதம் கழித்துப் பணத்தை உடனடியாகக் கட்டச் சொல்லி ரிமைண்டர் வந்தது. அதை வக்கீலிடம் எடுத்துப் போனேன்.

வக்கீல் நகர்ப்புற நிலவரி சம்பந்தமான சட்டப் புத்தகங்களை எடுத்துப் புரட்டினார்.

''சட்டம் உங்களுக்குச் சாதகமாக இல்லையே'' என்றார் மிகுந்த கவலையுடன்.

''எனக்குச் சொத்தே இல்லையே சார்.''

''இருக்கலாம். அஸெஸ்மெண்ட் ஆர்டர் வந்த ஒரு மாதத்துக்குள் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். டைம் பார் ஆகிவிட்டது. ஆரம்பத்திலேயே நேரில் பார்த்துக் கவனிக்க வேண்டியவர்களைக் கவனித்திருந்தால் அது அப்போதே கான்சலாகி இருக்கும். பேசாமல் பணத்தைக் கட்டி விட்டு அப்பீல் செய்யுங்கள் சார்!''

''சுமார் ஆறாயிரம் ரூபாய் கட்ட வேண்டுமே. அவ்வளவு பணத்துக்கு நான் எங்கே சார் போவேன்? வேறு வழியே இல்லையா?''

''ஒரே வழிதான் இருக்கிறது. கமிஷனர் ஒருவரால்தான் உங்களுக்கு உதவி செய்ய முடியும். அவருக்கு நிறைய அதிகாரம் இருக்கிறது. அவரைப்பார்த்து ஸ்டே ஆர்டர் கொடுக்குமாறு மனுச் செய்யுங்கள். உங்களுடையது மிகவும் நியாயமான கேஸ்'' என்றார் வக்கீல்.

கமிஷனர் ஆபீஸில் அவர் மூன்றாவது மாடியில் இருப்பதாகத் தெரிய வந்தது. என் குறையைச் சுருக்கமாகச் சொல்லி மனுவை அவரிடம் கொடுத்தேன்.

''நோட்டீஸ் வந்த உடனேயே இந்த விஷயத்தை வரி விதிக்கும் ஆபீசுக்குத் தெரிவித்து இருக்கலாமே?''

''அவர்களாகவே தப்பைத் திருத்திக் கொள்வார்கள் என்று எண்ணி இருந்தேன்.''

''உங்கள் பெயர், விலாசம் எல்லாம் சரியாகத்தானே இருக்கிறது?''

''ஆமாம் சார். ஆனால் நான் இருப்பது வாடகை வீடு. சொத்துக்குச் சொந்தக்காரரின் பெயரும் வேறு — அதோடு நான் இருக்கும் இடத்தின் விஸ்தீரணம் இரண்டு மனைக்கும் குறைவு. வரி விதிக்க வேண்டிய அவசியமே இல்லை — ஜப்தி என்ற பயமுறுத்தல் வந்திருக்கிறது.''

கமிஷனர் என் மனுவின் மீது ஏதோ எழுதினார்.

''சொத்து சம்பந்தமாக மறு விசாரணை செய்து முடிக்கும் வரை ஸ்டே ஆர்டர் கொடுத்திருக்கிறேன். கீழே போய்ப் பாருங்கள்'' என்று கூறியவாறு அதை ஒரு பைலினுள் வைத்து மறு பக்கம் இருந்த டிரேயில் தூக்கிப் போட்டார்.

எனக்கு விடுதலை கிடைத்தது போல் இருந்தது. பெரிய நெருக்கடியிலிருந்து தப்பி விட்டது போன்ற உணர்வு ஏற்பட்டது. ஓட்டமும் நடையுமாகப் படிக்கட்டுக்களில் கீழே இறங்கினேன்.

''கமிஷனர் ஸ்டே கொடுத்து விட்டார். சீக்கிரம் ஆர்டரைக் கொடுங்கள் சார். ரொம்ப அவசரம்'' என்றேன் சம்பந்தப்பட்ட குமாஸ்தாவிடம்.

''இது என்ன மளிகைக் கடையா? அல்லது ஜவுளிக் கடையா? கேட்டவுடன் எடுத்துக் கொடுப்பதற்கு? மேலதிகாரியைப் பாருங்கள்'' என்றார் அவர். அவரிடம் ஓடினேன்.

''பைல் என்னிடம் வரவில்லை. எது வந்தாலும் என்னிடம் ஐந்து நிமிடத்துக்கு மேல் இருக்காது. செக்ரட்டரி ரூமில் இருக்கும்'' என்றார் அவர்.

இப்படிப் பல அதிகாரிகளின் கைவிரிப்பு!

என்ன செய்வதென்று புரியாமல் தவித்தவாறு வராந்தாவின் பக்கம் வந்து நின்றேன். அப்பொழுது நாகலிங்கம் என்னைத் தேடிக் கொண்டு ஓடி வந்தான். என் வீட்டில் தோட்ட வேலை செய்பவன் அவன். அவனைப் பார்த்தவுடன் எனக்குப் பகீரென்றது.

''நம்ப வீட்டு வாசலிலே ஜீப் வந்து நின்னுக்கிட்டிருக்குது. பில் கலெக்டர், தாசில்தார், இன்னும் ரெண்டு மூணு பேர் வந்திருக்காங்க. வீட்டிலே இருக்கிற சாமான்களை ஜப்தி செய்யப் போறாங்களாம். அம்மா உங்களை உடனே ஆர்டரோட வரச் சொன்னாங்க. பாவம் அழுதுக்கிட்டிருக்காங்க'' என்றான்.


என் உள்ளத் துடிப்பு உயர்ந்து உத்வேகம் பிறந்தது. கமிஷனரைச் சந்தித்து விஷயத்தைச் சொல்லி முறையிடுவது என்று மூன்றாவது மாடிக்கு ஓடினேன். நாகலிங்கமும் பரபரப்புடன் என் பின்னாலேயே ஓடி வந்தான். நாங்கள் கமிஷனரின் அறையின் அருகில் போவதற்கும் உள்ளேயிருந்து பியூன் வெளியே வருவதற்கும் சரியாக இருந்தது.

''தங்கராஜு! நீ இங்கேதான் வேலை செய்யறயா? நான் ஐயா வீட்டிலே தோட்ட வேலை பார்க்கறேன். இவருக்குச்



கராத்தே பயிற்சி 21

பயிற்சியாளர்: டோனி பொன்னையா
சித்திரம்: ...
படம்: உத்ரா
தயாரிப்பு: குண்டுமணி





கராத்தேயில் பெண்கள்

கராத்தே கலையைப் பெண்களும் மிக ஆர்வமுடன் கற்றுக்கொள்ள முன் வந்துள்ளார்கள். இக் காலத்தில் இவ்வித தற்காப்புப் பயிற்சி தங்களுக்கும் அவசியம் தேவை என்பதை உணர்ந்தே அவர்கள் கராத்தே கற்க முன் வருகிறார்கள். திருமணம் ஆனவர்களும் சிறுமிகளும் போட்டி போட்டுக்கொண்டு இந்தத் தற்காப்புக் கலையைப் பயில்கிறார்கள்.

பெண்களைவிடப் பலம் வாய்ந்த ஆண்களையும் கராத்தே பயிற்சி மூலம் தாக்கி வீழ்த்த முடியும் என்பதைக் கராத்தே வீராங்கனைகள் நிரூபித்து வருகிறார்கள்.

விஜயவாடாவில் எங்கள் பள்ளியில் கராத்தே புதிதாகக் கற்றுக்கொண்ட ஒரு பெண்மணி ஒரு முரடனைத் தாக்கி வீழ்த்திய சம்பவம் ஆந்திர மாநிலத்தில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியது.

படத்தில் ஒரு பெண்மணி எதிரியைத் தாக்கிக் கீழே தள்ளுவதைப் பார்க்கலாம்.

சொத்தே இல்லே. வரி போட்டிருக்காங்க. சாமான்களை ஜப்தி செய்யப் போறேன்னு வீட்டு வாசல்லே வந்து நின்னுக்கிட்டிருக்காங்க. ஏதாவது வழிபண்ணுப்பா'' என்றான் நாகலிங்கம்.

''நீ நம்ப ஊர்க்காரனாச்சே! உதவி செய்யாம விட்டுடுவேனா? — வேறே யாராவது இருந்தா இத்தனை நேரம் ஆர்டரை வாங்கிட்டுப் போயிருப்பாங்க. ஐயா புதுசு போல இருக்கு. அதான் தவிக்கிறாரு — அங்கங்கே அப்படி அப்படிக் கவனிச்சிருந்தா வேலை எப்பவோ முடிஞ்சு போயிருக்கும்.''

''லஞ்சமா! அதுதான் நடக்காது. ஒரு நயா பைசா கொடுக்க மாட்டேன்'' என்று கத்தினேன்.

''ஐயா விஷயம் கழுத்துக்கு வந்திடுச்சு. இதிலே இருந்து தப்ப வழி பாருங்க. அம்மா பணம் கொடுத்து அனுப்பியிருக்காங்க. தங்கராசு இதை வச்சிக்கிட்டுச் சீக்கிரம் காரியத்தை முடிப்பா!'' மாலினி கொடுத்து அனுப்பி யிருந்த கவரை எடுத்தான். அதிலிருந்து ஒரு பத்து ரூபாய் நோட்டை உருவித் தங்கராசுவின் சட்டைப் பையில் ''சருக்'' கென்று திணித்தான்.

''நாகலிங்கம், உனக்காகச் செய்யறேன். ஐயாவை அழைச்சிக்கிட்டுக் கீழே போய் இரு நான் பின்னாலேயே வரேன்'' என்று கூறிவிட்டு உள்ளே சென்றான் அவன்.

நாகலிங்கம் பரபரவென்று என்னைப் பிடித்து இழுத்துக் கொண்டு கீழே வந்தான். கால் மணி நேரம் கழித்துத் தங்கராஜு வெள்ளை உடுப்பு அணிந்த ஒருவனை அழைத்து வந்தான்.

''நீங்க ரொம்ப பேஜாரிலே இருக்கீங்கன்னு தங்கராஜு சொன்னான். இல்லேன்னா நான் வெளியே வரவே மாட்டேன். அந்த மாடிப் படிக்கட்டுக்குப் பின்னாலே போய் நின்னுக்கிட்டிருங்க. பைலை அனுப்பிவிட்டு நான்வந்து சொல்றேன்'' என்றான் மாரிசாமி!

என் நேர்மைக் கொள்கைக்கு மற்றொரு அடி. இனிமேல் அது பிழைக்கவா போகிறது?

லஞ்சம் கொடுக்க ஆரம்பித்தவுடன் எவ்வளவு வேகமாகப் பைல் நகர ஆரம்பிக்கின்றது! இந்த சூட்சமத்தை ஏற்கனவே கையாளாமல் போய்விட்டோமே! நேர்மை, ஒழுக்கம் என்பதெல்லாம் எவ்வளவு பைத்தியக்காரத்தனம்!

மூன்று நிமிஷம் கூட முழுமையாக முடியவில்லை. மேலதிகாரி வேகமாக என் அருகில் வந்தார்.

''மாரிசாமி ரொம்ப தூரம் சொன்னான். நானே பொறுப்பு எடுத்துக்கிட்டு ஆர்டரை ரெடி செய்தேன். கஷ்டப்படறவங்களுக்கு உதவி செய்யணும். அதுதான் சார் மனிதத் தன்மை! இந்தாங்க ஆர்டர்!'' ஒரு பழுப்பு நிறக் காகிதத்தை என்னிடம் கொடுத்துவிட்டுச் சற்றுத் தயக்கத்துடன் நின்றார்.

கொடுத்த பணம் போதவில்லை. இது தானே அதற்கு அர்த்தம்?

மாலினி கொடுத்து அனுப்பியிருந்த மீதி பணத்தை அப்படியே அவருடைய



உங்கள் கேசம் அடர்த்தியின்றி சக்தியின்றி இருக்கிறதா? உங்கள் கேசத்தைப் பக்குவப்படுத்தி அழகையும் ஆரோக்கியத்தையும் அளிக்கிறது...
செழுமையான புரதப்போஷாக்கு நிறைந்த
ஹேலோ எக் ஷாம்பூ
ஊட்டம் குறைந்த நிலையில் உங்கள் கேசம் அடர்த்தியின்றியும், சக்தியின்றியும், ஆரோக்கியமின்றியும் காணப்படுகிறது.
பட்டுப்போன்ற, பொன் நிறமுள்ள வழவழப்பான ஹேலோ எக் ஷாம்பூ செழுமையான புரத ஊட்டம் நிறைந்த உத்தியின் மூலம் உங்கள் கேசத்தை சீராகப் படியவைத்து அதற்குத் தேவையான எல்லா ஊட்டங்களையும் அளிக்கிறது. உங்கள் கேசம் அழகாக ஆரோக்கியமாக, அடர்த்தியாகத் திகழ்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூவின் செழுமையான நுரைவளம் உங்கள் கேசத்தில் புகுந்து அதை பொலிவுடனும் தூய்மையான பளபளப்புடனும் திகழச் செய்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூ...
அழகிய அடர்த்தியான ஆரோக்கியமான கேசத்திற்கு
EGG
Halo
SHAMPOO

HES. G. 6. TM

சென்னையையடுத்த நங்கநல்லூர் ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவன் ஸந்நிதியில் எம்பெருமான் மடிமீது உறைந்திருக்கும் ஸ்ரீ வித்யா என்ற திருநாமம்கொண்ட தாயாருக்கு ஆண்டு தோறும் தை மீ முதல் வெள்ளிக்கிழமையன்று திருமாங்கல்யச் சரடு உத்ஸவம், நடத்தி குழுமியிருக்கும் சுமங்கலிகள் அனைவருக்கும் தாம்பூலமும், திருமாங்கல்யச் சரடும் விநியோகித்து வருகிறோம். மேற்படி உத்ஸவம் இந்த ஆண்டு தை மீ 10ம் தேதி 23-1-81 அன்று காலை 9.30 to 12.30 மணிவரை நடைபெறும். சுமங்கலிகள் அனைவரும் திரளாக வந்திருந்து எம்பெருமான் தாயாருடைய அநுக்ரஹத்தைப் பெற்று நற்பயனடைய அழைக்கின்றோம்.

ஸ்ரீ நீளாதேவி சங்கம்

சட்டைப் பையில் திணித்தேன். ''நீங்கள் ரொம்ப உதவி செய்திருக்கிறீர்கள். உங்களைப் போன்றவர்கள் இல்லா விட்டால் எங்களைப் போன்றவர்களுக்கு விமோசனமே கிடையாது. நீங்களெல்லாம் நீண்ட காலம் நீடூழி வாழ்ந்திருக்க வேண்டும்'' என்று ஆசீர்வதித்தேன்.

ஜப்தி நடவடிக்கையை நிறுத்திவிடலாம் என்கிற நம்பிக்கையுடன் சிட்டாய்ப் பறந்து வந்தேன் வீடு நோக்கி. ஆனால் என் வீட்டிலோ? மயான அமைதி. என் மனைவியின் விசும்பல் சப்தத்தைத் தவிர! — உள்ளே கண்ணோட்டம் விட்டேன். தையல் மிஷின், டேப் ரிகார்டர், டைப்ரைட்டர்— டெலிவிஷன் வைத்திருந்த இடங்கள் எல்லாம் காலியாக இருந்தன.

மறு நாள் நான் ரிகவரி ஆபீசை அடைந்து பில் கலெக்டரைப் பார்த்து, ''ஜப்தி பண்ணின சாமான்களை உடனே நான் திரும்ப எடுத்துக் கொண்டு போக வேண்டும். இது என் மானப் பிரச்னை. நீதான் ஏதாவது செய்ய வேண்டும்.'' பச்சை நோட்டு ஒன்றை அவன் கையில் ''பளிச்''சென்று அழுத்தினேன். அவனுடைய அலட்சியப் போக்குத் திடீரென்று அனுதாபமாக மாறியது.

''நமக்கு ரொம்ப வேண்டியவராச்சே! உங்களுக்குச் செய்யாமல் விட்டுடுவேனா வாங்க சார் என்னோட.'' என்னைத் தாசில்தாரிடம் அழைத்துப் போனான். ஸ்டே ஆர்டரை அவரிடம் காண்பித்தான்.

''நேத்திக்கு ஜப்தி பண்ணோமே — இவர் வீடுதான் சார். இவரை ரொம்ப நாளா தெரியும் சார். அப்போ யாருன்னு தெரியாமப் போச்சு.. கொஞ்சம் டயம் கொடுத்திருக்கலாம். இவருக்குச் சொத்தே இல்லே சார். பாவம் வரி போட்டுத் தவிக்க வச்சுட்டாங்க'' என்றான்.

''ஏ. ஸி. ஆபீசில் சரியாக ரிக்கார்டைப் பார்ப்பதே இல்லே. சொத்து இல்லாமல் உங்களுக்கு வரி போட்டிருக்கிறார்கள். இவருக்கு நிறைய சொத்து இருக்கிறது. இன்னும் என்குயரி நோட்டீஸ் கூட வரவில்லையாம். நோட்டீஸ் வராத வரையில் நிம்மதி. இல்லையா மிஸ்டர் ராஜன்!'' என்று கூறியவாறு தம் எதிரில் அமர்ந்திருந்தவரைப் பார்த்துச் சிரித்தார் தாசில்தார்.

'ராஜன்!' இந்தப் பெயரைக் கேட்டவுடன் திக்கென்றது எனக்கு.

''சார் உங்க பெயர்?''

''கே. டி. ராஜன் — அதாவது கே. தில்லை ராஜன்.''


''என் பெயர் தியாகராஜன்? அது சரி, நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?''

''எம். என். தெரு — அதுதான் நாகமணி தெரு.''

•''நான் இருப்பது நாராயண மூர்த்தி தெரு — சரி, உங்க டோர் நம்பர்?''

''ஒன்பது — இருபது கிரௌண்டில் பங்களா கட்டி யிருக்கிறேன்.''

அடப் பாவிகளா! இவருக்கு அனுப்ப வேண்டிய நோட்டீசை எனக்கு அனுப்பிப் படாத பாடு படுத்தி விட்டார்களே! பெய



கண்ணீர் விட்டு அழுங்கள்!

''ஒருவனுக்கு அழ வேண்டிய நிலை ஏற்பட்டால் அழுது விட வேண்டும். அழுகையை நிறுத்தவோ, அடக்கவோ கூடாது. அப்படி செய்தால் உடல் நலம் பாதிக்கப்படும். கண்ணீர் சிந்தி அழுது தீர்த்தால்தான் உடல் ஆரோக்கியம் ஏற்படும். ஜீவன சக்தி அதிகமாகும். உடலின் புண்களோ காயங்களோ இருந்தால் ஆறும். வியாதிகள் குணமாகும். வாழ்க்கையில் புத்துணர்ச்சி ஏற்படும்.'' இப்படி கூறி இருப்பவர் 'பென்சிலின்' மருந்தைக் கண்டுபிடித்தவரான அலெக்சாண்டர் பிளமிங்தான். - தீபப்ரியா

ரையும் விலாசத்தையும் சுருக்கி எழுதி என்னை உலுக்கி எடுத்து விட்டார்களே!

நான் தில்லை ராஜனிடம் நடந்த விஷயத்தைச் சொன்னேன். ''நீங்கள் வரியைக் கட்டி விடுங்கள்'' என்றேன். அவர் சிரித்துக் கொண்டே சொன்னார்:

''எனக்கு என்ன பைத்தியமா வரி கட்டுவதற்கு? பார்க்கவேண்டியவர்களைப் பார்த்து, கவனிக்க வேண்டியவர்களைக் கவனித்து வரியிலிருந்து தப்பிக்க எல்லா வழிகளையும் செய்து விட்டேன். நான் செய்தது தப்பு என்று எனக்குத் தெரியும். என்ன செய்வது? நேர்மைக்கு இது காலமில்லையே! இந்த ஜனநாயக நாட்டில் இம்மாதிரியான தொல்லைகளிலிருந்து விடுபட்டு நாம் நிம்மதியா வாழ வேண்டும் என்றால் லஞ்சம் வாழ வேண்டும்!'' என்று கூறிக் கொண்டே இடத்தை விட்டு எழுந்தார்.


லஞ்சத்தின் மகிமையை அப்பொழுது தான் நான் பரிபூரணமாக உணர்ந்தேன். நானும் அவருடன் சேர்ந்து ''லஞ்சம் வாழ்க!'' என்று கோஷமிட்டேன்.


'ஏன் சோகமாக இருக்கிறீர்கள்?'

'நான் நினைத்தேன் அது நடந்துவிட்டது.'

'நினைத்தது நடந்துவிட்டால் சந்தோஷமாக இருக்க வேண்டியது தானே?'

'ரேஸில் நான் பணம் கட்டிய குதிரை முதலில் வரும் என்று நினைத்தேன் அது 'நடந்து' விட்டது!' - பிரியா பானு





கழுத்தில் விழுந்த மாலை

1

அவர்களுடையபஸ் திருத்தணியை அடைவதற்குள் பொழுது சாயத் தொடங்கிவிட்டது.

மாப்பிள்ளை வீட்டவர்களெடுத்து நடத்தும் கல்யாணம். எனவே அவர்கள் எல்லாவற்றையும் கவனிக்க முன்னதாகவே வந்துவிட்டிருந்தவர். எல்லோருக்கும் வசதியாகத் தங்குவதற்கு தேவஸ்தான தங்கும் அறைகள் வாடகைக்கு எடுக்கப்பட்டுத் தயாராக இருந்தன. பெண் வீட்டவர்கள் ஒரு பகுதியிலும் மாப்பிள்ளை வீட்டவர்கள் எதிர்ப் பகுதியிலும் தங்குவது என்று ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. பஸ்ஸிலிருந்து பெட்டி படுக்கைகளை ஆட்கள் இறக்கி எடுத்து வர அவர்களுக்குப் பின்னால் மாதங்கி நடந்து வந்து கொண்டிருந்தாள். ''எல்லாரும் பார்க்கறதுக்கு முன்னாடி உள்ளே போயிடு. சொன்னதைக் கேட்டாத்தானே? இன்னிக்குக் கூட பெல் பாட்டமும்டாப்பும் போட்டுக்கணுமா? மாதங்கியைப் போல ஒரு நால் புடவையையாவது சுத்திக்கிட்டு வந்திருக்கக் கூடாது?'' கடுகடுத்துக் கொண்டு பெண்ணைப் பெற்ற சுமதி, பெல்பாட்டம் தரித்த மகளுக்குப் பின்னால் வேகமாகநடந்து கொண்டிருந்தாள்.

''இந்த அறை எங்களுக்கு. இரண்டு படுக்கைகள் இருக்கு. அதனாலே எங்களுக்குச் சௌகரியமாக இருக்கும்'' என்று உறவினர்களும் நண்பர்களும் அறைகளைத் தேர்ந்தெடுப்பதில் அவசரப்பட்டுக் கொண்டிருந்தனர்.

பெட்டி, படுக்கை, கூஜா, டம்ளர், கூடைகளெல்லாம் ஒழுங்காக வந்து சேர்ந்தனவா என்று மேற்பார்வை யிடும் வேலை மாதங்கிக்குக் கொடுக்கப்பட்டிருந்தது.


தங்களுக்கு அளிக்கப்பட்டிருந்த அறைக்குள்ளே சாமான்களை வைத்துவிட்டு ஆட்கள் போனதும் அவைகளை ஒரு முறை எண்ணிப் பார்த்தாள். ஜயந்தியின்ஒப்பனைப்பொருட்கள் கொண்ட வி.ஐ.பி. பெட்டி உள்பட எல்லாம் சரியாக வந்து சேர்ந்துவிட்டிருந்தன. பெரியம்மா சுமதிக்குப் பஸ் பயணம் என்றாலே கால்கள் வீங்கிக் கொண்டுவிடும் என்பது அவளுக்குத் தெரியும்.

பரபரப்புடன் ஒரு பெட்டியைத் திறந்து சுத்தமானதொரு விரிப்பை எடுத்து அறைக்குள் கிடந்த படுக்கையின் மீது விரித்துத் தயாராக்கினாள்.

'அப்பாடா! ஒரு பத்து நிமிஷமாவது படுத்துக்கிறேன். ராத்திரி சாப்பாட்டுக்கப்பறந்தான் பரிசமும், நலங்கும் வைக்கப் போறாங்க. என்னால மண்டபத்துக்கும் இந்த அறைக்கும் பல தடவை நடக்க முடியாது. நீ ஒரு டிபன் செட்டிலே சாப்பாட்டை எடுத்து வந்து எனக்குப் பரிமாறிட்டு, பிறகு போய் நீ மத்தவங்களோட சாப்பிட்டுட்டு வரலாம். 'அப்படியே பெரியப்பா எந்த அறையிலே தங்கி யிருக்கார்னு கண்டுக்கிட்டு வந்துடு. எங்களுக்கு அடுத்தபடியா இருக்கிற அறையை எடுத்துக்கோங்கன்னு கரடியாக் கத்தியிருக்கேன். ஒரு அவசரம் போதுக்கு இவரைத் தேடணும்னு...'' பெருமூச்செறிந்தபடி கட்டிலின் மீது சாய்ந்து கொண்டாள் சுமதி.

''நான்கூட அங்கே போகப் போறதில்லே. உங்களோடேயே இங்கேயே சாப்பிட்டுக்கிறேன். இப்போப் பிடிச்சு எல்லோரும் என்னை முறைக்க வேணும்.'' ஜயந்தி பிடிவாதம் செய்தாள்.

பெரியம்மாவின் உத்தரவுகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். இல்லாவிட்டால் அவள் பொரிந்து கொட்டிவிடுவாள். மாதங்கி அவசரமாக முகத்தைக் கழுவித்



லக்ஷ்மி

துடைத்துக் கொண்டு, பொட்டு வைத்துக் கூந்தலை வாரி முடித்துக் கொண்டாள். பஸ் பயணத்தில் அலங்கி விட்டிருந்த புடவையை விட்டுத் தன் சிறு பெட்டியில் கொண்டு வந்திருந்த வாயில் சேலை ஒன்றை எடுத்து உடுத்திக் கொண்டாள்.

அது சமயம் மாப்பிள்ளை வீட்டிலிருந்து ஓர் இளம் பெண் உள்ளே வந்தாள்.

''எல்லாரையும் முதல்லே சாப்பிட வரச் சொன்னாங்க அத்தை. பெண்களுக்குத் தலைக்கு வச்சுக்கப் பூக் கொடுத்து அனுப்பி யிருக்காங்க...'' புன்னகைத்தபடி கையில் சுமந்து வந்த மல்லிகைப் பூ பந்தொன்றை மேஜையின் மீது வைத்தாள்.

''கல்யாணப் பெண்ணைப் பார்க்கணும்... நீங்கதானே சம்பந்தியம்மா?'' கேட்டுக் கொண்டு நின்று விட்டாள் அவள்.

சுமதி திரும்பிப் பார்த்தாள். அருகில் உட்கார்ந்திருந்த மகளைக் காணவில்லை. குளியலறைக் கதவு சாத்தப்பட்டிருந்தது. உள்ளே குழாயில் தண்ணீர் ஓடும் சப்தம் கேட்டது.

''குளிக்கிறா. பஸ்ஸிலே வந்த களைப்பு வேறே... சித்த பொறுத்துப் பரிசம் இருக்கே அப்போ பார்க்கலாம்!'' எரிச்சலை அடக்கிக் கொண்டு மெலிதாய்ச் சிரித்தாள். வந்த வளின் முகம் சுருங்கிப் போனது.

''சரி வரேன்.... சாப்பிட மண்டபத்துக்கு வந்துடுங்கோ.'' அவள் விரைந்துவிட்டாள்.


சுமதி மேஜையிலிருந்த பூப்பந்தை அசட்டையாகப் பார்த்தாள். அவளுக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

''சம்பந்தியம்மா பலே கருமியா இருக் காங்களே. ஒரு பூப் பந்திலே பெண்ணுக்குத் தலை அலங்காரம் செய்துட்டு நாம எல் லாரும் வச்சுக்கணும்னு அனுப்பியிருக் காங்க. மாதங்கி! நீ ஒரு காரியம் செய்! போய் அலங்களைப் பார்த்து, பெண்ணுக்குத் தலை அலங்காரம் செய்யக் கொஞ்சம் தனிப் படப் பூ வாங்கிட்டு வரச் சொன்னேன்னு சொல்லு...'' என்று உத்தரவிட்டாள்.

மாப்பிள்ளை வீட்டவர்கள் தங்கியிருந்த பகுதிக்கு வந்ததும் மாதங்கிக்கு ஒரே தயக்கம்.

சம்பந்தி அம்மாள் எந்த அறையில் தங்கி யிருக்காங்க என்று கேட்டுக் கொள்ளவில்லை.

முதல் இரண்டு அறைகளின் கதவுகள் சாத்தப்பட்டிருந்தன. உள்ளே ஆண்களின் பேச்சுக்குரல் கேட்டது. மூன்றாவது அறைக் கதவு ஒருக்களித்த நிலையில் திறந்து வைக் கப்பட்டிருந்தது. அதன் முன்னால் சிறிது அச்சத்துடன் நின்றாள். உள்ளே யிருந்து விசிறி சுழலும் சப்தம் மட்டுமேதான் வந்தது.




மெல்ல விரல்களால் கதவை லேசாகத் தட்டினாள்.

''யார் அது?'' அதட்டலாக எழுந்த ஆண்குரலைக் கேட்டதும் அதிர்ந்து போய் விட்டாள். கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்த அவனைக் கண்டதும் முகம் சிவந்து — நெஞ்சு பதறப் பேசத் தோன்றாது மௌனியாகி விட்டாள். நீல ஷர்ட்டும் பட்டுக் கரை வேஷ்டியுமாக மண்டபத்துக்குக் கிளம்பத் தயாராகி விட்டிருந்த ஹர்ஷன் பெண் பார்க்க வந்த அன்று இருந்ததை விடத் திடீரென்று ஒரு பிடி உயரமாகி விட்டது போன்ற மலைப்பு அவளுக்கு.

''சம்பந்தி அம்மாளைப் பார்க்கணும்...'' மென்று விழுங்கினாள்.

காலோடு தலைவரை அவளை உற்றுப் பார்த்த ஹர்ஷன் சிரித்து விட்டான்.

''ரொம்ப அவசரமோ? அந்தக் கடைசி அறையிலே இருக்காங்க... போய்ப் பார்''



''ஏற்கெனவே பிறந்த உன் குழந்தைகளுக்கு, அல்லி, தாமரை, மல்லி, முல்லை, கனகாம்பரம், சரோஜா என்று பெயர் வச்சியே! இதுக்கு?''
''டிசம்பர் பூ!''

கையைக் காட்டிவிட்டு உள்ளே சென்று விட்டான். இன்னும் கொஞ்ச நேரம் அவன் சிரித்துக் கொண்டு பேச மாட்டானா? இன்னும் ஒரு சிலவிநாடிகள் அவன் அவள் எதிரே நின்று கொண்டிருக்கக் கூடாதா?... ஒரு வினோதமான ஏக்கம் உள்ளத்தில் எழுவதை உணர்ந்தாள்.

சே! இதென்ன ஆசை... இன்னும் கொஞ்ச நேரத்திலே பரிசம். விடிந்தால் கல்யாணம். நாளை இந்த நேரத்தில் ஜயந்தியோட தேன் நிலவுக்குப் புறப்பட்டுவிடுவான்.... ஜயந்திக்குக் கணவனாகப் போகிறவனைப் பார்த்து இப்படி வக்கிரமாக ஒரு ஆசையா?....

உள்ளத்தையும் உடலையும் ஒருங்கே குலுக்கிய இனங்காணாத உணர்வை உதறிவிட்டுக் கொண்டு அவள் அந்தக் கடைசி அறைப் பக்கம் வந்தாள். அறையின் கதவு மூடியிருந்தது. சிறிது தயங்கிவிட்டு மெல்லத் தட்டினாள். கதவைத் திறந்துகொண்டு வெளிப்பட்ட சம்பந்தி அம்மாள் கஸ்தூரி அவளை வியப்போடு பார்த்தாள்.

சரிகைக் கரை போட்ட காஞ்சிபுரப் பட்டுச் சேலையில் கழுத்தும் காதும் மின்னச் சம்பந்தி அம்மாள் பந்தலுக்கு வேண்டிய அலங்காரத்தில் பாந்தமாகவே இருந்தாள்.

''உன்னை நான் இதுக்கு முன்னாடி பார்த்திருக்கிறேனே? ஆமாம்! இப்ப ஞாபகம் வருகிறது. நீ மிஸ்டர் தயானந்தின் தம்பி மகள்தானே... அப்படித்தான் அன்னிக்கு அறிமுகம் செய்து வைச்ச நினைவு... உள்ளே வாம்மா!'' பரிவுடன் அழைத்தாள்.

கம்மென்று அறைக்குள்ளே சந்தனம்—மல்லிகையின் கலவை வாசனை. கல்யாண மண்டபத்துக்குள் புகுந்து விட்டதுபோன்ற நினைவில் ஏக்கம் நெஞ்சை இறுக்க உள்ளே சென்றாள்.

''பெண்ணுக்குத் தலை அலங்காரத்துக்கு பூ வாங்கிட்டு வரச் சொன்னாங்க'' — மூலையிலிருந்த பூக்கூடையைப் பார்த்தபடி சொன்னாள்.

''அனுப்பி வைக்கத்தான் நினைச்சேன். அதுக்குள்ளே ஆயிரம் வேலைகள். வேண்டிய பூவை எடுத்துட்டுப் போ'' சொல்லிக் கொண்டே பந்து பந்தாக மல்லிகை, கனகாம்பர மலர்களை ஒரு தட்டில் நிறைத்து அவளிடம் கொடுத்தாள். ''நீயும் நிறைய வச்சுக்கொண்டு வாம்மா'' — புன்முறுவலித்தாள் கஸ்தூரி.

பூத்தட்டைக் கொண்டு வந்து அறைக்குள் வைத்துவிட்டு நிமிர்வதற்குள் பெரியம்மா படுக்கையிலிருந்து முனகினாள். ''சட்டுனு போய்ச் சாப்பாட்டை எடுத்துக்கொண்டு வந்துடு. பிறகு மத்த விஷயங்களைக் கவனிக்கலாம்..'' நிற்க விடாது அவளை அடுத்த பணிக்கு ஏவினாள்.

கல்யாண மண்டபத்துக்கு டிபன் செட்டைத் தூக்கிக் கொண்டு நடந்த மாதவியின் மனம் கனத்தது.

அவளுக்கு மட்டும் பெற்றோர்கள் உயிருடன் இருந்திருந்தால் இப்படி ஒரு எடுபிடி ஆளாகப் பெரியம்மாவுக்கு நாள் முழுவதும் ஓடிக் கொண்டிருப்பாளா?

பெண் பார்க்க வந்த அன்றே அவளுக்குச் சம்பந்தி அம்மாள் கஸ்தூரியைப் பிடித்து விட்டிருந்தது. தாயைப் பார்ப்பது போல ஒரு தனி அன்பு மனத்தில் சுரந்ததை உணர்ந்தாள்.

''பிள்ளையின் தாயார் படிச்சவங்க. வேலை பார்த்துக் கொண்டிருக்காங்க...'' பெருமையாகப் பேசினாள் சுமதி.

''வேலைக்குப் போகும் மாமியாரா? எனக்கு வேண்டாம். வீட்டு வேலை முழுவதையும் என் தலையில் தள்ளிவிட்டுப் போயிடுவாங்க'' எடுத்த எடுப்பிலேயே ஜயந்தி முட்டுக்கட்டை போட்டாள்.

''மாமியாரோட இருக்கப் பிடிக்கலைன்னு நீ உன் புருஷனோட தனிக் குடித்தனம் செய்யப் புறப்பட்டு விடறது. கல்யாணத்துக்குப் பிறகு சிந்திக்க வேண்டிய சங்கதி. மாப்பிள்ளையைப் பார்த்துட்டுப் பேசலாம்.'' அம்மா அதட்டி மகளை அடக்கிவிட்டிருந்தாள்.


அடுத்த படியாக அவர்கள் வீட்டுக்குப் பையனைப் பார்க்கப் போயிருந்தவர்கள்

ஒரே டீலக்ஸ் டிவி TS62

சீரான உன்னத ஹை-ஃபை ஒலிக்கு 10 வாட் ஒலிபெருக்கியும், 20 செ.மீ. டியூயல் கோன் ஸ்பீக்கரும் கொண்ட ஒரே டீலக்ஸ் டிவி சாலிடெர் TS62. இத்துடன் உங்கள் ரெக்கார்டு பிளேயர், டேப் ரெக்கார்டர், எப்எம்/ஏஎம் (FM/AM) டியூனர் முதலியவற்றை இணைத்து, டிவியில் நிகழ்ச்சி இல்லாத நேரங்களிலும் சாலிடெர் டிவியை உபயோகிக்கலாம்.

செய்தி வாசிப்பவரின் கண் இமைகள் கூட தெளிவாகத் தெரியும் படத்தோற்றம். இதில் சாலிடெருக்கு நிகர் சாலிடெர் ஒன்றே. வார 7 நாட்களிலும் சர்வீஸ் வசதி உண்டு. சிறந்த பராமரிப்புக்கு காஞ்சீபுரத்திலும் ஒரு சர்வீஸ் சென்டர்.

ஹை-பீம் எலக்ட்ரானிக்ஸ்
பி. லிட்.,
சென்னை-600 020.
சர்வீஸ் போன் : 412642



HE/189

சாலிடெர்

திரும்பியபோது வாயூறிப் போனார்கள். பெரியப்பா மிகவும் சந்தோஷமாகத் தலை ஆட்டினார்.

''ஹர்ஷன்னு பேர். அதுக்கு ஏத்தாப்பல ராஜாவாட்டமா பையன் நல்லாவே இருக்கான். நல்ல படிப்பு. கைநிறையச் சம்பளம். தாயாருக்கு ஒரே பிள்ளை. கார்—வீடுன்னு வசதியான குடும்பம். வரதட்சிணை வாங்கற பழக்கம் இல்லையாம். அவங்களுக்குப் பெண்ணைப் பிடிச்சுட்டா நமக்கு இது பெரிய அதிர்ஷ்டம்னு சொல்வேன்'' -ஆர்ப்பரித்தார்.

'''பையனுடைய போட்டோ—இருந்தாக் கொடுங்க. கிராமத்திலிருக்கிற என் மாமாவுக்கு அனுப்பி வைக்கணும். வீட்டுக்குப் பெரியவர். அவர் ஆசி ரொம்ப முக்கியம்'னு சொல்லி வாங்கிட்டு வந்திருக்கேன். ஜயந்தி முதலில் போட்டோவைப் பார்த்துக்கிட்டப் பிறகு,பேசிக்கலாம்.''சவால் விடும் தோரணையில் சட்டைப் பையிலிருந்து ஒரு புகைப் படத்தை முன்னறை மேஜை மீது வைத்தார்.

நாற்காலியில் சாய்ந்தபடி கதைப் புத்தகம் ஒன்றில் ஆழ்ந்து விட்டிருந்த ஜயந்தி சட்டென்று எழுந்து வந்து ஆவலுடன் அதைப் பார்க்க முற்படவில்லை.

ஆனால் மாதங்கியின் ஆவலைக் கட்டுப் படுத்த இயலவில்லை.

அசட்டையாகப் படத்தைப் பார்த்துவிட்டு ஜயந்தி எழுந்து உள்ளே போய்விட்டாள். யாரும் இல்லாத சமயம் மெல்ல அதை எடுத்து மாதங்கி பார்த்தாள்.... பார்த்துக் கொண்டே நின்று விட்டாள்.

''விளக்கை அணைக்காம முன்னறையிலே என்ன செய்யறே?'' — பெரியம்மா கூவிய போதுதான் விழிப்பு ஏற்பட்டது. புகைப் படத்தைப் பார்த்தபோதே அவளுக்கு அவனைப் பிடித்துவிட்டிருந்தது.

பெண் பார்க்க அவனும் தாயாரும் மற்றவர்களுடன் வந்தபோது உள்ளே நுழைந்தவனைக் கண்டு அப்படியே மெய் மறந்து மயங்கிப் போனாள் மாதங்கி.

ஆனால் அவனுக்கு ஜயந்தியை ரொம்பப் பிடித்துப் போயிற்று. உடனடியாகத் திருமண நாள் வைத்தாகி விட்டது. விரைவில் திருத்தணியில் கல்யாணம் என்றும் ஏற்பாடாகி விட்டது. அந்தச் சில தினங்களில் அவன் இருமுறை அவர்கள் வீட்டுக்கு வந்து போனான்.

எத்தனையோ தடவைகள் தொலை பேசியில் ஜயந்தியை அழைத்துப் பேச முற்பட்டான்.

ஆனால் ஜயந்தி... வேடிக்கையான பெண். பட்டும் படாமலும் மிகவும் அசட்டையாக வல்லவோ இருக்கிறாள்? ஏன்?

சாப்பாடு முடிந்ததும் அடுத்தபடியான ஏற்பாடுகள் துரிதமாக நடந்தன.

''பரிசம் போடக் காத்திருக்காங்க. பெண்ணை அழைச்சிக்கிட்டு எல்லோரும் மண்டபத்துக்கு வாங்க'' — அதே இளம் பெண் ஓடிவந்து அறிவித்தாள்.

இரவு நிகழ்ச்சிகளுக்கென்று தயாராக வைத்திருந்த புடவையைப் பெட்டிக்குள்ளிருந்து மாதங்கி எடுப்பதைப் பார்த்த பெரியம்மா எரிந்து விழுந்தாள்.

''உன் அலங்காரம் பிறகு இருக்கட்டும். ஜயந்தி தன் தோழி தலையலங்காரம் செய்து விடுவான்னு சொல்லிட்டுத் தலை சாமான்—பூ எல்லாத்தோடும் போனவள் இன்னும் வரலே. நாழியாச்சுன்னு சொல்லிச் சீக்கிரம் அலங்காரத்தை முடிச்சுட்டு வரச் சொல்லு.... முதல்லே நாங்கள்ளாம் மண்டபத்துக்குப் போயிடறோம். நீ உடுத்திக்கிட்டுப் பத்திரமாக் கதவைப் பூட்டிக்கிட்டு வந்து சேர். புரிஞ்சுதா?'' அதட்டினாள்.

ஏழாவது எண் அறையைத் தொட்டதும் திறந்து கொண்டது. ஆனால் அங்கே யாரும் இல்லை. பதற்றமாக வரிசையாக இருந்த ஒவ்வொரு அறையிலும் தேடினாள். ஜயந்தியை எங்குமே காணவில்லை.

எங்கே போயிருப்பாள் இந்தச் சமயம்? மாதங்கிக்குப் பயத்தில் வாய் உலர்ந்து போயிற்று. மார்பு படபடத்தது.

''என்னம்மா... என்ன இங்கே நின்னுக்கிட்டு?....'' விசாரித்தபடி அங்கவஸ்திரத்தைத் தோளில் போட்டுக் கொண்டு வெளிப் பட்ட பெரியப்பா கதவைப் பூட்டினார்.

''ஜயந்தி அக்காவைத் தேடிக்கிட்டிருக்கேன்.....''

''என்னம்மா சொல்றே?''

''தலைக்கு ஜோடனை செய்துகிட்டு வரத் தன் சிநேகிதியின் அறைக்குப் போவதாகச் சொல்லிட்டுப் போன ஜயந்தி அக்காவை அங்கே காணலே. எங்கேயுமே காணலே... தேடித் தேடி ஓஞ்சு போனேன்.'' மாதங்கிக்கு அச்சத்தில் வார்த்தைகள் தடுமாறின.

''நிசமாகவா சொல்றே?...'' திகிலில் உறைந்து போய் நின்று விட்டார், பெண்ணைப் பெற்ற தந்தை தயானந்தன்.

(தொடரும்)



கமலா: ''பண விஷயத்துல எங்க வீட்டுக்காரர் பொறுப்புத்தான். நான் தலையிடவே மாட்டேன்.''

விமலா: ''அப்படியா!''

கமலா: ''ஆமா.. என் இஷ்டத்திற்கு எனக்கு வேண்டியதை வாங்கிடுவேன். பணம் கொடுக்க வேண்டியது அவர் பொறுப்புத் தான்.''

-ஆர். ஸ்ரீனிவாசன்

கருகு பதில்கள்





✖ பி. ரங்கசாமி, சென்னை-33

கே. 'யார்' எழுதியது யார் என்று நீங்கள் வைத்தது சரியாக இருந்ததா?

ப: இருந்தது. (எம். எஸ்.) பெருமாளே சாட்சி

✖ ஆர். திருநாவுக்கரசு, திருமருகல்

கே. சபரிமலை போவோரும் கறுப்புத் துணி அணிகின்றனர்: ஆண்டவன் இல்லை என்போரும் கறுப்புத்துணி அணிகின்றனர் இது எதைக் காட்டுகிறது?

ப: இதற்கு இரண்டுவித விளக்கம் தரலாம். வைரத்தை வைரத்தால் அறுக்க வேண்டும் என்பார்கள். கறுப்புத் துணி நாஸ்திக வாதத்தைக் கறுப்புத்துணி ஆஸ்திக வாதத்தால் மோத வேண்டும் என்ற காரணத்தால் இருக்கலாம். அடுத்து, கடவுள் என்றால் கறுப்பு அங்கு இருக்க வேண்டும். கோயிலில் உள்ள கடவுள் விக்கிரகங்கள் (மூலவர்) கரிய நிறத்தனவாகத்தானே உள்ளன.

✖ கோவை கணேஷ், சென்னை-82

கே. கண்ணதாசன் வாழ்க்கை ஒரு புராணமாக உள்ளதே ஏன்?

ப: எல்லாருடைய வாழ்க்கையும் ஒரு புராணம்தான். நம் வாழ்க்கையில் ஏற்படும் பல சம்பவங்களையும் சுவையான நிகழ்ச்சிகளையும் துயரமான அனுபவங்களையும் கோவையாக நாம் தொகுத்து, எழுதப் படவேண்டிய முறையில் எழுதினால் நாலு பேர் விரும்பிப் படிக்கக் கூடியபடி இருக்கும். நம்மில் எத்தனை பேருக்கு இந்தத் திறமை உண்டு என்பது ஒரு பிரம்மாண்டமான கேள்விக்குறி.

✖ கமலநாத குருதேவன், ஆதம்பாக்கம்

கே. கார்டுக்கு மதிப்பு தருவீர்களா? கவருக்கு மதிப்பு தருவீர்களா?

ப: இரண்டுக்கும் கிடையாது. மணியார்டருக்குத்தான்!

✖ ஸ்ரீதர் நாராயணன், கரக்பூர்

கே. தமிழ்ப் பத்திரிகைகளில் வரும் சினிமாத் துணுக்குகள் பேத்தலாக உள்ளனவே?

ப: விவரம் அறிந்த ஒரு சினிமா பத்திரிகை ஆசிரியர் சொன்னார்: சென்னையில் சினிமாச் செய்திகளை எழுதும் நிருபர்கள் 200 பேர் உள்ளனராம். பாதிக்கு மேல், சினிமா ஸ்டார்களைப் பார்ப்பதே ஜென்ம சாபல்யம் என்று நினைப்பவர்கள். ஒரு ஸ்டில் போட்டோவை வாங்கி வந்து தோன்றியபடி ஒரு துணுக்கை எழுதி விடுகிறார்கள். ஆகவே அவற்றில் பேத்தலும் இருக்கின்றன. இதில் துரதிர்ஷ்டமான அம்சம் என்னவென்றால், இந்தப் பேத்தல்களை வேத உண்மைகளாகப் பாவிக்கும் வாசகர்கள் நிறையப் பேர் இருக்கின்றனர்.

✖ வசந்தா கோவிந்தன், பெங்களூர்-38

கே. நம்மைப்பற்றி நம்மிடமே பேசுபவன் எப்படிப் பட்டவன்?

ப: புகழ்ந்து பேசினால் மேதை; இகழ்ந்து பேசினால் பேதை!

✖ துரைபால்ராஜ், கோவை-12

கே. தனிமை ஒரு மனிதனின் மனத்தைக் கெடுத்து விடக் கூடியதா?

ப: பைபிளில் சொல்லியிருக்கிறதாம், ஒரு மனிதன் தனிமையாக இருப்பது நல்லதல்ல என்று. ஜோஷ் பில்லிங்க்ஸ் என்பவர் சொல்கிறார்: 'தனிமை என்பது நல்ல இடம்தான். அவ்வப்போது அங்கு சென்று வரலாம். ஆனால் தங்குவதற்கு அது உகந்த இடம் அல்ல.' அறிஞர்களின் சிந்தனையை வளப்படுத்தும் தனிமை. அதே சமயம் விஷமிகளை மேலும் விஷமிகளாக்கும்.

✖ காந்தபாணியம் புலி, ராதா புரம்

கே. சமீபத்தில் உங்களை ஆச்சரியப்பட வைத்த நிகழ்ச்சி என்ன?

ப: டைரக்டர் ஸ்ரீதரும் நானும் பஞ்சாப் சென்றிருந்தோம். பயங்கரக் குளிர். ஸ்ரீதரோ பனியன் போடாமல் வெறும் சட்டையுடனேயே இருந்தார். இரவு தூங்கியபோது சட்டையைக் கழற்றி விட்டதுமல்லாமல் மின் விசிறியை வேறு போட்டுக் கொண்டார். நான் மட்டுமல்ல, பஞ்சாபி நண்பர்களே ஆச்சரியப் பட்டுப் போனார்கள்.


✖ வி. அருண், ஈரமங்கலம்


கே. என்னதான் அறுவையாக இருந்தாலும், ஒரு சினிமாவைக் கடைசிவரை பார்ப்பீர்களா?

ப: பார்ப்பேன். ஒரே ஒரு படத்தில்தான் பாதியில் எழுந்து வந்து விட்டேன். படம்: காடு. ஜனாதிபதி பரிசு பெற்ற படம்!

பரிசு பெறுபவர் :

துரை பால்ராஜ்
205, 100 அடி தெரு,
கோவை - 641012





[தாங்கள் ஆசிரியருக்கு எழுதும் கடிதங்களாவது பத்திரிகைகளில் பிரசுரமாகாதா என்று ஏங்கும் எண்ணற்ற வாசகர்கள் பலர். ஒவ்வொரு பத்திரிகைக்கும் உரிய பாணியில் எழுதினால்தான் அந்தந்தப் பத்திரிகைகளில் வெளியிடுகிறார்கள். இதோ ஒரு 'செட்' மாடல் கடிதங்கள்! இதுவரை தங்கள் கடிதங்களை அச்சில் காணாதவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.]

குமுதம் : இது இன்று ஜாயம்!
நீ வெலவாசியைப் பத்தி மாட்டேன். இம்மாம் பெரிய அலக, கோச்சுக்கலாம் எங்கன்னு எழுதணும்? கடோசில என்னேயும் குளப்பி விட்டுட்டியே, இது இன்னு ஜாயம் வாத்தியாரே!

—பக்கிரிசாமி, பழையனூர்


விகடன் : பார்லிமெண்ட் முறையா, ஜனாதிபதி முறையா எது நம் நாட்டுக்குத் தேவை என்பதைத் தாங்கள் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டி விட்டீர்கள். இதுவரை இருளில் சூழ்ந்திருந்த எங்கள் கண்களைத் திறந்துவிட்ட தங்கள் தலையங்கம் பொன் னேட்டில் பொறிக்கப்பட வேண்டியதாகும். தக்க சமயத்தில் தக்க கருத்துக்களைத் தருவதில் விகடன் எப்பொழுதுமே தயங்கிய தில்லை என்பதற்குத் தங்கள் தலையங்கமே சான்று.


—அய்யம்பேட்டை அய்யாசாமி

கல்கி : வட்ட மேஜை.
வஞ்சகப் புகழ்ச்சி அணியில் எழுதுவதில தங்களுக்கு நிகர் யாருமில்லை. Really fantast. ஆனால் மேலோட்டமாகப் படிக்கும் எவரும் தங்கள் தலையங்கத்தை Misunderstand பண் ணிக்கொள்ளாமல் இருக்க வேண்டும். கடந்த இருபது வருடங்களாகத் தங்கள் பத்திரிகையைக் காசு கொடுத்து வாங்கிப் படித்து வருபவன் என்ற உரிமையில்தான் இதை எழுதுகிறேன்.

—சுஜமுகன், காந்தாரப்பேட்டை







குங்குமம்: நாலு வரி.
இந்த மாதிரி அரசியல் அக்கப்போர் ஞக்காகப் பிறரைப் பேட்டி கண்டு எழுதிப் பக்கங்களை வீணாக்குவதை விட குறளோவியத்துக்கு இன்னும் ஒரு பக்கம் கூடுதல் ஒதுக்கியிருக்கக் கூடாதா என்று கேட்கிறேன்.

—தமிழ்மணி, தனையூர்

இதயம்: பார்லிமென்டு முறையா, ஜனாதிபதி முறையா என்பது பற்றிய நக்கீரனின் கருத்துக்கள் ஒவ்வொன்றும் ஒரு சாட்டை அடி. இது பற்றி மணியனும் ஏதாவது கூற மாட்டாரா? எதிர்பார்க்கிறோம்.

—ஹரிஹர சர்மா, தஞ்சாவூர்

கதிர்: வாசகர் குரல்!
கூரிய உண்மைகளை அடித்துப் பேசும் அதே நேரத்தில் மற்றவர்கள் கூறத் தயங்கும் விஷயங்களை எடுத்துக் கூறி வருவதில் கதிர் முன்னணியில் நிற்கிறது. நாட்டில் பொறுப்பின்மையும் தட்டிக் கழிக்கும் மனப்பான்மையும் மிகுந்து வருகிறது. இளைஞர்களைத் திரட்டி அவர்களை ஒன்று சேர்த்துத் தேங்கிக் கிடக்கும் சக்தியை ஆக்க பூர்வமான வழியில் செலுத்த வேண்டும் என்பதே என் கருத்து. வேலை யில்லாத் திண்டாட்டமும், கருப்புப் பணமும் ஊஞ்சலாடும் இச்சமயத்தில் இளைஞர்கள் கடமை யாது? வரும் காலம்தான் பதில் கூற வேண்டும். கூறுமா?

ஆர். எஸ். எஸ். வாசன், அரியலூர்

சாவி: ரெண்டு வரி.
தாங்கள் ஒருவர்தான் ரொம்பவும் புத்தி சாலி என்று எண்ணிக்கொள்ள வேண்டாம். இந்திராவைப் புகழ்ந்தால் சர்குலேஷன் இன்னும் கூடும் என்ற தங்கள் யுக்தி நன்றாகத் தெரிகிறது.

—அராவண்ணன், அறந்தாங்கி

'மாடல்' மடல்கள்! —விஜய்



12

சமங்களாவை அழைத்துக் கொண்டு போய், அவன் முன் நிறுத்தினாள், கோமதி.

''இவள்தான் என் பிரண்ட் சுமங்களா பி.எஸ்.ஸி.'' என்று அவனிடம் அறிமுகப் படுத்திவிட்டு அவசரமாகக் கல்லூரிக்குப் புறப்பட்டுப் போய்விட்டாள்.

அவன் அவளை ஒரேயொருமுறை பார்த்து விட்டு, ''என்ன மெயின்'' என்று மட்டும் கேட்டான்.

''பௌதிகம்'' என்றாள் சுமங்களா.

''சம்பளம் மிகக் குறைவாகத்தான் இருக்கும். எங்களுக்கு ஒரு பட்டதாரி தேவை யில்லைதான். ஆனால்,பாலுக்கு ஒரு மேனியா 'பட்டதாரியாகப் பார்த்து எடு' என்று கூறி யிருக்கிறார்.''

அவள் பதில் பேசவில்லை. அவன் அங்கே என்ன வேலை என்பதை விளக்கினான். அதை அவள் கேட்டுக் கொண்டாள்.

''நீங்கள் உங்கள் சௌகரியப்படி வேலையை ஒப்புக் கொள்ளலாம். இதில் ஒரு பெரிய பேட்டி வைத்து நபர்களைப் பொறுக்குமள வுக்கு விசேஷ அம்சங்கள் ஏதும் இல்லை. தவிர எனக்கும் நேரத்தைக் கெடுத்துக்கொள் ளும் விருப்பம் இல்லை. நீங்கள் முதலில் வந்தீர்கள். முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டீர்கள்.''

அவன் இப்படித்தான் எடுத்த எடுப்பி லேயே மிகச் சரளமாகப் பேசினான். அவ னுடைய கலகலப்பு அவளுக்கு உற்சாகமாக இருந்தது.

ஒன்றுமே இல்லாத சூன்யமாக இருந்த வாழ்க்கையின் ஒரு மூலையில் சிறு துளிர் விட்ட மாதிரி அவள் மனம் நிம்மதி அடைந்தது.

ஒரு சிறு இழை கிடைத்திருக்கிறது. இதை வைத்துக் கொண்டு மேலே போக வேண் டியதுதான். இன்னும் மேலே போக வேண் டும்.

மாடர்ன் டிரை கிளீனர்ஸ் நிறுவனத் தில் சுமங்களா வேலைக்குச் சேர்ந்துவிட் டாள். மாதச் சம்பளம் என்பது அவ ளுடைய முழுத் தேவைக்கும், அபிலாஷை களுக்கும் உகந்தது போல் இல்லைதான். என்றாலும் மனத்தில் சிறு நிம்மதியின் நீரோட்டம் பரவியிருப்பதைப் புரிந்து கொண்டாள். உள்ளத்தில் அழுந்திக் கிடந்த பாரம் கணிசமான அளவு குறைந் திருந்தது.

கோமதியுடன் அறை வாடகையைப் பகிர்ந்து கொண்டாள். சில சுய தேவைகளை அவளால் சமாளிக்க முடிந்தது. அந்த அளவுக்கு நிம்மதி.

சுகுமாரனைப் பற்றி அபிப்பிராயம் ஒன்று உருவாக்கிக் கொள்ளக் கூடிய அளவு அவள் மனம் அந்த இடத்தில் லயிக்கவில்லை. ஆனால் அவன் சதா அவளைக் கண் காணிப்பவன் போல் காணப்பட்டான். அவள் தலை குனிந்து பணியில் ஈடுபட் டிருக்கும்போது அவளையே பார்த்துக்கொண் டிருந்தான். அவள் தலை நிமிரும்போது இதழ் கடையோரத்தில் புன்னகை ஒன்றை மலரவிட்டு முகத்தைக் கவிழ்த்துக்கொள் வான்.

அவன் பார்வையில் வெளிப்பட்ட விகல் பத்தை அவளால் ஜீரணிக்க முடியாத போது அவள் தன் இடத்தை விட்டு எழுந்துபோய்ச் சிறிது நேரம் நின்றுவிட்டு வருவாள். அங்கே ரசீதுகளில் உள்ள குறி களைக் கொண்டு வெளுக்கப்பட்டு வந்த துணிகளைப் பகிர்ந்து போட்டுக் கொண் டிருப்பாள்.

சில வேளைகளில் மாடியில் வெளித் தாழ் வாரத்துக்கு வருவாள். அப்பொழுது கையில் பென்சில் இருக்கும். அதைச் சீவிக் கொண்டே கீழே உள்ள மியூசியம் சாலை யைப் பார்த்து விட்டுக் கீழே வருவாள்.

அவனைப் பார்த்தால் அப்படி யொன்றும் வரம்பு மீறிப் போகிறவனாகத் தோன்றவில்லை. அவளுடன் அவன் இதுவரை மரியாதை யுடனேயே நடந்து கொண்டிருக்கிறான். பல நேரங்களில் மூடு மந்திரம் போல் காணப் பட்டான்.

மாலை ஆறு மணி வரை இருந்தால், ''நீங்கள் இவ்வளவு நேரம் இருக்க வேண் டியதில்லை. ஐந்தரை மணி வரை இருந்தால் போதும்'' என்பான்.

அவளைப் பற்றி அவன் இன்றுவரை ஒன்று கூட விசாரித்தது இல்லை. விவாகமானவளா? ஆகாதவளா? இருப்பிடம் எங்கே? யார் உற வினர்கள்? எந்தக் கல்லூரி என்கிற மாதிரி சில அத்தியாவசியமான – தெரிந்துகொள்ள வேண்டிய கேள்விகளைக் கூடக் கேட்காதி ருந்து 'அவன் சற்று ரிஸர்வ்டு டைப்' என்று எண்ணிக் கொண்டாள்.

தன் அறையில் அந்தப் போட்டோவின் முன் நின்றாள். பரமேஸ்வரனும் சுமங்களா வும் பதிவுத் திருமணம் செய்து கொண்டு மாலையுடன் நிற்கும்போது அகிலா எடுத்த போட்டோ.

வேண்டா வெறுப்பாகப் பதிவுத் திரு மணத்தை முடித்துக் கொண்டு வெளியே வரும்போது துணிச்சலுடன் எடுக்கப்பட்ட போட்டோ. பரமேஸ்வரனின் எதிர்ப் பையும், பலமான மிரட்டலையும் மீறி எடுக்கப்பட்ட போட்டோ. சிறிது நேரம் தாமதித்திருந்தால் அவன் அகிலாவிட மிருந்து காமிராவைப் பிடுங்கி உடைத் தெறிந்திருப்பான். அன்று அவனுக்கு


அவ்வளவு சினம். ஆனால் அவனுடைய எதிர்ப்பைச் சமாளித்துக் கோமதியும் அகிலாவும் டாக்ஸியில் ஏறிப் போய்விட்டனர்.

அதற்குப் பின்பு கூடப் பரமேஸ்வரன் அகிலாவைக் கண்டுபிடித்து அந்தப் போட்டோவைத் திரும்பப் பெற எவ்வளவோ முயன்றிருக்கிறான். அகிலாவின் இருப்பிடத்தைத் தெரிந்து கொண்டு ஹாஸ்டலில் வந்து விசாரித்தபோது அவனுக்கு யாரும் சரியான பதில் கூறவில்லை. அவளை அடையாளம் கண்டுகொண்டு பஸ் ஸ்டாப்பில் சந்தித்துக் கேட்டிருக்கிறான். ஆனால், அகிலாவோ, ''நான் நீங்கள் தேடுகிற அகிலா அல்ல. நான் இதற்கு முன் உங்களைப் பார்த்ததே இல்லை. சுமங்களா என்ற பெயரில் சிநேகிதி எனக்கு யாருமில்லை. அப்படியொரு போட்டோவை நான் எடுக்கவேயில்லை'' என்று கூறி முகத்தில் கரியைப் பூசிவிட்டாள்.

இவ்வளவு சிக்கல் நிறைந்த சூழ்நிலைகளில் அந்தப் போட்டோ சுமங்களாவிடம் கிடைத்திருக்கிறது.

திருமணக் கோலத்தில் அப்படியொரு போட்டோவை எடுப்பதை அவன் ஆரம்பத்திலேயே எதிர்த்ததில் மறைவாகத் தென்பட்ட எதிர்காலத் திட்டத்தை அவளுடைய தோழிகளும் உணர்ந்திருந்ததால் அந்தப் போட்டோவின் விஷயத்தில் அவர்களும் தீர்க்கமுடன் இருந்திருக்கிறார்கள்.

அந்தப் புகைப்படத்தில் அவளும் சிரிக்கவில்லை, அவனும் சிரிக்கவில்லை. இருவர் முகத்திலும் புதுப் பிணைப்பின் மாதுர்ய பாவம் கொஞ்சம் கூட இல்லை. தவிர்க்க முடியாத பலவந்தம்தான் இங்கே இப்படி



நிற்கின்றேன் என்பது போலப் பரமேஸ்வரனின் முகம் இருந்தது.

'இவர் ஏமாற்றப் போகிறார் என்று எனக்கு முன்கூட்டியே தெரியும். என்றாலும் நான் ஏதேனும் ஒரு வகையில் இவரை மணந்தே ஆக வேண்டும் என்பதால் இவருடன் நிற்கிறேன்' என்பது போலத் தான் அவளும் காட்சி யளித்தாள்.

படத்தைப் பார்த்து அவள் சிரித்தாள். அன்று அந்தத் திருமணப் பதிவு அலுவலகத்தில் பார்த்ததுதான். இன்றுவரை அவனைப் பார்க்கவேயில்லை. பார்க்க முயற்சி செய்யவில்லை.

ஆனால், இதோ இந்தப் படத்தை மட்டும் தினம் தினம் பார்க்கிறாள். அதைப் பார்க்கிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவள் உள் மனத்தில் சுரக்கும் ஆவேசம்... ஆத்திரம் அவளை மெதுவாக மற்றொரு எல்லைக்கு அழைத்துப் போய்க் கொண்டிருந்தது.

அது எந்த எல்லை? இந்த மனம் இப்படி மடை திருப்பிக் கொண்டு எங்கே பாய்கிறது?

மூடிக் கிடக்கும் அறைக்குள் யாருமில்லாத நேரத்தில் தனியே நுழையும் ஒரு அந்நியமான உணர்வு எதனால் உருவாகிறது? அந்நியோந்நியம் செத்து விட்டாலே அந்நியம் தேவைதானே!

'பரமேஸ்வரன் ஸார், உங்களை நான் சும்மா விட மாட்டேன். இப்பொழுது அடங்கி ஒடுங்கி இருக்கிறேன். உங்களைத் தேட மாட்டேன். என்றும் நிம்மதியுடன் இருங்கள். சில காலம் உங்களுக்கு அவகாசம் தருகிறேன். ஏன் தெரியுமா? உங்களுடன் மோதப் புதிய ஆயுதங்களைச் சேகரிக்க வேண்டும். புதிய அணிவகுப்பொன்றை உருவாக்கிக் கொள்ள எனக்கு நிறைய அவகாசம் தேவை. அதுவரையில் நீங்கள் ஊர் சுற்றலாம். ஒன்றுமே நடக்காதது போலப் போய்க் கொண்டிருக்கலாம். அதன் பிறகு தான் நமது போராட்டமே இருக்கிறது....'

அவள் வன்மத்துடன் போட்டோவைப் பார்த்துச் சிரித்தாள்.

ஆர்ட்ஸ் காலேஜ் பஸ்ஸ்டாப்பில் இறங்கி நடைபாதையோரமாகப் போய்க் கொண்டிருந்தாள் கமலங்களா.

அப்பா : "எதுக்குடா லைனுருலரை எடுத்துக்கிட்டு வர்றே...?"

மகன் : "நீதானே சொன்னே.., பெண் பார்க்கப் போகணும் ஜோம்புறு!"

- உ. ராஜாஜி



அன்று மாலை அவளுக்காகப் பொது நூலகத்தில் கோமதி காத்திருப்பதாகக் கூறியிருந்தாள். ஹோட்டல் ஒன்றில் மாலை டிபன் சாப்பிட்டு விட்டு அப்படியே நகரில் நடக்கும் நல்ல சினிமாவுக்குப் போகத் திட்டமிட்டிருந்தார்கள்.

அவள் ஒரு நிறுவனத்தின் நுழைவாயிலைத் தாண்டும்போது அவளை இடிக்கிற மாதிரி வந்த மோட்டார் சைக்கிளுக்கு வழி விட்டுப் பின்னால் நகர்ந்து கொண்டாள். அப்போது பரமேஸ்வரன் உள்ளே நுழைந்துகொண்டிருந்தான். அந்த வேகத்தில் அவன் அவளைப் பார்த்திருப்பானா என்று தெரியவில்லை.

அந்தக் கட்டிடத்துக்குள் இரண்டு மூன்று தொழில் நுட்ப நிறுவனங்கள் இருப்பது அவளுக்குத் தெரியும்.

சிமெண்ட் தளத்தில் மோட்டார் சைக்கிள் ஓடி ஒரு மாடிக் கட்டிடத்தின் கீழே போய் நின்றவரையில் அதையே கவனித்தாள் கமலங்களா.

'இவர் இங்கே வேலை செய்கிறாரா? அப்படியெல்லாம் வணங்கி உட்கார்ந்து வேலை செய்கிறவரில்லையே! அவரது உல்லாசப் போக்குக்கு அதற்கு ஒத்து வராதே!'

அவள் அங்கேயே நின்றாள்.

மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு வெளியே சிமெண்ட் தளத்தில் நின்றான், பரமேஸ்வரன். யாரையோ எதிர்பார்த்து நிற்பது போலத் தோன்றியது. அவன் நின்ற நிலை.

'யாரை எதிர்பார்த்து நிற்கிறான் என்பதைப் பார்த்து விடுவோமே! இன்னும் சற்று உள்ளே நடந்து அவன் கண்ணில் படாமல்....'

எதிரில் மற்றொரு நிறுவனத்தின் வரவேற்பு அறையின் கண்ணாடி ஷட்டருக்குப் பக்கத்தில் மறைவாக நின்று கொண்டு கவனிக்கலானாள்.

இப்பொழுது அவள், எதிர்ப்புற அலுவலகத்திலிருந்து வெளியே வரக் கூடியவர்களையும் பார்க்க முடியும்.

பரமேஸ்வரனின் உடையிலிருந்து அதை எத்தனை கவனமுடன் உடுத்திக் கொண்டிருப்பான் என்பதைப் புரிந்து கொண்டாள். அதிலேயே அவனுடைய உல்லாசமான மனப் போக்கு தெரிந்தது. பெரிய பெரிய பூக்கள் உள்ள ஷர்ட். மீடியம் பெல், காலில் சற்றே உயரமான ஷூ. கழுத்தைச் சுற்றிச் சிவப்பு நிறக் கைக்குட்டை. மார்பு தெரிகிற மாதிரி ஷர்ட் திறந்திருந்தது.

கண்ணாடி ஷட்டருக்கு உட்பக்கம் நின்ற கமலங்களா எதிரே இருந்த கட்டடத்தைப் பார்த்தாள். அதில் ஒரு பேங்க், இன்ஜினியரிங் உதிரி உறுப்புக்கள் வியாபார நிறுவனம். இதைத் தவிர ஒரு சினிமாக் கம்பெனியின் பெயர்ப் பலகை: 'ஸ்டார் ஃபிலிம் மேக்கர்ஸ்' இப்படி மூன்று பெயர்ப் பலகை வெவ்வேறு விதமாக வெவ்வேறு வர்ணங்களில் காணப்பட்டன.

அவள் அதைப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அந்தக் கட்டடத்தினின்று சிரித்த முகத்துடன் ஒரு பெண் வெளிப்பட்டாள்.

''ஹலோ பரசு!''
''ஹாய்!''

அவன் ஏதோ கேட்க அவளோ கையில் இருந்த டம்பப் பையினுல் அவனைச் செல்லமாக அடிக்கிறுள். அவளைப் பார்த்தால் ஒரு நிறுவனத்தில் வேலை செய்துவிட்டு வரும் களைப்புடன் காணப்படவில்லை. மேக்கப் ரூமிலிருந்து வெளியே வருபவள் போலக் காணப்பட்டாள்.

அவளைச் சுமங்களா நன்ருகப் பார்த்துக் கொண்டாள். அந்த முகம் அவ்வளவு எளிதில் மறந்து போகிற மாதிரியான முகமல்ல. அதில் வசீகரமிருந்தது. அதே நேரத்தில் செயற்கைத்தனங்களும் வெளிப்பட்டன.

அவனுடைய மோட்டார் சைக்கிளில் அவனுக்குப் பின்னுல் அந்த அழகி ஏறி உட்கார்ந்து கொண்டாள். அரை வட்ட மடித்த மோட்டார் சைக்கிள் வெளியே' புறப்பட்டது.

'யார் இவள்? இவள் இவருக்குக் கிடைத்திருக்கிற புதிய சுமங்களாவாக இருப்பாள். இப்பொழுதும் அதே பழவந்தாங்கல் பங்களாவுக்குத்தான் இருக்குமோ? பின்னுல் தொடர்ந்து போய்ப் பார்த்தால் என்ன?'

வெளியே வந்தாள், சுமங்களா.

பொது நூலக வாசலுக்கு வந்தபோது அங்கே கோமதி நின்று கொண்டிருந்தாள். அவளிடம் தான் பரமேஸ்வரனைப் பார்த்த விவரத்தைச் சொன்னுள்.

சினிமாவுக்குப் போவதாக இருந்த திட்டம் கைவிடப்பட்டது. பழவந்தாங்கலுக்குப் புறப்பட்டார்கள்.

அவள், பங்களாவை அடையாளம் காட்டினுள். டாக்ஸியைச் சற்றுத் தொலைவிலேயே டிஸ்போஸ் செய்து விட்டுப் பங்களாவை நெருங்கினபோது...

அதன் போர்ட்டிகோவில் வட்டமாக சோபாக்களைப் போட்டுக்கொண்டு யாரெல்லாமோ உட்கார்ந்திருந்தார்கள்.

கோமதி அவர்களிடம் என்னவோ ஹிந்தியில் கேட்டாள். அவர்களிடமிருந்து வந்த பதிலைச் சுமங்களாவிடம் சொன்னுள்.


''பங்களாவை அவர்கள் ரொம்ப நாட்களுக்கு முன்பே விலைக்கு வாங்கிக் குடியும் வந்துவிட்டார்களாம். தற்போது அது பரமேஸ்வரனின் பங்களா அல்ல என்று கூறி விட்டார்கள்.''

இதைக் கேட்டுச் சுமங்களா சோர்வடைந்தாள்.

பரமேஸ்வரன் திட்டமிட்டே இதைச் செய்திருக்கிறுன். இப்போது அவனுடைய காதல் விவகாரங்கள் வேறு புதிய இடத்திற்கு இடம் மாறியிருக்கிறது.

அவள் யார் என்பதை உடனே கண்டு பிடித்தாக வேண்டும். அவனுடைய புதிய வலையில் வந்து விழுந்திருக்கும் அந்த விட்டிலின் கதியைப் பற்றி அதனிடமே எடுத்துச் சொல்ல வேண்டும். (தொடரும்)

சிட்னியில் சில சிறப்பு அம்சங்கள்





- இந்தியாவிற்கு எதிராக முதன் முதலாக அதுவும் கேப்டஞக ஆடும் 'கிரெக் சேப்பலுக்கு' முதல் டெஸ்டிலேயே வெற்றி.
- பத்தொன்பது டெஸ்டுகளில் தோல்வி காணுத கவாஸ்கரின் தலைமையிலான இந்திய அணி இந்த டெஸ்டில் முதன் முதலாகத் தோல்வியைத் தழுவியது.
- எந்த டெஸ்டிலும் ஹெல்மெட் அணியாத விஸ்வநாத் முதன் முதலாக இந்த டெஸ்டில் தான் ஹெல்மெட் அணிந்தார்.
- காவ்ரி தமது நூருவது விக்கெட்டை இந்த டெஸ்டில் (ராட்னி மார்ஷின் விக்கெட்டை) எடுத்தார்.
- ஆஸ்திரேலியா இதுவரை இந்தியாவுக்கு எதிராக ஆடியதில் இந்த டெஸ்டில்தான் விக்கெட் கீப்பரான மார்ஷ் எட்டு விக்கெட்கள் விழ உதவிச் சாதனை புரிந்திருக்கிறுர். கெளின்ரைட் ஸ்டீல் ரிக்ஸன் முதலிய விக்கெட் கீப்பர்கள் ஆறு விக்கெட்கள் விழவே காரணமாயிருந்திருக்கின்றனர்.
- திலீப் தோஷி 27 ஓவர்கள் வீசியும், ஒரு Maiden ஓவரும் எடுக்காதது இந்த டெஸ்டில் தான்.

- கணஜா






புதிய
சன்சார்
டிட்டர்ஜெண்ட் சலவைப் பவுடர்
Sansar
DETERGENT WASHING POWDER
THE FAMILY ECONOMY PACK
MAXIMUM CONSUMER PRICE
Rs. 12.50
(LOCAL TAXES EXTRA)
1kg
Net weight
MANUFACTURED BY
KARNATAKA SOAPS AND DETERGENTS LIMITED
BANGALORE 560 055
அதிகபட்ச விலை
ரூ. 12·50
(உள்ளூர் வரிகள் தனி)
அறிமுகச் சலுகை
1 Kg. பாக்கெட் ரூ. 9-50
போட்டியில் கலந்து கொண்டு
விசேஷ தள்ளுபடி கூப்பனை
வெல்லுங்கள்.
கர்நாடகா சோப்ஸ் அண்டு டிட்டர்ஜெண்ட் லிமிடெட் அளிக்கும் தரமான தயாரிப்பு
விற்பனை செய்பவர்கள் : மைசூர் சேல்ஸ் இண்டர்நேஷனல் லிட்., பெங்களூர்.

"வித்தியாசங்கள் என்ன?" போட்டி

முதல் சரியான 15,000 விடைகளுக்கே விசேஷ தள்ளுபடி கூப்பன்கள்!

பாலிதீன் பாக்கெட்டிலுள்ள புதிய சன்சார் டிட்டர்ஜெண்ட் பவுடரின் விலை 1 Kg. ரூ. 12.50 (வரிகள் தனி) ஆனால் விசேஷ சலுகையாக சன்சார் உங்களுக்கு ரூ. 9.50 (வரிகள் தனி) க்கு கிடைக்கிறது. இப்போட்டியில் கலந்து கொள்வதன் மூலம் விசேஷ அறிமுகச் சலுகையைப் பெறுங்கள். இந்த டிட்டர்ஜெண்ட் பவுடர் உங்கள் பணத்திற்கு சரியான மதிப்பைத் தரும் என்று நீங்களே கண்டுணர்வீர்கள்.


இங்கே கத்தரிக்கவும்

சன்சார் பாலிதீன் பாக்கெட்டில் எத்தனை கலர்கள் உள்ளன?

____

சுலபமான இலவசப் போட்டி

(A)



(B)



- மேலே உள்ள கேள்விக்கு குறிப்பிட்ட இடத்தில் விடை அளியுங்கள்.
- மேலே உள்ள இரண்டு பாக்கெட்டுகளுக்கும் ஆறு வித்தியாசங்கள் உள்ளன. 'A' உண்மையான பாக்கெட். வித்தியாசங்களை 'B' பாக்கெட்டில் சிறு வட்டத்தில் குறியிட்டு, நுழைவுத்தாளை கத்தரித்து, அதனுடன் உங்களுடைய பெயர், விலாசத்தை தெளிவாக ஒரு வெள்ளைத்தாளில் எழுதி, கீழ்கண்ட விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

  "வித்தியாசங்கள் என்ன" போட்டி,
  மைசூர் சேல்ஸ் இண்டர்நேஷனல் லிட்,
  லக்ஷ்மி பவன், 609, மவுண்ட் ரோடு, சென்னை-600 006.
- இப்போட்டியில் தீர்ப்புக் குழுவினரின் தீர்ப்பே முடிவானது. இது சம்பந்தமாக வேறு எந்த கடிதப் போக்குவரத்தும் அனுமதிக்கப் படமாட்டாது.
- ஒரு குடும்பத்திற்கு ஒரு நுழைவுத்தாள் மட்டுமே.

முந்துங்கள் இன்றே கலந்து கொள்ளுங்கள்

KI

MCA-SDP-101-TAM

விமலா வித்தியாசமானவள்

ராஜேஷ் குமார்



"ஏய் அமிதாப்...."

ஆறரை அடி உயரத்தில் கொக்காய்ப் போன ஓர் இளைஞனைக் கைதட்டி அழைத்து விட்டுச் சட்டென்று முகத்தை அந்தப் பக்கமாய்த் திருப்பிக் கொண்டாள் விமலா.

அந்த இளைஞன் திரும்பினான். அழைத்தது யார் என்று புரியாமல் குழம்பினான். அந்த பஸ் ஸ்டாண்டில் நின்றிருக்கும் மாணவிகளின் கும்பல்களில் — எந்தக் கும்பலில் இருந்து அந்த அழைப்பு வந்தது? புரியாமல், 'பே' என்று விழித்துவிட்டு நகர ஆரம்பித்தான்.

"ஏய்! அமிதாப்புக்கு அண்ணனே! உன்னைத்தான்....!"

அவனுக்குப் புரிந்து விட்டது. யாரோ ஒரு குறும்புக்காரி அவனைக் காமெண்ட் பண்ணுகிறாள். திரும்பிப் பார்த்தால் ஆபத்து. அவன் மனசில் அலாரம் அடிக்க அவன் வெருண்டு ஓடினான்.

விமலாவைச் சுற்றி நின்ற மாணவிகள் சலங்கைகளை ஒட்டு மொத்தமாகக் குலுக்கின மாதிரி சிரித்தார்கள். விமலா பெரிதாகச் சிரித்தாள்.

"டீ... விமலா.... வேண்டாண்டி....! ஆம்பிளைகளையெல்லாம் இது மாதிரி டீஸ் பண்ணாதேடி...எனக்குப் பயமா இருக்குடி!" பி.எஸ். ஸி. பஸ்ட் இயரில் படிக்கும் தனலட்சுமி அழாக் குறையாகச் சொன்னாள்.

"ஆமாண்டி விமலா! ஒருத்தன் மாதிரி ஒருத்தன் இருக்க மாட்டான். சண்டைக்கு வந்தாலும் வந்துடுவான்..." பி.ஏ. எகனாமிக்ஸ் படிக்கும் மைதிலி எச்சரித்தாள்.

"சர்த்தான் போடி! இந்த விமலா கிட்டே எவனாச்சும் வாய் கொடுத்தான்னா அவ்வளவுதான்! நான் அரை குறையாக் கத்துக்கிட்ட கராத்தேயை அவன் மேல விட்டுடுவேன்..."

அவள் போக வேண்டிய பஸ் வந்தது. விமலா ஒரு வீராங்கனையாக பஸ்ஸுக்குள் ஏறினாள்.

விமலா கொஞ்சம் வித்தியாசமானவள் தான்!

தனியாகச் செல்லும் அப்பாவிப் பெண்களை 'காமெண்ட்' பண்ண ஆண்களுக்கு எவ்வளவு உரிமை இருக்கிறதோ அவ்வளவு உரிமை தனியாகச் செல்லும் ஒரு வாலிபனைப் பெண்கள் 'கமெண்ட்' பண்ண உரிமையுண்டு என்று நினைப்பவள்.

தோழிகளோடு சினிமாவுக்குப் போனால் அங்கேயும் தன் கைவரிசையைக் காட்டுவாள் விமலா. அப்பாவியாய்த் தெரியும் வாலிபனுக்குப் பின்னால் போய் உட்கார்ந்து கொள்வாள். வானிடி பாக்கைப் பிரித்துச் சணல் கயிற்றை எடுத்துக் கொள்வாள். சினிமா பார்க்கும் மும்முரத்தில் ஆழ்ந்து கிடக்கும் வாலிபனின் பின்பக்கச் சட்டை நுனியைக் கயிற்றால் கட்டுவாள். தன் மறு முனையை அப்படியே விட்டு விடுவாள். இடைவேளை விட்டதும் தியேட்டரில் விளக்குகள் பளீரிட ஆரம்பித்ததும் இயற்கையின் உந்துதலைத் தணிக்க அந்த வாலிபன் எழுந்து போவான். கூடவே அவன் பின் பக்கம் வால் முளைத்த மாதிரி அந்தச் சணல் கயிறும் போகும்.

பார்ப்பவர்கள் எல்லோரும் சிரிக்க அந்த வாலிபன் புரியாமல் நடப்பான். விமலா இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்று கன்னத்தில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பாள். உடன் செல்லும் தோழிகளுக்கு உள்ளூறப் பயம் உதைக்கும்.

சினிமா முடிந்து வெளியே வந்தால் உடனடியாக பஸ்ஸைப் பிடித்துவிட மாட்டாள் விமலா. காரில் தனியாய் வந்திருக்கும் ஆண்களிடம் போவாள்.

"நீங்க எந்தப் பக்கம் போறீங்க?"

"நான் ஆர். எஸ். புரம் டி.பி. ரோடு போகணும்...." — அவன் சொல்ல விமலா சந்தோஷமாய் ஆர்ப்பரிப்பாள்...' "க்ளாட் டு ஹியர் இட்... நானும் அந்தப் பக்கம் தான் போகணும். வில் யூ டிராப் மீ...?"

அவன் 'எஸ்' என்று தலையாட்டுவதற்குள் காரின் பின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே ஏறிவிடுவாள். சளசளவென்று அவனிடம் பேசி, அவனுடைய குடும்பம், பிஸினஸ், அவனுடைய பர்சனல் வீக்னஸ் எல்லாவற்றையும் கேட்டு முடிப்பதற்குள் அவளுடைய தெரு முனை வந்துவிடும்.

காரில் லிஃப்ட் கேட்பது ஒரு கலை. அதில் பி.எச்.டி. வாங்கியிருந்தாள் விமலா.

சக தோழிகள் அவளைப் பயமுறுத்துவார்கள்.

விமலா வீட்டில்—

விமலாவின் இந்தப் போக்குக்கு அவளுடைய அப்பாவின் ஆதரவு இருந்தது.

ஆனால் அம்மாவும் அவளுடைய அண்ணன் கணேசனும் சிவப்புக் கொடி காட்டுவார்கள்.

அண்ணன்காரன் கணேசன், பாதி கிண்டலும், கண்டிப்புமாய்ச் சொல்வான். ''நீ இப்படியே ஒவ்வொருத்தனையும்கமெண்ட் பண்ணிக்கிட்டு... வால்தனம் பண்ணிக்கிட்டு...கொஞ்சம் கூடப் பயமில்லாம லிப்ட் கேட்டுட்டும் இருந்தியானு நாளைக்கு எவனும் உன்னைக் கட்டிக்க மாட்டான்...''

''வராட்டிப் போகட்டுமே... என்னோட டைப்பை எவன் புரிஞ்சுக்கிட்டு வர்றானோ அவன் வரட்டும். கோழைப் பசங்களை நான் விரும்பறதில்லே....''

''எக்கேடு கெட்டுப் போ..'' – அங்கலாய்ப்பான் அண்ணன்.

அன்றைக்குக் காலே.

குளித்து முடித்து டிரெஸ் செய்து முன் அறைக்கு வந்தபோது டெலிபோன் கிர்ர்ர்ங் கியது.



ரிஸீவரை எடுத்தாள் விமலா. ''ஹலோ.. விமல் ஹியர்....''

''விமலா நீயா? நான் லாவண்யா பேசறேன்!''

''என்னடி லாவ்? காலங்காத்தாலே போன் என்ன விஷயம்?''

''டீ... விமலா... இன்னிக்கு எனக்குப் பிறந்த நாள்டி!''

''அப்போ இன்னிக்கு உன்னோட ட்ரீட் உண்டு?''

''ஷ்யூரா! மைதிலி, வேதா, தனலட்சுமி, சியாமளா... பானு எல்லார்க்கும் போன் பண்ணிச் சொல்லிட்டேன். ப்ரோக்ராம் கேட்டுக்கோ! காலே பத்து மணி என்னோட பர்த்டே கொண்டாட்டம். மத்தியானம் ஒரு மணி... செமத்தியான லஞ்ச்... ஈவினிங் டிபன் வித் சூர்பானி சினிமா...''

''ஹைய்யோ!'' — மகிழ்ச்சியால் கூவினாள் விமலா. ரிஸீவரை வைத்துவிட்டு 'பாத் பன் ஜாயே... பாடி 'க்க்க்வாக்க்க்' என்று மியூஸிக் எபக்ட் கொடுத்தாள்.

''இன்னிக்கு ஏதோ ஒரி ட்ரீட் உனக்குக் கிடைக்கும் போலிருக்கே. லஞ்ச்... டிபன்... சூர்பானி....''

''உனக்கெப்படித் தெரியும்?'' வியப்போடு பார்த்தாள் விமலா.

''லாவ்....! அதான் உன்னோட கீச்சுக் குரல் தோழிக்காரி...டெலிபோன்ல ஏழெட்டுக் கிராமத்துக்குக் கேட்கிற மாதிரி கத்தினாளே....!''

''எனக்குக் கிடைக்கிற ட்ரீட் மேலே உன்னோட கண்... பட்டுடுச்சா... இனிமே எனக்கு வயித்து வலிதான்....''

மார்புகள் ஏறி இறங்கப் பெருமூச்சு விட்டாள் விமலா.

சூர்பானி விட்டுக் கூட்டம் கசமுசவென்று கலைந்து கொண்டிருந்தது. ஜீனத்தின் பிரும்மாண்டமான கட் அவுட் கால்களுக்குக் கீழே அடுத்த காட்சிக்காக ஒரு கும்பல் நின்றிருந்தது. கார்கள் கீ... கீ... என்று அலறிக் கொண்டு வழி கேட்டன.

''நெம்பர் செவன் வர்ற நேரம்! பஸ்ஸில போயிடலாண்டி...'' - லாவண்யா சொல்லத் தோழியர் கூட்டம் ஆமாம் போட்டது.

''மீன் பிடிக்கப் புழு இல்லே... போய் அதோ இருக்கிற கார்ப்பரேஷன் குழாயில் இதில் தண்ணி பிடிச்சுக்கிட்டு வா... வடிகட்டி அடியிலிருக்கிற புழுக்களை எடுத்துக்கிடுவோம்!''

- உ. ராஜாஜி



விமலா அலட்சியமாய் உதட்டைச் சுளித்தாள்.

''பஸ்ஸா? ஏண்டி உங்களுக்கெல்லாம் பைத்தியமா பிடிச்சிருக்கு? இத்தினி கார் இங்கே வகை வகையா நிக்கிறப்போ எதுக்காகப் பஸ்ஸில் போகணும்... ஏதாச்சும் ஒரு கார்ல லிப்ட் கேட்போம்...''

அனைவரும் பஸ்ஸைாக்குச் சென்றுவிடக் கண்களைச் சுழற்றினாள் விமலா.

அதோ! அந்த பியட் காரின் கதவுக்கருகிலே சாய்ந்தபடி — வெள்ளை சர்ட், வெள்ளை பாண்ட் அணிந்து — கனமான கறுப்பு வண்ண பிரேம் கண்ணாடியில் — சிவப்பாய் நின்றிருக்கும் அந்த இளைஞனை நெருங்கிக் கேட்டால் என்ன? — கேள்வி உதயமாகி முடிப்பதற்குள் அவனை நோக்கிப் போனாள்.

. அவன் சிகரெட் பிடித்தபடி மற்றக் கார்கள் போகும்வரை காத்திருந்தான்.

''எக்ஸ்யூஸ் மீ.... உங்க ரெஸிடென்ஸுக்கு நீங்க எந்த வழியாப் போகப் போறீங்க?''

''நான் கௌலி பிரவுன் ரோடு போகணும்'' என்றான் அவன்.

''இஃப் யூ டோண்ட் மைண்ட் குட் யூ வில் மீ எ லிப்ட் அப் டு ஆர். எஸ். புரம் சம்பந்த முதலியார் ரோட்'' — இயல்பாய்ப் பேசினாள் விமலா.

ஒரு கணம் தயங்கினான் அவன். மறு கணம் புன்முறுவல் ஒன்றைப் பூத்தபடி ''வித் ப்ளஷர்'' என்றான். காரின் பின்புறக் கதவைத் திறந்து விட்டான்.

''என் பேரு விமலா. உங்க பேரை நான் தெரிஞ்சுக்கலாமா?''

''எம் பேரு சூர்யகுமார். ப்ரண்ட்ஸ் 'சூர்யா'ன்னு கூப்பிடுவாங்க. சொந்தமா லெதர் பிசினஸ் பண்றேன்... சிட் பண்ட் நடத்தறேன்....''

காரை அசுர வேகத்தில் கிளப்பினான் சூர்யா.

நடுவில் ஓர் இடத்தில் நிறுத்தி இரு முரடர்களை ஏற்றிக் கொண்டான் சூர்யா. எல்லாம் விநாடி நேரத்தில் — இயந்திரத் தனமாய் நடந்து முடிந்தன.

திகைத்துப்போன விமலா சுய உணர்வுக்கு மீண்டு கத்த வாயைத் திறந்தாள்.

கழுத்தோரம் சொர சொரவென்று ஏதோ நெருடியது. விழிகளைத் தாழ்த்திப் பார்த்தாள். அரை அடி நீளத்தில் அந்த இருட்டிலும் அழகாய்ப் பளபளத்தது அந்தப் பிச்சுவா.

கார் ஒப்பணக்கார வீதியைத் தாண்டிக் கொண்டிருந்தது.

சூர்யா காரை ஓடித்துக் கொண்டே— கோணலாய் ஒரு சிரிப்பை உதிர்த்துக் கொண்டே திரும்பி விமலாவைப் பார்த்தான். ''மிஸ் விமலா! நீங்க எங்கே போகணும்னு சொன்னீங்க? சம்பந்தம் முதலியார் ரோடா?'' அவன் குரலில் கேலி இருந்தது.

''யூ ராஸ்கல்...! முதல்ல காரை நிறுத்து! நான் இறங்கிக்கிறேன்.'' சீறினாள் விமலா. அதைக் கேட்டு இன்னமும் பெரிதாய்ச் சிரித்தான் சூர்யா.

''ஸாரி... மிஸ் விமலா... இனிமே இந்தக் கார் எங்கேயும் நிற்காது. என்னோட தோப்பு பங்களாகிட்டதான் போய் நிக்கும். மிஸ் விமலா! அழகான பொண்ணைப் பார்த் துட்டா படிச்சவனும் ஒண்ணு படிக்காத வனும் ஒண்ணுதான். எனக்குப் பணிஞ்சு போயிட்டா பிரச்னை இல்லே. அடம் பிடிச்சியோ அவ்வளவுதான்!''

கார் இப்போது தார் ரோட்டை விட்டு விட்டுச் செம்மண் பாதையில் போய்க்கொண் டிருந்தது. குடிகாரனைப் போல் அசைந்து அசைந்து.... ஏறக்குறைய பத்து நிமிஷம்...

கார் 'தடக்'கென்று நின்றது.

காரின் கதவுகள் திறந்து கொள்ள விமலா வெளியே இழுக்கப்பட்டாள்.

''ம்... நட....''

சுற்று முற்றும் பார்த்தாள். எதிரே தென்னை மரங்களுக்கு இடையே அந்தப் பங் களா தெரிந்தது. சுற்றிலும் வயல்வெளிகள். காற்றில் கலந்த சோளப் பயிரின் மணம். தகங்கிய வெள்ளித் தட்டமாய் வானத்தில் தெரிந்த நிலா.

சூர்யா முன்னால் நடந்து கொண்டிருந் தான்.

இரண்டு முரடர்களும் விமலாவின் ஆளுக் கொரு புஜத்தைப் பற்றிக்கொள்ளப்பலியாடு மாதிரி விமலா அவன் பின்னே நடந்தாள்.

காலிங் பெல்லைக் கதற வைத்தான் பிரகாஷ். சில விநாடிகளில் அறைக் கதவு திறக்க வேலைக்காரக் கிழவன் எட்டிப் பார்த் தான். விமலாவை அறைக்குள் தள்ளி விட்டு முரடர்கள் சென்றிருந்தனர்.

''ஏய் இப்படி வாடி! நான் சொல்றதை ஒழுங்காக் கேக்கணும்... கேக்காட்டி அதோ சுவரிலே தொங்குது பார் முள்ளு சவுக்கு அதாலே விளாசிடுவேன்....''

பயந்துகொண்டே அருகில் வந்தாள் விமலா.

''டேய் சூர்யா....'' — திடீரென்று அந்த ஆண் குரல் கேட்டது.

திரும்பினாள் விமலா.

அவளுடைய அண்ணன் கணேசன் புன்னகையோடு நின்றிருந்தான்.

''அண்ணா!... அண்ணா!'' — ஆவேசமாய் அலறியபடி கணேசனை நோக்கி ஓடினாள் விமலா

கணேசன் அவளை விலக்கியபடியே சூர் யாவை நோக்கி நடந்தான் ''ஏண்டா விம லாவை இப்படித்தான் மிரட்டறதா? கொஞ் சம் இதமா மிரட்டப்படாதா? பார்... எப்படி நடுங்கறா!''

சூர்யா சிரித்தான். ''ஆமாண்டா திட் டம் போட்டுக் கொடுத்தவன் நீ... எப்படி பேசணும்னு டயலாக்ஸ் சொல்லிக் கொடுத் தவன் நீ.... இப்ப வந்து மிரட்டும்போது இதமா மிரட்டக் கூடாதான்னு கேட்டா என்னடா அர்த்தம்?''

விமலா பிரமித்துப் போய் நின்றாள்.

''என்ன விமலா? திகைச்சுப் போய் நின் னுட்டே? முன் பின் தெரியாதவங்க கார்லே லிஃப்ட் கேட்டு ஏறினா என்ன ஆகும்னு காட் டத்தான் இந்தத்திட்டத்தைப் போட்டேன். என்னோட பிரண்ட் சூர்யா இந்தத் திட் டத்துக்கு உதவி பண்றதா சொன்னான். அமர்க்களப்படுத்தி உன்னை நடுங்க வெச் சுட்டான் பார்த்தியா? இனிமே கண்டவங்க கார்ல லிஃப்ட் கேட்டு ஏறுவியா?''

விமலா தொண்டை அடைக்க 'இல்லே' என்பது போல் தலையாட்டினாள்.

சூர்யா மெல்லப்புன்னகைத்தபடி அவளைப் பார்த்தான். சொன்னான்; ''மிஸ் விமலா நம்ம தமிழ்ப்பட வசன கர்த்தாக்கள் அடிக்கடி ஒரு வசனம் எழுதுவாங்க தெரி யுமா? முள்ளுச் செடி வாழை இலை மேல் பட்டாலும் சரி, வாழையே முள்ளுச் செடி மேல் பட்டாலும் சரி... சேதம் வாழைக்குத் தான்னு! அதே மாதிரிதான் லேடீஸும்! ஆம்பிளைங்களைத் தேடி அவங்க போனாலும் சரி, ஆம்பிளைங்களே அவங்களைத் தேடிட்டு வந்தாலும் சரி... பாதிக்கப்படப் போறது லேடீஸ்தான்... இப்ப உங்களுக்குப் புரிஞ் சிருக்கும்னு நெனைக்கிறேன்.''

சூர்யா பேசப் பேச...

அந்த வித்தியாசமான விமலா ஒரு சரா சரிப் பெண்ணாய் மாறிக் கொண்டிருந்தாள்!



அருள்வாக்கு

நல்லவனாக இரு!

● மனத்தில் அன்பும் சந்தோஷமும் இருக் கிறபோதுதான் புத்தி தெளிவாக இருக் கிறது. புத்தி தெளிவாக இருக்கிறபோது படித்தால் பாடம் நன்றாக ஏறுகிறது. கோபம் ஆத்திரம், அழுகை, பொறாமை எல்லாம் உண்டாகிறபோது புத்தி குழம்பிப் போகிறது. அப்போது படிப்பும் ஏறமாட்டேன்கிறது.

தினமும் கொஞ்ச நாழி ஸ்வாமியைப் பார்வதி — பரமசிவனாகவோ மகாலக்ஷ்மி— மகாவிஷ்ணுவாகவோ நினைத்துக் கொண்டு விட்டீர்களானால் மனம் நல்லதாக ஆகும். புத்தியும் தெளிவாக ஆகும். அதனால் படிப்பும் நன்றாக வரும். நன்றாக பாஸ் பண்ணி விடலாம்.

ரொம்பப் புத்திசாலியாக இருந்து நிறைய மார்க் வாங்கிப் பாஸ் பண்ணினால் கூட நல்லவன் என்று பெயர் எடுக்காவிட் டால் பிரயோஜனம் இல்லை. நல்ல பெயர் இல்லாவிட்டால் பிற்காலத்தில் வாழ்க் கையில் முன்னேறவே முடியாது. நல்லவ னாக இருந்துவிட்டால் அது நமக்கும் சந் தோஷம். மற்றவர்களுக்கும் சந்தோஷம். பெரியவனான பின் வாழ்க்கையில் முன் னுக்கு வருவதற்கும் அதுதான் உதவும்.

-ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேக ரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்



தானத்தில் சிறந்தது நிதானம்

திருமுருக கிருபானந்தவாரியார்

தானம் பலவகைப்படும். அன்னதானம், சொர்ண தானம், கோதானம், பூதானம், கன்னிகா தானம், ஞான தானம், க்ருக தானம், வஸ்திர தானம் முதலிய பல தானங்கள் இருக்கின்றன. இத்தகைய தானங்கள் எல்லாவற்றிலும் சிறந்தது நிதானமேயாகும்.

பல்லவபுரத்தில் பரமேச்வர வர்மா என்ற பார்த்திபன் கீர்த்தியுடன் அரசு புரிந்து வந்தான். அவனுடைய மனைவி அன்பும் பண்பும் நிறைந்தவள். கணவனைக் கடவுளாக எண்ணிக் கணவனுடைய கருத்தறிந்து தொண்டு செய்து வந்தாள். இவர்கள் செய்த தவப் பயனால் ஓர் ஆண் மகவு பிறந்தது. குழந்தை பிறந்த மகிழ்ச்சியினால் தம் ஏவலர்களுக்கு ஊதிய உயர்வு கொடுத்தார். எல்லாக் கோயில்களுக்கும் லட்ச தீபங்கள் இட்டு லட்சார்ச்சனைகள் செய்தார். குழந்தைக்குத் தங்கத்தாலும் வைரத்தாலும் அணிகலன்கள் இட்டு அழகு செய்தார். அம்மகவை அணிகலன்களுக்கு ஆசைப்பட்டுக் கள்வர்கள் கவர்ந்து கொண்டு போய் விட்டார்கள். மன்னவனும் அவரது மனைவியும் ஆறாத் துயரம் அடைந்தார்கள்.

காலச் சக்கரம் வேகமாக உருண்டோடியது. பதினைந்து ஆண்டுகளுக்குப் பின் மன்னர் பெருமான் ஒரு நாள் வேட்டைக்குப் புறப்பட்டான். அவனுடைய மனைவி ''சீக்கிரம் வந்துவிடுங்கள்'' என்று அன்புக் கட்டளை இட்டாள்.

மன்னன் வேடர் வில்லியருடன் கானகத்தில் கடுமையாக வேட்டையாடினான். வேட்டையாடுவதில் ஒரு தனித்த இன்பம் உண்டு. ஊக்கத்துடனும், உத்சாகத்துடனும் வேட்டையாடிப் பலப்பல விலங்கினங்களைக் கொன்று குவித்தான்.

இரவு பத்து மணி அளவில் அரண்மனையை அடைந்தான். பணியாளர்கள் அவனை வரவேற்றார்கள். ''மகாராணி எங்கே?'' என்று கேட்டான்.

''அம்மா மேலே படுத்து உறங்குகிறார்'' என்று ஏவலர்கள் கூறினார்கள். சமையல்காரன் அன்னம் படைக்க அரசன் அமைதியாக உண்டு மேல் மாடிக்குச் சென்றான். படுக்கையறையில் விசாலமான கட்டிலில் மகாராணி அமைதியாக உறங்கிக்கொண்டிருந்தாள். அவள் அருகில் ஒரு வாலிபன் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான்.

இதைக் கண்ட அரசன் அதிர்ச்சி யடைந்தான். அவனுடைய உள்ளத்தில் கோபக் கனல் கொதித்தெழுந்தது. கண்கள் சிவந்தன. உதடுகளும், மீசையும் துடித்தன. புருவங்கள் நிமிர்ந்தன. உடம்பில் சூடு ஏறியது. இந்தப் பதற்ற நிலையில் அவனுடைய மதிநலம் குன்றாது ஆராயத் தொடங்கியது.

இடையில் கத்தி இருந்தது. தலையில் புத்தியும் இருந்தது. புத்தி இல்லாமல் இருந்தால் கத்தி எடுத்து ஒரு விநாடியில் மனைவியின் அருகில் படுத்திருக்கும் வாலிபனை வெட்டி எறிந்திருப்பான்.

மன்னன் நிதானத்துடன் சிந்தனை செய்யத் தொடங்கினான். ''நம்முடைய மனைவி கற்புக்கரசி. இவள் மிதிக்கின்ற மண்

கூடத் தவறு செய்யாதே. பல நாள் நம்மூடன் அன்புடன் பழகியவள் நல்லவள் என்று தெளிந்த இவள் மேல் சந்தேகப்படுவது அறிவுடைமையாகாது.

தேரான் தெளிவும் தெளிந்தான்கண்
ஐயுறவும்
தீரா இடும்பை தரும்

என்று திருவள்ளுவர் திருக்குறளை நாம் படித்திருக்கிறோமே! வள்ளுவர் வாக்கை நான் பயன்படுத்த வேண்டுமே! நமது மனைவி உத்தமமான உயர்ந்த கற்பு உடையவள். அவள் ஒருபொழுதும் தவறு செய்ய மாட்டாள். இங்கே கதவுகளும், ஜன்னல்களும் திறந்த வண்ணமாக இருக்கின்றன. விளக்குகள் டீவும் ஒளி வீசி எரிந்து கொண்டிருக்கின்றன. மனைவியும் இந்த இளைஞனும் அமைதியாக உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் முகத்தில் சாந்தம் நிலவுகிறது.

ஒழுக்கத் தவறு உள்ளவர்கள் ஆசை வயப்பட்டு உறங்க மாட்டார்களே. கதவுகளும் ஜன்னல்களும் திறந்து இருக்காவே! விளக்கு எரியாதே! திருடுகின்றவன் தூங்க மாட்டானே!'' என்று அரசன் ஆர அமர நின்று சிந்தித்தான்.

அவசர புத்தி உள்ளவர்களுக்கு இந்தச் சிந்தனை ஏற்படாது. வாளினால் வெட்டி எறியத்தான் செய்வார்கள்.

அரசன் அமைதியுடன் மனைவியின் தோளில் கை வைத்தான். அரசமாதேவி திடுக்கிட்டு எழுந்தாள். தன் அருகில் படுத்திருந்தவனைப் பார்த்து, ''மகனே! உன் தந்தையார் வந்திருக்கிறார் எழுந்து வணங்கு!'' என்று கூறி எழுப்பினாள். மைந்தன் எழுந்து தந்தையின் மலரடியில் விழுந்து வணங்கினான்.

மகாராணி மன்னவனைப் பார்த்து, ''பெருமானே! கள்வர்களால் கவரப்பட்ட நமது தவப் புதல்வன் எவ்வாறோ நம்மை உணர்ந்து அவர்களிடமிருந்து தப்பித்து நம்மிடம் வந்து சேர்ந்தான். நமது தவம் வீணாகவில்லை'' என்றாள்.

மன்னவன் மகனை மார்புறத் தழுவி மகிழ்ந்தான். ''மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம்'' என்பார் திருவள்ளுவர். இறைவனுடன் வருவது சதானந்தம். மக்களால் வருவது சதானந்தம். மகனுடைய தோற்றத்தையும் ஏற்றத்தையும் அடி முதல் முடிவரை நோக்கினான். அவனுடைய கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகி ஓடியது. ஆத்திரப்பட்டு வெட்டி விருந்தால் எத்தனை பெரிய பிழையாக முடிந்திருக்கும்! சென்ற உயிர் மீண்டது போல் மகன் மீண்டு வந்ததைக் குறித்துப் பெரிதும் உவகை வெள்ளத்தில் நீந்தினான். மகனுடன் இனிது வாழ்ந்தான்.

ஆதலால் தானங்களில் சிறந்தது நிதானம் என்பது விளங்குகிறது.

இலங்கை பாராளுமன்றத்தில் முதல் தமிழ் பெண்மணி

''பொதுப் பணி, மக்கள் சேவை என்பது எனக்குப் புதியதல்ல. என் பரம்பரையின் இரத்தத்தில் ஊறிவந்த வழக்கம் தான்'' என்கிறார் ரங்கநாயகி பத்மநாதன்.

சுதந்திரம் அடைந்த பின்னர் இலங்கை பாராளு மன்றத்தில் உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப் பட்டுள்ள முதல் தமிழ்ப் பெண் பிரதிநிதி இவர்தான்.

காலஞ்சென்ற எம். பி. எம். கனகரத்தினத்தின் சகோதரி இவர். கனகரத்தினம் மட்டக்களப்பு மாவட்ட அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் மூன்று ஆண்டுகளாக அவருக்கு அந்தரங்கச் செயலாளராகப் பணிபுரிந்தவர் ரங்கநாயகி.



''இலங்கையிலேயே மிகவும் பெரிய தேர்தல் தொகுதிகள் என்று பார்த்தால் எனது ''பொத்துவில்'' மூன்றாவது இடத்தை வகிக்கிறது. இங்கு முஸ்லீம்கள் முதலாவதாகவும், அடுத்துத் தமிழர்களும், அதை யடுத்துச் சிங்களவர்களும் இருக்கிறார்கள். மூன்று இனத்தவர்களும் எனக்கு ஆதரவு தருகிறார்கள். எனது அண்ணனுக்கு இருந்த போலீஸ் பாதுகாப்புக்கூட எனக்குஇல்லை. நான் மிகச் சுதந்திரமாக எனது தொகுதி மக்களைச் சந்திக்கவும், செயல்படவும் முடிகிறது'' என்றார் ரங்கநாயகி.

கதிர்காமத்தில் நடைபெறும் ஆடிவேல் திருவிழாவுக்குப் போகும் பாத யாத்திரிகர்களுக்கு இவர் குடும்பம் பந்தல் அமைத்து அன்னதானம் பல ஆண்டுகளாகச் செய்து வருகிறது.

உலகத்தமிழ் மகாநாட்டில் கலந்து கொள்ளத் தமிழகம் வந்துள்ள இவரது முதல் ஆசை மதுரையில் இருக்கும் வரை தினசரி கோயிலுக்குப் போய் மீனாட்சி அம்மனைத் தரிசனம் செய்வதே.

— கே. வி. எஸ். மோகன்

நியாயங்கள்

வானத்தைக் கீறிக் கொண்டு மின்னல் வெட்டியது. இன்னும் சற்று நேரத்தில் இருட்டுச் செறிந்து மழை கொட்டோ கொட்டென்று கொட்டலாம். அல்லது கருமேகங்கள் அப்படியே கலைந்தும் போகலாம். யார் கண்டது?

பீடித் துண்டின் கடைசி மூச்சையும் இழுத்துக் காற்றில் உதறிவிட்டுத் தொண்டையைச் செருமிக் கொண்டார் முத்துவேல்.

''நாங்களெல்லாம் புதுசா ஒரு ஜாதி உண்டு பண்ணிட்டம். அதுதான் தேசிய ஜாதி. இந்த நாடு, சொதந்தரம் சொயராஜ்யம்னு எல்லாம் பேசற அவ்வளவு பேரும் நம்ம சாதிதான். நமக்குள்ளேயே கூடக் கொண்டு குடுத்துச் சம்பந்தம் பண்ணிக்கலாம்லே....''

அந்த ஜாதியைச் சேர்ந்தவர்தான் முத்துவேல். ஒரு முழத் தடியில் கொடியைச் செருகிக் கொண்டு ஆர்ப்பரித்துக் கிளம்பிய நாட்களை நினைத்துக் கொண்டால், முத்துவேல் அறுபது வருஷம் பின்னுக்குப் போய் விடுவார்.

கிராமத்தில் அவரைப் பார்த்துத்தான் மற்ற சிலருக்குத் தைரியம் வந்தது. அதுவும் தன்னந் தனியாக ஒரு நாள் கொடிக் கழியைப் பிடித்துக் கொண்டு போலீஸ்காரர்கள் அடித்து நொறுக்கியதை லட்சியமே பண்ணாமல் வந்தே மாதரம் என்று கூவியவாறு அவர் இழுத்துச் செல்லப்பட்டதைப் பார்த்த பிறகுதான் மற்றவர்களுக்கு வேகமும் வெறியும் தீராத தாகமாக எழுந்தன என்று சொல்ல வேண்டும்.

''அடிச்சா என்னுங்கறேன்... வந்தே... மாதரம்...னு நீட்டி முழக்கறப்போ எந்த வலியிலே தெரியுங்காட்டியும்? எத்தினி நாளைக்கிலே இவன் நம்மளெ அடிச்சுப்புடுவான்?''

பழைய காலத்து அனுபவங்களை அவர் சொல்லச் சொல்லக் கேட்டுக் கொண்டிருப்பதும் ஒரு சுகமான அனுபவம்தான்.

வானம் இன்னும் சற்று இருண்டு கனைத்தது. ''அப்பு! உள்ளே வாரியளா? மழெ வந்துடுச்சு....'' பொன்னம்மை வந்து நின்று அழைத்தபோது சற்றே நிமிர்ந்து பார்த்தார் முத்துவேல்.


இப்போது அவருக்கு வாய் பேசவில்லை. ஒருபுறம் உடம்பும் இழுத்துக் கொண்டது. ஈஸிச் சேரில் கைத் தாங்கலாய் 'அவரை எழுப்பி உள்ளே அழைத்துக் கொண்டு போகிற பொன்னம்மை — அவள் ஒருத்திதான் இப்போது அவருக்கு ஆதரவு.

பொடிப் பிஞ்சுகளாய் இரண்டை வைத்துக்கொண்டு திண்டாடுகிற யோகம் அவளுடையது. மூன்று வயசில் ஒன்றும் இரண்டு வயசில் ஒன்றும் வீட்டில் நெளிய, காரணமாயிருந்த பொன்னம்மையின் கணவன் இன்னும் நாலு வருஷத்துக்குவெளியே வர முடியாது. அரசியல் கலவர வழக்கு ஒன்றில் அவனுக்கு ஐந்தாண்டுகள் நீட்டி விட்டார்கள்.

அந்த அதிர்ச்சியே கிழவரை வெகுவாய்ப் பாதித்தது. மகளுக்குத் திருமணம் முடிக்கிறபோதே லேசு பாசாய் அவருக்குத் தெரியும்... ''மருமகவப்புள்ளே என்னமோ நெறயப் படிச்சிருக்காகன்னு தெரியும். கட்சியிலே கூட இருக்காப்பலே இருக்கே. இருங்க, இருங்க...ஆளு அரசியல் வேறமாதிரி போயிக்கிட்டிருக்கு. நாணயமான அரசியல்வாதின்னு பேர் வாங்கிடணும். அது போதும்.''

கிழவரின் ஆசைகள் நியாயமானவைதான். ஆனால் மருமகன் அவருடைய மனம் போல அமையவில்லை. அவனுடைய படிப்பறிவு திசை மாறி வேலை செய்தது.

முத்துவேலும், அவருடைய சகாக்களும் எந்த ஒரு லட்சியத்துக்காகக் கொடி பிடித்துக் கோஷம் போட்டார்களோ அது பெயரளவில்தான் நிறைவேறியது. இந்த மண் சுதந்திரமடைந்தாலும் மனிதர்களின் மனம் அடிமைப்பட்டே கிடக்கிறது.



முத்துவேல் இந்தத் தலைமுறையில் புறக்கணிக்கப்பட்ட மனிதர். வலுவில் வந்த ஒன்றிரண்டு பதவிகளையும் உதறித் தள்ளிய பிழைக்கத் தெரியாத மனிதர். அரசாங்கம் தானே வழங்கிய நிலத்தையும் உதவிப் பணத்தையும் உதறித் தள்ளியவர்.

''பணத்துக்காகவா நாம கொடி புடிச்சம் அது கெவலம்லே.. அப்பன் பாட்டன்வச்ச காணி கெடக்குலே... அது போதும் போ'' என்று சீறியவர்.

போன வருஷம் மருமகனைத் தேடிக் கொண்டு போலீஸ் கிராமத்துக்கு வந்து இவரை விசாரித்த

..... சுப்ர.பாலன்.

போது கொஞ்சம் பெருமையாய்க்கூட இருந்தது. என்ன இருந்தாலும் அரசியல் வாதி தானே? திருட்டா புரட்டா என்று மனம் குதி போட்டது.

அவன் பிடிபட்டு வழக்கு நடந்து பல்வேறு குற்றங்களுக்குத் தண்டனை விவரம் வெளியானபோதுதான் முத்துவேல் தம் முதுமையை உணர்ந்தார். திடீரென்று ஒரே நாளில் அறுபது வயசு ஆகிவிட்ட மாதிரி பிரமை அவரைத் திணற அடித்தது. சின்னப் பிஞ்சுப் பேரனும் பேத்தியும் ஆதரவற்ற பொன்னம்மையும், கையாலாகாத தானும் என்று ஒரு விசுவரூப மிரட்டல் அவரை உருக்குலைத்தது.

மருமகன் நீலமேகம் ரொம்பவும் துடிப்பான இளைஞன் என்கிற பெருமையில் திளைத்திருந்த கிழவர் அந்தத் துடிப்பின் பின்னணியிலிருந்த இருட்டை அறியாமலிருந்ததில் வியப்பதற்கொன்றுமில்லை. எதையும் பச்சையாக அப்படியே நம்பிவிடுகிற குழந்தை மனம் அவருடையது.


வெறும் கலவர வழக்கு என்று சொல்லப்பட்டாலும் அதன் முழு வடிவமும் வெளியானபோது அவர் இடி விழுந்தது போலானார்.

'அந்தக் காலத்துலே நாங்களுந்தான்லே போராடினம். இப்படியா பண்ணுவாக... மனுசனை மனுசன் மதிக்காட்டியும் பரவால்லே... விரோதிச்சா என்ன கெதி?'

ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஒரு பெரிய மனிதரைத் திட்டமிட்டே கொன்றவன் நீலமேகம். அதற்குக் கலவரம் ஒரு ஜோடிப்பு என்கிற பிராசிக்யூஷன் தரப்பு வாதத்தை யாராலும் உடைக்க முடியவில்லை.

'அப்படியே அவன் அடாவடி பண்ணாலும் ஒனக்கேதுங்கறேன் உரிமை? அவனைத் தீர்த்துப்பிட்டாப் பிரச்னை தீர்ந்துடுமாலே... பயித்தியக்காரப் புள்ளெங்க.... பாழாப் போயிட்டிகளே' — என்று அலறினார்

சட்டங்களும் நியாயங்களும் ஒரு சார்பாகவே இயங்குகின்றன. அடி நிலத்து



ஏழைக்கு அவை கடுகளவும் உதவுவதில்லை என்பது நீலமேகத்தின் அழுத்தமான எண்ணம்.

எப்படியோ நீலமேகம் தப்பி விட்டிருந்தான். கிழவர் வானத்தைப் பார்த்துக் கொண்டு பொழுதை விரட்டுகிறார். நிச்சயமான காந்தியவாதி ஒருவரின் அவலம் கண்களில் நீரைத்தான் பெருக்குகிறது.

அவளுடைய தாலி பாக்கியமோ அல்லது முத்துவேலுவின் தியாகங்களுக்குக் கிடைத்த வெகுமதியோ — நீலமேகத்துக்குப் பெரிதாய்த் தண்டனை ஏதும் கிடைக்கச் சாட்சியங்கள் பொருந்தி வரவில்லை. ஐந்து ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை என்பதுடன் வந்து நின்றது.

தன்னுடைய கணவனைப் புரட்சிப் போக்கிலிருந்து தடுக்க முடியாமல் போனது தன்னுடைய பலவீனத்தினால்தானா? கணவனின் இட்டங்கள் தனக்குத் தெரிய வந்த போதே அப்புவிடம் சொல்லாமல்போனது தான் இவ்வளவுக்கும் காரணமா? என்றெல்லாம் குழம்பினாள் பொன்னம்மை.

நள்ளிரவைத் தொட முயன்று கொண்டிருந்த மழை நேர இருட்டில் ஏதோ அரவம் உறுத்த விழித்துக் கொண்டாள். கதவை யாரோ மெல்லத் தட்டும் ஓசை தெளிவாகவே கேட்டது.

துணிவை வலிய வரவழைத்துக்கொண்டு கதவைத் திறந்தாள்.

சின்னதான 'பென் டார்ச்'சின் ஒளி மின்னியபோதே பொன்னம்மை புரிந்துகொண்டாள். சரேலென்று உள்ளே புகுந்து கதவையும் சாத்திக் கொண்ட உருவத்தைப் பின்தொடர்ந்தாள் பொன்னம்மை.

''அப்பு தூங்காமெத்தான் இருக்காக. ஒடம்பு ரொம்பவும் தள்ளலே... ஆமா.. நீங்க எப்பிடி?....''

''சத்தம் போடாதே. தப்பிச்சுத்தான் வந்திருக்கேன். ஆனா இங்க இருக்கற ஒவ்வொரு நிமிஷமும் ஆபத்துத்தான். ஆளுங்க தயாரா இருக்காங்க. இன்னும் பத்து மணி நேரம்தான். தோணியிலே ஏறிக் கடல் வழியா... அது கெடக்கட்டும்... அதுக்கு முன்னாலே ஒன்னெப் பார்த்துச் சொல்லிட்டுப் போயிறணும்தான் வந்தேன். என்னெ மாதிரி ஆளுக்குக் குடும்பம் புள்ளெ குட்டினு பாசம் வரப்படாது. என்ன செய்ய... நான் எப்பவாச்சும் மனுசன்னு நெனைக்காம இருக்க முடியல்லே...''

கிழவரின் சத்தம் சற்று உரத்ததாகவே கேட்டது.

''அப்பு'வைப் பார்க்கலீங்களா?'' பொங்கி வந்த அழுகையை அடக்கிக் கொண்டு அவள் கேட்டபோது, ஏணையிலும் தரையிலும் கிடந்த பிஞ்சுகள் அவன் பார்வையைக் கலக்கின

''அப்பு இப்ப வாய் பேசலிங்க... பார்த்தாலும் பாதகமில்லிங்க...''

''இல்லே பொண்ணு! அவுக வாய் பேசலென்னாலும் கண் பேசும். அதுவும் நப்பிச்சு வந்துட்டேன்னு தெரிஞ்சா அவுக பார்வையாலேயே சுட்டுப் பொசுக்கிப்புடுவாக. தோட்டாவை விட அவுக பார்வை ரொம்பப் பொல்லாதது. இதோ நான் பொறப்படறேன்.'' அந்த அவசரமான விடைபெறலின் அழுத்தம் பொன்னம்மையின் உணர்வுகளைப் பிழிந்தது.

நீலமேகம் இருளில் கரைந்து போய்ச் சில நிமிடங்களே ஆகியிருந்தன.

''பொன்னம்மை...'' என்று யாரோ உரத்த குரலில் அழைத்தது போல் ஒரு பிரமை. ஏதோ இனம் புரியாத ஒலிக் குழப்பத்துடன் எழுந்து உட்கார்ந்த முத்துவேல் பொன்னம்மை அவசரமாய்க் கொண்டு வந்த தண்ணீரில் ஒரு மிடறு விழுங்கியதுதான் தெரியும்.

அப்படியே கட்டிலில் சாய்ந்தார். கண்கள் நிறுத்துப் பார்த்தன. அது ஒரு சத்தியத்தின் மரணம்தானா என்பது கூட நிச்சயமாய்த் தெரியாத நிலையிலும் பொன்னம்மை அலறியவாறே வெளியே வந்தாள்.

பக்கத்து, எதிர்க் குடிசைகளின் மனிதர்கள் உள்ளே வந்து,, பிஞ்சுகள் விழித்த வேளையில்—

வாசலில் ஜீப்... போலீஸ் அதிகாரிகள்...

அந்த வீட்டின் சொந்த அவலங்கள் அவர்களுக்குத் தேவையில்லை. முத்துவேல் மரணம் அவர்களுக்கு முக்கியமானதில்லை. மூலைக்கு மூலை போலீஸ் புகுந்து தேட முயன்றபோது—

பொன்னம்மை சிலிர்த்துக் கொண்டாள். தகப்பனின் தியாக வாழ்க்கையும், அதன் நிழல்களும் அவளுடைய உணர்வுகளை எழுப்பிய வேகத்தில் அவளுள் உறுதி பிறந்தது. கணவனின் இட்டங்கள் மேலும் தீவிரமடைவதை ஓரளவுக்கேனும் தடுக்க முடியும் என்கிற நம்பிக்கை அவளைப் பேச வைத்தது.

''நில்லுங்க! அவுக தப்பிச்சு வந்தது நெசம்! அவுங்க ஆளுங்களோட தோணி ஏறித் தப்பிப் போறதும் ரொம்பச் சத்தியம்'' என்று வெறி பிடித்த மாதிரி சொல்லிக் கொண்டே—

''அப்பூ....! போயிட்டீகளா...?'' என்று கதறியபடியே தகப்பனின் சடலத்தின் மீது விழுந்தாள் பொன்னம்மை.

அடுத்த சில நிமிடங்களில் கேட்கப் போகும் துப்பாக்கி வேட்டுக்களும் சமுதாயமா சட்டமா என்கிற போராட்டமும்— அவர்களுக்கு இனி தெரியப் போவதில்லை.

சர்வர் : சீனிவாசன் சாதம், காதர், தேசிகன் அபிட்டம் எல்லாம் இருக்கு!

சாப்பிட வந்தவர் : அப்பாடீன்னு!

சர்வர் : தெரியலே! ''தேங்காய்'' சாதம் பகோடா, தயிர் வடை...! - வெ. சித்ரராமன்





இந்திரா பார்த்தசாரதி

வெந்து தணிந்த காடுகள்

12

விம்மி உள்ளே சென்றதும் பெட்டியை ஓரமாக வைத்துவிட்டு உட்கார்ந்தாள்.

''நீங்க இருக்கீங்களோ இல்லையோன்னு எனக்குச் சந்தேகம்தான். இருந்தாலும், பார்க்கலாம்னு வந்தேன். நௌ ஐ ஃபீல் ரிலீவ்ட்!...''

''ரிலீவ்ட்?....''

''ஆமாம்.... இல்லேன்னு வேற எங்கே போறதுங்கிறது எனக்குப் பிரச்னையாயிருந்திருக்கும்...''

''நீங்க சொல்றது எனக்குப் புரியலே.''

''ஐ ஹாவ் லெஃப்ட் மை ஹஸ்பெண்ட்.''

''வாட்?... வீட்டை விட்டு வந்துட்டீங்களா?''

''ஆமாம்.''

அதுவரை நின்றுகொண்டிருந்த தாமோதரன் கீழே உட்கார்ந்தான். அவளைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்தான். ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான்.

''இங்கே வரணும்னு உங்களுக்கு ஏன் தோணித்து?''

''உங்களுக்கு ஏதாவது ஆட்சேபணை இருந்தா சொல்லுங்க...''

''என்ன செய்வீங்க?''

''ஐ டோண்ட் நோ...''

தாமோதரன் சிரித்தான்.

''எதுக்குச் சிரிக்கிறீங்க?''

''இங்கே வரணும்கிறதுக்காக உங்க 'ஹஸ்பெண்டோட' சண்டை போட்டீங்களா, இல்லே சண்டை போட்டதினாலே இங்கே வந்தீங்களா?''

''சரியாச்சொல்லணும்னா அவர்தான் என்னை வீட்டை விட்டுப் போகச் சொன்னார்....''

''ஏன்?''


விம்மி சிறிது நேரம் மௌனமாக இருந்தாள்.

''உங்களுக்குச் சொல்ல விருப்பமில்லேன்னா சொல்ல வேணாம்.'' என்றான் தாமோதரன்.

''மிஸ்டர் · அருண் ஒரு சக்ஸெஸ்ஃபுல் பிஸினெஸ் மேன். அவருடைய மனைவியாக இருந்து எனக்குத் தெரிஞ்சதெல்லாம் பார்ட்டீஸ், பார்ட்டீஸ் அண்ட் மோர் பார்ட்டீஸ். இந்த வாழ்க்கை எனக்கு அலுத்துப் போச்சு. இதுவரையிலும் அவர் சொன்ன சொல் தட்டாம இருந்த நான் திடீர்னு எனக்குன்னு ஒரு தனி முகம் இருக்குன்னு காட்ட ஆரம்பிச்ச உடனே அவருக்கு இது பிடிக்கலே. நேத்திக்கு பம்பாயிலிருந்து அவர் ஃபோன் பண்ணியிருக்கார்... நான் இல்லேன்னு தெரிஞ்சதும் அவருக்கு என்னைப் பற்றிச் சந்தேகம். இன்னி மத்தியானம் அவர் பம்பாயிலிருந்து வந்ததும், பெரிய சண்டை. அவர் வீட்டை விட்டுப் போகச் சொன்னார். வந்துட்டேன்...''

இவ்வாறு சொல்லிவிட்டு அவள் ஒரு இண்டைப் போட்டுக்கொண்டு சற்றுச் சௌகரியமாக அதில் சாய்ந்தாள்.

அவன் வேறு எங்கோ பார்த்துக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்.





துணுக்கு வேட்டை

இந்த இதழில் இடம் பெற்றுள்ள துணுக்கு களைக் கல்கி வாசகர்களுக்காகத் தேர்ந்தெடுத் திருப்பவர் திருச்சி தேசியக் கல்லூரித் துணை முதல்வரும் ஆங்கிலப் பேராசிரியருமான திரு வி. நடராஜன்.

'என்னுடைய வகுப்பறையைக் கலகலப்பாக வைத்திருக்கவே முயல்கிறேன்' என்று கூறும் இவர் கும்பகோணம் கல்லூரியில் படித்தவர். உடன் பயின்றவர் திரு இந்திரா பார்த்தசாரதி. "ஐம்பதுகளில் மாணவர்கள் மிகுந்த அக்கறை யுடன் பாடம் கேட்பார்கள். நுணுக்கமான விஷயங்களை ஆசிரியர்கள் சொல்லும்போது மிகுந்த உற்சாக மடைவார்கள். இப்போது நிலைமை வெகுவாய் மாறிப் போய்விட்டது. இதற்கு ஆசிரியர்களும் ஓரளவு காரணம்" என் கிறார் இவர்.

அண்மையில் நடைபெற்ற தேசியக் கல்லூரி யின் வைரவிழாக் கொண்டாட்டத்தின் போது நீண்டகாலப் பணிக்காக நிருவாகம் வழங்கிய கடி காரப் பரிசு பெற்ற சில ஆசிரியர்களுள் இவரும் ஒருவர்.

கடந்த பதினாறு ஆண்டுகளாய் 'வியென்ஸ் கைடு' என்னும் ஆங்கில உரை நூல்களை வெளி யிட்டு வருகிறார் இவர்.

இவர் சொன்ன ஒரு துணுக்கு:

தனக்குத் திருமணமானவுடன் மில்டன் எழு திய காவியம் 'பாரடைஸ் லாஸ்ட்.' அதே போல் மனைவி இறந்த பிறகு எழுதியது 'பாரடைஸ் ரீ கெய்ண்டு'. விந்தையான ஒப்புமை இது.

அமைப்பு : 'வெல்பால்'
புகைப்படம் : பாபு

."நான் இம்பல்ஸிவ்வா நடந்துண்டுட் டேன்னு நினைக்கிறீங்களா?" என்றாள் விம்மி.

"உங்களுக்கே அப்படியொரு சந்தேக மிருக்கா?"

"இல்லே... அருணுக்கு உலகத்திலே யிருக் கிறவங்க எல்லோரும் அவருக்காகத்தான் படைக்கப்பட்டிருக்கிற மாதிரி ஒரு நினைவு... 'மெக்லோமானியாக்'... அவரோட என் னாலே இருக்க முடியாதுன்னுதான் எனக்குத் தோணறது."

தாமோதரன் பேசாமலிருந்தான். அவள் அங்கு அப்படி வந்திருப்பது அவனுக்குப் பிடிக்கவில்லையோ என்ற சந்தேகம் அவ ளுக்குத் தோன்றிற்று. அவன் அவளைப் புரிந்து கொள்வான் என்ற நம்பிக்கையில் அவள் புறப்பட்டு வந்து விட்டாள். தாமோ தரனின் மௌனம் அவளைச் சிறிது சங் கடத்தில் ஆழ்த்தியது.

"உங்களுக்கு நான் வந்திருப்பது 'எம் பாரஸ்மெண்டா' இருக்குமான்னு...." என்று அவள் கூறி முடிப்பதற்குள் அவன் கேட்டான்: "மறுபடியும், என்ன செய் வீங்க?"... 'ஐ டோண்ட் நோ'ங்கிறதுதான் உங்க பதில்.... வந்தாச்சு... மேலே என்ன செய்யறதுன்னு யோசிப்போம்."

"நான் இங்கே தங்கறதினாலே உங் களுக்குச் சங்கடங்கள் இருந்தா வெளிப் படையாச் சொல்லுங்க...."

"எனக்கொரு சங்கடமும் இல்லே... பட்.. இதை ஃபேஸ் பண்ண உங்களுக்குத் தைரியமிருக்கான்னு நீங்கதான் முடிவு பண்ணனும்... உங்களுக்கு எத்தனை குழந் தைகள்?"

"குழந்தைகள் இடையாது...."

"ஸோ, அந்தப் பிரச்னை இல்லே. உங்க ஹஸ்பெண்ட் உங்களைக் கூப்பிட வரார்னு வச்சுக்கங்க, அப்போ என்ன செய்வீங்க?"

"அவருக்கு நான் இங்கே வந்திருக் கேன்னு தெரியாது."

"இது தப்பு... உடனே ஃபோன் பண்ணிச் சொல்லுங்க... அவரோட இருக்க உங் களுக்கு விருப்பமில்லே. அதுக்காக வீட்டை விட்டு ஓடி வர மாதிரி எங்கே போறீங் கன்னு அட்ரஸ் கூடக் கொடுக்காம வரக் கூடாது. யு ஹேவ் டு ஃபேஸ் இட்."

"முதல்லே அவர் தேடிண்டு வர மாட் டார். அப்புறம் உங்களுடைய இந்த 'அட் ரஸ் எனக்குத் தெரியாது. வீடுதான் தெரி யும். நாளைக்கு ஃபோன் பண்றேன்."

"ஏன் வரமாட்டார்னு சொல்றீங்க?"

"அவரே போகச் சொல்லிட்டு அப்புறம் ஏன் தேடிண்டு வரணும்? அவருடைய 'ஈகோ'வைப்பத்தி உங்களுக்குத்தெரியாது."

"நீங்க சொல்றபடி அவர் இருந்தா நிச் சயம் தேடிண்டு வருவார். ஒரு 'சக்ஸெஸ் ஃபுல் பிஸினஸ்மேன்னு' சொன்னீங்க... அவருடைய மனைவி அவரை விட்டுப் போயிட்டாங்கன்னு இது அவருக்கு எவ் வளவு அவமானம்? ஏதோ கோபத்திலே உங்களை வீட்டை விட்டுப் போகச் சொல்லி யிருக்கலாம். அப்படி வந்தார்னா, நீங்க என்ன செய்யப் போறீங்கங்கிறதைத் தீர்மானம் பண்ணி வச்சுக்குங்க... நீங்க இங்கே இருக்

றதைப் பத்தி எனக்கு ஆட்சேபணை இல்லே. ஆக, உங்க எதிர்காலத்தை நீங்கதான் தீர்மானம் செஞ்சாகணும். இன்னொரு விஷயம். என் சிநேகிதர்கள் வந்தாங்கன்னு அவங்ககிட்ட நீங்க ஏன் வரும்படியா ஆயிடுச்சுன்னு நான் சொல்லுவேன். நீங்க தடுக்கக் கூடாது. நான் அவங்க கிட்டே இருந்து ஒண்ணும் மறைக்கிறது இல்லே. சரிதானே? இன்ஃபாக்ட், கவிதா உங்க மாதிரிதான். அவ 'ஹஸ்பண்'டுக்கு அவ தியேட்டர்லே இருக்கிறது பிடிக்கல்லே. அவன் கவர்ன்மெண்ட்லே பெரிய உத்தியோகத்திலே இருக்கான். அவனே விட்டு வந்துட்டா இவ.... பார்க்கப் போனா இது ஒரு பெரிய விஷயம் இல்லே...."

"'முன் மாதிரி' இருக்குங்கிறீங்க..." என்று புன்னகையுடன் சொன்னாள் விம்மி.

"பட், கவிதா என்னோட தங்கலே... க்ரேட்டர் கைலாஷில் ரீனாவுடன் இருக்கா. ரீனா புத்திசாலி. கல்யாணம் பண்ணிக்கலே..." என்றான் தாமோதரன்.

"ரீனா இருக்கிறது பெரிய இடமா? நானும் அவங்களோட தங்க முடியுமா? முதல்லே ஒரு வேலே தேடிக்கணும். மத்தவங்களுக்குப் பாரமா நான் இருக்க விரும்பலே...."

"நீங்க இங்கேயே தங்கலாம்... வேலே எதுக்காகத் தேடிக்கணும்? 'ஆர்ட்டிஸ்ட்டா' இருக்கிறதுன்னு தீர்மானம் பண்ணப்புறம்? முதல்லே உங்க திறமையிலே உங்களுக்கு நம்பிக்கை வேணும்...."

"இப்போத்தான் ஆரம்பிச்சிருக்கேன். யார் என் பெயிண்டிங்கை வாங்குவாங்க? நான் சம்பாதிக்க ஆரம்பிக்கிற வரையிலும் சாப்பாடு போடுவீங்களா?" என்று சிரித்துக்கொண்டே கேட்டாள் விம்மி.

"நீங்க எங்களுடைய சட்ட திட்டங்களை அனுசரிக்கப் போறதா இருந்தா இங்கேயே இருக்கலாம். 'ஃப்ரீ' சாப்பாடு உண்டு. நீங்க சம்பாதிக்க ஆரம்பிக்கிற வரையிலும்."

"என்ன சட்ட திட்டங்கள்?"

"எந்தக் காரணத்துக்காகவும் எப்போதும் பொய் சொல்லக் கூடாது. மனசிலிருக்கிறதை வெளிப்படையாகச் சொல்லணும். எப்போ இந்தக் குழுவிலே சேர்ந்துட்டீங்களோ, அந்தரங்கம், ரகஸ்யம்னு எதுவும் இருக்கக் கூடாது. எந்த விதமான 'இன்ஹிபிஷன்ஸ்'ஸுமே அவதிப்படக் கூடாது. நீங்க சம்பாதிக்க ஆரம்பிச்சப்புறம் உங்க வருமானத்தை மத்தவங்களோட பகிர்ந்து கொள்ளத் தயாராக இருக்கணும். நாங்க இப்ப அப்படித்தான் செஞ்சிண்டிருக்கோம்...."

"ரியல் சோஷலிஸம் அட் வொர்க்... உங்க குழுவிலே எத்தனை பேர்?"

"இப்பப் பதினாறு பேர். மத்தவங்களும் உங்களை ஏத்துக்க ஒத்துண்டாங்கன்னா, பதினேழு...."

"மத்தவங்களும் ஒத்துக்கணுமா?"

"எஸ்... முதல்லே நான் தயங்கினதுக்கு அதுதான் காரணம். அப்படி அவங்க ஒத்துக்கலேன்னா — அவங்க ஒத்துக்க மாட்டாங்கன்னு எனக்குத் தோணலே — அப்புறம் என்ன செய்யறதுன்னு யோசிக்கலாம்..."

"என்னென்ன 'குவாலிஃபிகேஷன்' இதுக்கு?"

"நான் முன்னே சொன்னேனே அந்த மாதிரி நீங்க இருக்கக் கூடியவங்கதான்னு அவங்களுக்கு ஒரு நம்பிக்கை வரணும். டோண்ட் வொர்ரி, ஐ வில் ஸ்பீக் ஃபார் யூ.... உங்க பேர்லே எனக்கு நம்பிக்கை இருக்கு... சரி, இப்போ சாப்பிடப் போகலாம்... பக்கத்தில ஒரு ஹோட்டல் இருக்கு. நீங்க வெஜிடேரியனா, நான்-வெஜிடேரியனா?"

"வெஜிடேரியன்... சாமான்கள் இருக்கா? நானே சமைச்சுடறேன்..."

தாமோதரன் சிரித்துக் கொண்டே கேட்டான். "பெரிய ஸக்ஸஸ் ஃபுல் பிஸினெஸ் மேன் மனைவி... சமையல் இன்னும் மறக்கலியா?"

"பெரிய ஸக்ஸஸ்ஃபுல் பிஸினஸ்மென் மனைவிங்கறதை மறந்துட்டேன்... சமையல் இன்னும் மறக்கலே..."

"ஓ.கே. இஃப் யூ ப்ளீஸ்... என்ன சமையல் பண்ணப் போறீங்க?"

"வத்தல் குழம்பு... மிளகு ரஸம்... காய்கறி என்ன இருக்கு?"

"காய் கறி இல்லே. வாங்கிண்டுதான் வரணும்... வத்தல் குழம்பும், மிளகு ரஸமும் சாப்பிட்டு ரொம்ப நாளாச்சு... நீங்க சமைக்க ஆரம்பிங்க... போய்க் காய் கறி வாங்கிண்டு வந்துடறேன்..."

"ரொம்ப தூரம் போய் வாங்கணுமா?"

"இல்லே...பக்கத்திலே மார்க்கட் இருக்கு! கத்தரிக்காய் வாங்கிண்டு வரட்டுமா?"

"வத்தல் குழம்புக்கு வெந்தயம், ரஸத்துக்கு மிளகு எல்லாம் இருக்கா?"

"ஓ!... அதெல்லாம் வேணுமா? ஃபர்கெட் இட்... பேசாமே போய்ச் சாப்பிட்டு வந்துடலாம்...."

"சாமான் என்னதான் இருக்கு?"

"இங்கே வர்றவங்கள்ளாம் இந்தூர்க்காரங்க... ரொட்டி, சப்ஜிக்கு வேண்டிய சாமான்தானிருக்கும்..."

''அப்படின்னு இந்தூர் சமையலே செய்துடறேன்... வத்தல் குழம்பும், மிளகு ரஸமும் அப்புறம் பார்த்துக்கலாம். உருளைக் கிழங்கு, வெங்காயம்....''

''அதெல்லாம் இருக்கு...''

விம்மி எழுந்து உள்ளே சென்றுள்.

அவளைப் பின்தொடர்ந்த தாமோதரன் கேட்டான்: ''வத்தல் குழம்பும் மிளகு ரஸமும் பண்ணணும்னு உங்களுக்கு ஏன் தோணிச்சு? உங்க தமிழ் மத்தியதரப் பண்பாட்டுப் பின்னணியை ஞாபகப் படுத்திக்கணும்னு?''

''இந்த 'இன்டெலக்சுவல்'கள் கிட்டே என்ன கஷ்டம்னு, எல்லாத்தையும் 'ஜெனரலைஸ்' பண்ணி 'ஓவர்-ஸிம்பாலிஸ்ஸை' செய்யறதுதான். வத்தல் குழம்பு பண்ணு சாப்பிட வேண்டியதுதானே? ஏன் வத்தல் குழம்பு பண்ணணும்னு ஆராய்ச்சி பண்ணுத்தான் சாப்பிடறது ஜீரணம் ஆகுமா?'' என்று சிரித்துக் கொண்டே சொன்னுள் விம்மி.

''இல்லே, 'என்ன சமையல் பண்ணப் போறீங்க'ன்னு நான் கேட்ட உடனே 'வத்தல் குழம்பு, மிளகு ரஸம்'னு பதில் சொன்னீங்களே அதுக்காகக் கேட்டேன்'' என்றுன் தாமோதரன்.

விம்மி சமையல் அறையில் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்த பாத்திரங்களைப் பார்வையிட்டாள்.

''ஷல் ஐ ஹெல்ப் யூ? நான் அவ்வளவு ஒண்ணும் மோசமான சமையல்காரனில்லே'' என்றுன் தாமோதரன்.

''டூ மெனி குக்ஸ்... சாமான்கள் எங்கெங்கே இருக்குன்னு சொல்லிடுங்க.. போறும். அரை மணிலே எல்லாம் தயாராயிடும்.''

அவன் சாமான்கள் எங்கெங்கே இருக்கின்றன என்று அவளுக்குச் சுட்டிக் காட்டினுன்.

''தாங்க் யூ நீங்க போய் உட்காருங்க... சாப்பிட்டப்புறம் சொல்லுங்க, என் பெயிண்டிங்ஸ் தேவலையா, சமையல் தேவலையான்னு...''

''எது தேவலேன்னு சொன்னு இன்னெனுன்னை விட்டுடுவீங்களா?''

''அப்படி யொரு நம்பிக்கை உங்களுக்கு இருக்கா? நோ ஃபியர்ஸ்...'' என்று சிரித்துக் கொண்டே சொன்னுள் விம்மி.

தாமோதரன் வெளியே சென்றுன்.

விம்மி தன் மனம் லேசாகியிருப்பதை உணர்ந்தாள். அவள் நெஞ்சை இதுவரை இறுக்கியிருந்த ஒரு சுமை அகன்றுவிட்டாற்போல் ஒரு தெளிவு... அவள் இனி, 'இப்படிப் பேசுவது சரியா, 'ரியாக்ஷன்' எப்படி இருக்கும்?' என்றெல்லாம் யோசித்துப் பேச வேண்டிய அவசியமில்லை. அவளுக்கும் அருணுக்கும் இடையே இருந்து வந்த உறவு, அவளைப் பொறுத்தவரையில் இயல்பாக இல்லை என்று அவள் நினைத்து வந்ததற்கு என்ன காரணம்? அவன் இவ்வுறவு இயல்பாக இல்லை என்று உணர்ந்து கொண்டிருக்கவே மாட்டான். அவள் அவனுக்குப் பிரியமான ஒரு விளையாட்டுப் பொம்மை. பொம்மை பேசுகின்றது என்று அறிந்ததும் அவனுக்கு அதிர்ச்சி.

நேற்று அவன் மீது அவளுக்கு அவ்வளவு கோபம். வந்து. 'கெட்-அவுட்' என்று கத்தியதை இப்பொழுது யோசித்துப் பார்க்கும்போது அவளுக்கே ஆச்சரியமாக இருக்கிறது. 'அப்புறம் என்ன நடந்தது?' என்று அவன் கேட்டதுதான் அவளுடைய கோபத்துக்குக் காரணம். 'ஸெக்ஸ்'தான் எல்லா வற்றுக்கும் தர்க்க ரீதியான முடிவு என்று நினைப்பது எவ்வளவு சிறுமைத்தனம்.

அவன்மீது கொண்ட கோபத்தில் அவள் என்ன செய்தாள்? 'ஐ ஹாட் டெர்ரிஃபிக் டைம் வித் ராதிகா!' உண்மையிலேயே இந்த அனுபவத்தை அவன் ரசித்திருந்தானுனால், 'உன்னை எப்படிப் பழி வாங்கினேன் பார்' என்ற மனநிலையுடன் இவ்வாறு சொல்லியிருப்பானு? இது அவளைப் பழி வாங்குவதற்காகச் செய்யப்பட்ட காரியம் என்றுல் இது ராதிகாவுக்கு இழைக்கப்பட்ட பெரிய கொடுமை. ராதிகாவுக்கு இது தெரியாமலேயே இருக்கலாம்.

ராதிகாவிடம் அவளுக்குப் பொறாமையே ஏற்படவில்லை. இதற்கு என்ன காரணம்? ஒருவேளை அவள் அருணை அவன் அவளை விரும்புவது போல் விரும்பி யிருந்தால் பொறாமை ஏற்பட்டிருக்கக் கூடும். அவன் அவளை அப்படி விரும்பியதன் காரணமாகத்தான் பொறாமை உணர்வு தூண்டப்பட்ட நிலையில், 'அப்புறம் என்ன நடந்தது?' என்று கேட்டிருக்கிறுன். அவன் அவளை விரும்புகின்ற அளவுக்கு அவளால் அவனை விரும்ப முடியவில்லை என்பது துர்ப்பாக்கியம் தான்.

தாமோதரன் கூறியது போல், அருண் அவளைத் தேடிக் கொண்டு வருவானே? அவள்தான் போகும் இடத்தைச் சொல்லாமல் கொள்ளாமல் வந்தது தவறுதான். அவள் குற்ற உணர்விஞல் சொல்லவில்லை



சுருக்கமாக எழுதுவது எப்படி?

புலிட்ஸர் என்னும் உலகப் புகழ்பெற்ற பத்திரிகை ஆசிரியர் இளம் வயதில் ஒரு பத்திரிகையில் வேலைக்குச் சேர்ந்தார். ''சுருக்கமாக எழுதுவது எப்படி?'' என்று அவர் தம் ஆசிரியரைக் கேட்டார். அதற்கு ஆசிரியர் சொன்ன பதில்: ''சொல்லவேண்டிய எல்லா விஷயங்களையும் எழுது. பிறகு அதை உன் செலவில் ஆஸ்திரேலியாவிற்குத் தந்தி அடிக்கவேண்டும் என்று நினை. அப்பொழுது அந்த விஷயத்தை நீயே சுருக்கி விடுவாய்!''

— எஸ். ராஜகணேஷ்

1981 ஊனமுற்றோர் நலன் ஆண்டு

பிப்ரவரி 8 கல்கி இதழினை ஊனமுற்றும் ஊக்கமிழக்காதவர்களே தயாரிக்கிறார்கள்!



படத்தில் இடமிருந்து வலமாக ஆசிரியர் குழு: திரு ராதகுட்டி, குமாரி ஷிரீன் பீட்டர்ஸ், திரு ராமகிருஷ்ணன், திரு சந்திரசேகரன் (வயலின்).

படம்: உத்ரா

என்று அவன் நினைக்கலாம். அவளைப் பொறுத்த வரையில் அவனுக்கு எந்த விதமான குற்ற உணர்வும் இல்லை. அவன்தான் அவளை வீட்டை விட்டுப் போகும்படி சொன்னான். அவள் எங்கே போனால் என்ன, அதைப் பற்றி அவன் ஏன் கவலைப்பட வேண்டும்?

நாளைக்கு ஃபோன் செய்து அவள் எங்கே இருக்கிறாள் என்ற தகவலை அவனுக்குத் தெரிவித்தாக வேண்டும். அவன் அவளைத் தேடிக் கொண்டு வந்தானானால்.... இதைச் சந்திக்க அவள் தயார்தான்.

தாமோதரனின் நண்பர்கள் அவளை ஏற்றுக்கொள்ளாவிட்டால் என்ன செய்வது? அவர்கள் அவளை ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை தாமோதரனுக்கு இருக்கிறது. மனத்தடையற்ற ஒரு குழுவினருடன் அவள் தங்கியிருக்கப் போகிறாள். இது அவளுக்கு ஒரு புதிய அனுபவம்.

''விம்மி...''

அவள் திரும்பிப் பார்த்தாள்.

தாமோதரன்.

''உங்க 'ஹஸ்பெண்ட்' வந்திருக்கார்.''

அவள் திடுக்கிட்டாள். அவனுக்கு எப்படி இந்த முகவரி கிடைத்தது? அவள் சிறிது நேரம் பேசாமல் அப்படியே நின்றாள்.

'' 'யு ஹெவ் டு ஃபேஸ் இட்'... திரும்பிப் போறது நல்லதுன்னு பட்டதுன்னா, அதைப் பற்றி யோசிக்காதீங்க... திரும்பிப்போயிடுங்க.''

''ஐ ஆம் நாட் கோயிங் பாக்...''

''அப்போ வந்து அவரோட பேசுங்க.''

அவள் சமையல் அறையிலிருந்து வெளியே வந்தாள்.

அருண் நின்று கொண்டிருந்தான். அவளைப் பார்த்துப் புன்னகை செய்தான்.

''ஐ ஆம் ஸாரி... ஃபார் வாட் ஹாப்பெண்ட். உன் கோபம் தணிஞ்சு போச்சா. போகலாமா?''

விம்மி பதில் பேசாமல் நின்று கொண்டிருந்தாள்.

''எப்படி இந்த அட்ரஸ் கிடைச்சுதுன்னு பார்க்கறயா? 'லலித் கலா அகாடமிக்கு ஃபோன் பண்ணேன். மிஸ்டர் தாமோதரன் இவ்வளவு பெரிய ஆர்ட்டிஸ்ட்னு எனக்குத் தெரியாது. சுலபமா கிடைச்சுடுத்து. அவருடைய — 'அட்ரெஸ்! இவ்வளவு பெரிய ஆர்ட்டிஸ்ட் கிட்ட நீ 'பெயிண்டிங்' கத்துக்கறதுலே எனக்கு ஆட்சேபணையே இல்லே... நீங்களும் வேணும்னு என் வீட்டிலேயே வந்து இருக்கலாம். இந்த மாதிரி ரெண்டு மாடி ஏறி வந்து அவஸ்தைப் பட வேண்டாம்.''

விம்மிக்கு முகம் சிவந்தது. ரஸனையற்ற முறையில், தாமோதரனின் உடல் குறையை இப்படிச் சுட்டிக் காட்டவா வேண்டும்?

''நீங்க பிஸினஸ்லே யாரை வேண்டுமானாலும் விலைக்கு வாங்க முடியும். தாமோதரனை அப்படி வாங்கலாம்னு நினைச்சீங்கன்னா அது தப்பு, மிஸ்டர் அருண்'' என்றாள் விம்மி.

''விலைக்கு வாங்கறதா நான் சொல்லவே யில்லையே, அவருடைய சௌகர்யத்துக்காகச் சொன்னேன்.''

''அவரை அவராலே பார்த்துக்க முடியும். யார் தயவிலும் அவர் இல்லை.''

''உங்களைப் புண்படுத்தியிருந்தா மன்னிச்சுக்கிடுங்க மிஸ்டர் தாமோதரன்... ஐ ஹெவ் கம் ஹியர் டு டேக் மை வொய்ஃப்''

தாமோதரன் புன்னகை செய்தான்.

''நான் உங்க கூட வரல்லே. நான் தீர்மானம் பண்ணியாச்சு...''

''இங்கேயே இருக்கிறதுன்னா?''

''ஆமாம்.''

''நான் செஞ்சது தப்புன்னு சொன்னப்புறம் கூட உனக்கு என்ன இவ்வளவு பிடிவாதம்!''

''நீங்க செஞ்சது தப்புன்னு மனம் வருந்தணும்கிறதுக்காக நான் வீட்டை விட்டு வந்துடலே... என் வாழ்க்கையை நான் தேர்ந்தெடுத்தாச்சு, அவ்வளவு தான்.''

''இதுதானா உன்னுடைய வாழ்க்கை?''

''ஆமாம்.''

''வாட் ஹாஸ் ஹாப்பண்ட் டு யு, விம்மி? ஹாவ் யு கான் நட்ஸ்?'' என்று கோபத்துடன் இரைந்தான் அருண். (தொடரும்)

கல்கி டைரி பரிசுத் திட்டம்

கல்கி மாதாந்திர பரிசுத் திட்டத்தின் கீழ் 1981ம் ஆண்டு சுகின் டைரி பரிசு பெற்றவர்கள் விவரம்:

1. பி. ராமச்சந்திரன், அறந்தாங்கி; 2. எம். எஸ். திருநாவுக்கரசு, தொட்டியம் 3. கற்பகம், மதுரை-2; 4. எம். சாம்பமூர்த்தி, ஆரணி; 5. பி. சந்திரசேகரன், திருச்சி-21; 6. பி.வி. சீதா, ஈரோடு; 7. ஆர். ஜகந்நாத பூபதி, கோபி; 8. எஸ். ஹரிஹர சுப்பிரமணியம், திருநெல்வேலி; 9. திருமதி சந்திரபாபு, மதுரை-1; 10. டி. ஜி. ராஜா, சென்னை-15; 11. ஆர். ரமணி, கல்கத்தா; 12. வி. பானுமதி, அவிநாசி; 13. எஸ். அனுசூயா, திருவண்ணாமலை; 14. ஆர். சித்ரா, சிக்கந்தராபாத்; 15. எஸ்.எஸ் கிருஷ்ணன், ஆமதாபாத்; 16. கே. பன்னீர் செல்வம், தாராசுரம்; 17. பி. ஜசரவேல், சாத்தான்குளம்; 18. எஸ். ஆல்பர்ட் ராஜ், புதுக்கோட்டை; 19. வஸந்தி, பெங்களூர்; 20. வி. ஆர். ஜமுனா, கோயமுத்தூர்; 21. ஜி. கஸ்தூரிரம், வேட்டவலம்; 22. மலர் மடந்தை, பெங்களூர்-53; 23. வி. வேலாயுதம், தளவாய்புரம்; 24. ஸ்ரீமதி எம். ஆஷை சென்னை-86. 25. எம்.பழனிசாமி, தேவரடியார் குப்பம்; 26. எஸ். பி. கோவிந்தசாமி, தர்மபுரி; 27. ஏ. டி. நரசிம்மன், சென்னை-5; 28. எம். அவுரிமுத்து, எருமனூர்; 29. டி. சந்திரபாபு, சென்னை-11, 30. பி. சந்திரகாந்தா, சென்னை-32; 31. எம். சுகுமார், சென்னை-23; 32. எம். மணி, பெங்களூர்; 33. பி.கே. ஸ்ரீதர், திருவனந்தபுரம்; 34. பி. வாசு, கும்பகோணம்; 35. ஏ.பி. கலாவதி, திருவண்ணாமலை; 36. ஆர். ஜோத்ஸ்னா மைசூர்-1 37. லக்ஷ்மி ஜெயராமன், ஹைதராபாத்; 38. ஆர். சேகரன், மதுரை 39. ஆர். முருகேஷ், பழனி; 40. எஸ். ரமணி கோவிலடி; 41. எஸ்.எ. பெரியசாமி, சித்தாம்பூர்; 42. டி. சண்முகம், கரூர்; 43. வி. சேதுராமன், தஞ்சாவூர், 44. டி. சீனிவாசன், நாகப்பட்டினம்; 45. கே. எஸ். ரங்கராமானுஜம், மதுரை-3; 46. என். சந்தானகிருஷ்ணன், சென்னை-21 47. வி. கற்பககுஞ்சரம், சென்னை-78; 48. ஏ. ராஜு, பி. புளியம்பட்டி; 49. வி. சிவமோகன்ராம், சத்தியமங்கலம்; 50. என். சுப்பிரமணியன், மதுரை; 51. ஜி. பஞ்சநாதன், சென்னை-34; 52. வி. என். ஆறுமுகம், நெய்வேலி-3; 53. ஜி. ராமலிங்கம், மூங்கில்பாளையம்; 54. டி. சுப்பிரமணியம், பாளையங்கோட்டை; 55. ஈ. ஜகந்நாதன், காஞ்சீபுரம்; 56. என். ராமமூர்த்தி ஆர்க்காடு; 57. ஜி. சுரேஷ், தஞ்சாவூர்; 58. மா.க. அறிவானந்தம், பொள்ளாச்சி; 59. பி. உஷா, சென்னை-4; 60. டி. விசுவநாதன், மன்னார்குடி; 61. ஜி. ஞானம், பாண்டிச்சேரி; 62. எஸ். சின்னப்பன், வாணியம்பாடி; 63. எஸ். கற்பகம், சென்னை-2; 64. ஈ. சத்தியநாராயணன், கரமங்கலம் 65. டாக்டர் எம். சுப்பையா, திருநெல்வேலி 66. கே. பிரேமாவதி, பள்ளிகொண்டா; 67. கே. ஏ. பாண்டியன், தென்கரை; 68. எஸ். ஜெகன்மோகன், ஈரோடு; 69. எஸ். உமா, மாயூரம்; 70. எஸ். தங்கவேலு, கூடுவாஞ்சேரி; 71. ஆர். ஜயலக்ஷ்மி, கலவை; 72. ஆர். இந்திரா கோபாலன், கொச்சி-2; 73. டி. சேகர், சென்னை-12; 74. எம். கனகபாண்டியன், சோமரசம்பேட்டை; 75. டி. பாட்ரிக், கோயமுத்தூர், 76. எஸ். சண்முகசுந்தரம், திருநெல்வேலி; 77. என். விஜயலக்ஷ்மி, சென்னை-17; 78, வி. நடராஜன், கீழப்பெரும் பள்ளம்; 79. ஆர். சுசீலா ரங்கராம், சென்னை-75; 80. எஸ். என். சீதா, பாலக்காடு; 81. வி.வி. சங்கரநாராயணன், பம்பாய்-89; 82. எம். ஜேம்ஸ் பெர்னாண்டோ, தூத்துக்குடி; 83. பி. முகம்மது அஸீம், சென்னை-3; 84. பி. மல்லிகா, திருக்கோயிலூர்; 85. பி.என். சீதா சென்னை-19; 86. எஸ். கணேசன், மதுரை-2 87. எம். பாலசுப்பிரமணியம், புதுக்கோட்டை; 88. கிருஷ்ணம்பாள், —வள்ளியூர்; 89. ஆர். கோவிந்தராஜுலு, தேவிகோட்டை; 90. ஏ. வெங்கடசுப்பிரமணியன், சென்னை-33; 91. ஜி. எத்திராஜுலு, பாபநாசம், தஞ்சை; 92. எஸ். கிரிதரன், சிவகாசி; 93. ஏ. தர்மலிங்கம், மாறன்—காட்டூர், வாழைத்தோட்டம்; 94. ஆர். சீனிவாசன், கோயமுத்தூர்; 95. ஆர். முத்து கிருஷ்ணன், பாண்டிச்சேரி; 96. பி. கல்யாணி; சென்னை-53; 97. எஸ். ரங்கநாதன், பம்பாய்; 98. எஸ். சரஸ்வதி, அண்ணாமலை நகர்; 99. ஆர்.எம். பெரியசுவாமி, திருச்சி-14 100. ஏ. எச். ரங்காச்சாரி, விழுப்புரம்.

கவனத்தைக் கவர...

அண்மையில் அமெரிக்காவைச் சேர்ந்த எட்மண்ட் ட்ரமாண்ட், ஸ்டீபன் ருதர்ஃபோர்ட் என்ற இருவரின்மீது அமெரிக்க கோர்ட்டில் ஒரு வழக்கு நடந்தது. காரணம், இவர்களிருவரும் நியூயார்க்கிலுள்ள புகழ் பெற்ற லிபர்ட்டி சிலையைச் சேதப்படுத்தி விட்டார்கள். மாஜிஸ்திரேட் விசாரித்தபோது, இருவரும் சொன்ன பதில்: 'இந்தச் சிலையை எவரும் சரிவரப் பராமரிப்பதில்லை. வெகு விரைவிலேயே இச்சிலை பழுது பட்டு விடக் கூடிய அபாயமுண்டு. பல முறை எடுத்துச் சொல்லியும் எந்த அதிகாரியும் இதைக் கவனிக்காததால், இந்த வழியில்தான் உங்கள் கவனத்தைக் கவர எங்களால் முடிந்தது.

வழக்கை உடனே நீதிபதி தள்ளுபடி செய்துவிட்டார்.

—வி. ராதாகிருஷ்ணன்



கண்ணதாசன் மனவாசம்



10. பறந்து போனானே...

அண்ணா பாராட்டினார்; கருணாநிதி எதிர்த்தார்.

தி.மு.க.வை அவன் ஆதரிப்பதா? எதிர்ப்பதா?

மேலும் மேலும் ஆத்திரம் கொண்டு எதிர்க்கவே தொடங்கினான்.

இந்த எதிர்ப்பினால் கருணாநிதி மங்கினாரா? இல்லை!

கருணாநிதி பகைத்ததால் அவன் மங்கினானா? அதுவும் இல்லை!

அரசியலில் அவர் முன்னேறினார்; கலை இலக்கியத்தில் அவன் முன்னேறினான்.

அந்த நேரம் அற்புதமான நேரம். அதாவது 1962லிருந்து 64 வரை.

அந்த நாளில் வறட்டு அரசியலில் வாழ்வைப் பாழாக்காமல் இலக்கியப் படைப்பில் இறங்கியிருந்தால் ஒரு சிலப்பதிகாரமோ, ராமாயணமோ பிறந்திருக்கும். உரை நடையில் ஒரு நூறு புத்தகங்களாவது வந்திருக்கும்.

எந்தப் படிக்கட்டு உன் கால்களுக்கு இதமாக இருக்கிறதோ, அதில்தானே நீ ஏற வேண்டும்? நீ எட்டிப் பார்க்கிறாயா என்று ஜனங்கள் ஏங்கித் தவம் கிடக்கும்போது இருட்டறையில் உலாவுவதில் அர்த்தமென்ன? காலம் தவறிய பூஜையைக் கடவுளே ஏற்றுக் கொள்ள மாட்டாரே!

'ஆண்டொன்று போனால் வயதொன்று போகும்' என்று அவன் பாட்டெழுதினானே தவிர, அது தனக்கும்தான் என்பதை உணரவில்லையே?

சந்தர்ப்பம் வரும்போது பாட்டெழுத வேண்டியது; மற்ற நேரங்களில் அரசியல் வெறி கொண்டு அலைய வேண்டியது. அதோடு விட்டானா?

கருணாநிதியை ஒப்பிட்டு ஒரு நாடகம் எழுதச் சொன்னான். 'கோயபல்ஸ்' என்ற அந்த நாடகத்தில் அவனே நடிக்கவும் தொடங்கினான்.

'அந்த நேரத்தில் ஹிட்லரது வாழ்க்கை வரலாற்றை அவன் படித்துப்பார்த்தபோது, ஹிட்லரின் 'நாஜி' கட்சிக்கும்தி.மு.க.வுக்கும் சில அம்சங்களில் ஒற்றுமை இருப்பதாக அவனுக்குத் தோன்றியது.

ஹிட்லர் தேர்தல் காலத்தில் நிறைவேற்றமுடியாத வாக்குறுதிகளை அள்ளி வீசியது போல் தி.மு.க.வும் அளித்து வந்தது.

கோயபல்ஸுக்கும் கருணாநிதிக்கும் இது போன்ற பிரசார தந்திரங்களில் நெருக்கமான ஒற்றுமை இருப்பதாக அவன் கருதினான்.

''தான் ஆட்சிக்கு வந்தால் ஆளுக்கொரு 'போக்ஸ் வாகன்'காரும்,ஒரு வீடும் கொடுப்பதாக'' ஹிட்லர் தன் தேர்தல் பிரசாரத்தில் கூறியிருந்தான். தி. மு. க.வும் அதே பாணியைப் பின்பற்றியது.

'ஜெர்மனிக்கு நாஜிக் கட்சி எப்படி ஒரு சாபக்கேடோ, அப்படியே தமிழகத்துக்குத் தி.மு.க. ஒரு சாபக்கேடு' என அவன் முடிவு கட்டினான்.

ஹிட்லர் ஆரிய நாடகம் போட்டு யூதர்களை வேட்டையாடினான். தி. மு. க. திராவிட நாடகம் போட்டுப் பிராமண வெறுப்பை வளர்த்தது. The Rise and Fall of the Third Riech என்ற புத்தகத்தைச் சென்னை விமான நிலைய புத்தக ஸ்டாலிலிருந்து அவன் வாங்கிப் படித்தபோது அவனது ஆர்வமும் வெறியும் பன்மடங்காயின.

ஹிட்லரால் கட்சியில் 'பழிவாங்கப்பட்ட 'ஓட்டோஸ்ட்ரஸர்' என்ற பாத்திரத்தில் அவன் நடித்தான்.

கூடுமானவரை ஜெர்மானியப் பின்னணியில் நாடகம் அமைக்கப்பட்டிருந்தது.

இன்னும் அதிகமான காட்சி ஜோடனைகளோடு அந்த நாடகத்தை அமைக்க அவன் ஆசைப்பட்டான். நல்ல வேலையாக அதற்கு அதிகம் அவன் செலவழிக்கவில்லை.

நாடகத்துக்கு காங்கிரஸ், த. தே. க. வினரிடையே நல்ல வரவேற்பிருந்தது.

அந்த நாடகத்தில்தான் 'பானு' என்ற பெண் நடித்தாள்.

ஒல்லியான உருவம், சிவந்த தோற்றம்; சுருண்ட கூந்தல்; இருபத்தைந்து வயதைத் தாண்டாத பருவம். நாடகம் நடக்கும் போதெல்லாம் அவள் அவனையே பார்த்துக் கொண்டிருப்பாள். நாடகம் இல்லாத நாட்களிலும் அவனது அலுவலக மாடிக்கு அவள் வந்து விடுவாள்.

கைமாறு கருதாத உண்மையான அன்பு என்ன என்பதை அவள்தான் அவனுக்குக் காட்டினாள்.

அவனைப் பார்த்தால் போதும், அவனோடு பேசினால் போதும் என்று, அவள் ஆசை வயப்பட்டுக் கிடந்தாள்.

வாழ்க்கையில் அவன் காதலித்ததுண்டு; ஆனால் எதிர்த்தரப்பில் அந்தக் காதல் இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ளும் முன்பே, அந்தக் காதலிக்குத் திருமணமாகிவிட்டது.

காதலைப் பற்றி அவன் எழுதிய அளவுக்கு, பாடிய அளவுக்கு மயக்கம் நிறைந்த சுகமான காதலை அவன் வாழ்க்கையில் கண்டதில்லை.

ஆகவே, பானுவின் அன்பு மொழிகள் அவனுக்குப் புது உற்சாகத்தைத் தந்தன. சொல்லப் போனால் போதை நிறைந்த பாடல் பலவற்றுக்கு அவளே காரணமானாள்.

ஜெகதாம்பாள் தெரு அலுவலகத்தில் அந்த மொட்டை மாடியில்... இலக்கியத்தில் மட்டுமே படித்திருந்த இனிய இரவுகளை அவன் பானுவோடு சந்தித்தான்.

அதிகமான உடல் உறவுக்குத் தூண்டுமளவு கட்டான உடல் அவனுக்கில்லை. ஆனாலும் பருவத்தின் கவர்ச்சி இருந்தது. அவளது ஆன்மாவில் ஒரே ராகம் இருந்து கொண்டிருந்தது.

செக்கச் சிவந்த பஞ்சு போலிருந்த அந்த இரண்டு உதடுகளாலும் அவள் ஏழாயிரம் முத்தங்கள் பதித்திருப்பாள்.

—வெளியூர் நாடகங்களுக்குப் போகும்போதெல்லாம் தனது காரில் அவளையே அவன் அழைத்துக் கொண்டு போனான். அவளது மடியிலேயே தலை வைத்துத் தூங்கினான்.

ஒரு தடவை சேலம் நாடகத்துக்குப் போகும் போது உளுந்தூர்ப் பேட்டை தாண்டி 'எலவானாசூர்க்கோட்டை' என்ற ஊர் அருகில் கார் பழுதுபட்டு நின்றுவிட்டது. சரியாக இரண்டு மணி நேரமாவது ஆகும்போல் தோன்றியது.

அப்போது அதிகாலை ஆறு மணி. அவளும் அவனும் ஒரு ஜமுக்காளத்தை விரித்து ஒரு பெரிய மரத்தின் அடியில் அமர்ந்து விட்டார்கள்.

''இப்படியே எப்போதும் இருக்கக் கூடாதா'' என்று அவள் கேட்டாள். அந்தக் கேள்வியையே அப்போதுதான் அவள் கேட்டாள்.

உண்மையிலேயே அவனை நேசித்த இரண்டாவது பெண்ணான அவளை, அவன் அப்படியே காலங்களுக்கும் வைத்திருக்கத்தான் விரும்பினான்.

''நீ என்னோடுதான் இருக்கப் போகிறாய்'' என்ற நம்பிக்கையையும் அவளுக்குக் கொடுத்தான்.

அந்த நம்பிக்கை சரியானதோ, தவறானதோ, ஆசை அப்படித்தான் இருந்தது.

அப்படியொருத்தி அருகிலேயே இருந்திருந்தால், வாழ்க்கை நிச்சயமாக ஒரு கட்டுக்கோப்புக்குள் வந்திருக்கும்.

பானு பக்கத்தில் இருந்த காலங்களில் பல துயரங்களை அவன் மறந்திருந்தான்.

இரண்டு கைகளிலும் அவளை அலாக்காகத் தூக்கி, தான் ஒரு கதாநாயகனாக மாறுவதில் அவனுக்கு ஆனந்தம் அதிகம். அவளது மெல்லிய உடம்பும் அதற்கு வசதியாக இருந்தது.

சில சாலைகள், சில ஊர்கள், சில ஹோட்டல்கள் — இன்னும் அவன் கண் முன்னாலேயே நிற்கின்றன.

'தனக்கென்று ஓர் அடைக்கலம் இருக்கிறது; புகலிடம் இருக்கிறது' என்று அவன் அமைதியுற்றான். ஆனால் அந்த அமைதியைக் கொடுத்த பானு அதிக நாள் வாழவில்லை.

ஒரு நாள் அவன் மதுரையிலிருந்து அதிகாலை விமானத்தில் திரும்பியபோது அவனுக்கு அந்த அதிர்ச்சி காத்திருந்தது.

தியாகராயநகர் திருமலைப்பிள்ளை ரோட்டில், ஒரு தனியார் நர்ஸிங் ஹோமில் பானு இறந்துவிட்டாள் என்பதே அது.

அந்தச் செய்தியைச் சொன்ன நாடகக் கம்பெனித் தோழர்கள் அவன் குளித்து

''உப்பு தினம்''

நீலகிரியில் வாழும் தோதுவர்களும், கோத்தர்களும் தங்களுக்கு நாகரீகத்தையும், கல்வியையும் நெருப்பையும் தண்ணிரிலிருந்து வெளி வந்த 'காமதேனு' என்ற பசுந் தெய்வமே எடுத்துக் கூறியது என்று நம்புகின்றனர். இன்றும் எருமை, எருது இவைகளால்தான் தாங்கள் பிழைப்பதாகக் கூறி அவற்றிற்கு ஆண்டுதோறும் ''உப்பு தினம்'' என்று ஒரு விழாவைக் கொண்டாடுகின்றனர். அன்று எருதுகளையும், எருமைகளையும், பசுக்களையும் வேலை வாங்க மாட்டார்கள். அவற்றிற்குப் பொங்கல் சமைத்துக் கொடுத்து மரியாதை செய்வார்கள்.

— பி. நாராயணன்



முழுகி வெளியே வந்த பிறகு சொன்னார்கள்.

அவனது அழகையும் அலங்காரத்தையும் காணவேண்டிய பானு கண் மூடிக் கிடக்கிறாள்.

அலங்கரித்துக் கொண்டா சடலத்தைக் காணப் போவது? ஈஸ்வரா! இப்படியும் ஒரு சோதனையா?

காரில் ஏறி உட்கார்ந்தபோது மீண்டும் ஒரு சூன்யத்துக்குள் நுழைவது போல் அவனுக்குத் தோன்றியது.

கடவுள் நல்லவர்களையெல்லாம் அவனிடமிருந்து பிரித்துக் கொண்டிருக்கிறான். அயோக்கியர்களையும், திருடர்களையும் கேவலமான கூட்டங்களையும் நிரந்தரமாகவும் பத்திரமாகவும் அவன் அருகிலேயே வைத்திருக்கிறான்.

இத்தகைய சோதனையைப் பட்டியல் போடுவதென்றால், இந்தியாவில் தயாராகும் காகிதம் போதாது!

அப்போது அவனால் அழ முடிந்தது:

அழுவதற்கான வலு அவனது உடம்பில் இருந்தது.

தியாகராயநகருக்குப் பக்கத்துக் காலனியிலேயே இருந்த பானுவின் வீட்டுக்குப் போவதற்கு முன் ஒரு முறை அவன் அழுது தீர்த்தான்.

பானு!

பலமுறை மேட்டில் ஏறி ஏறிப் பள்ளத்தில் விழுந்த அவனது வாழ்க்கையில் மீண்டும் ஒரு பசுமையான மேடாகக் காட்சியளித்த பானு....

அவனுக்காக எந்தத் துயரங்களையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்த பானு...

அவனோடு வாழ்ந்தவர்களெல்லாம் அவனைச் சித்ரவதை செய்தபோது, அவனுக்கொரு காமதேனுவாக, கற்பகத் தருவாக விளங்க வேண்டிய பானு....

திடீரென்று அவன் பின்னால் வந்து, தோளோடு கழுத்தைக் கட்டிப்பிடித்துக் கொள்ளும் பானு...

இரவிலே தலையணையில் தலை வைக்காமல் அவன் மார்பிலே தலை வைத்து, அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்கும் பானு....

குளிக்கும் அறையில் அரை மணி நேரம் அவனைக் குளிப்பாட்டிவிட்டுத் தலையையும் வாரிவிடும் பானு...

எவ்வளவோ கனவுகளை, கற்பனைகளை நடைபெறப் போகும் உண்மைகளாகவே கருதி, மனத்துக்குள்ளேயே மகிழ்ந்து கொண்டிருந்த பானு...

அங்கே சடலமாகக் கிடந்தாள். நாடகக் கம்பெனித் தோழர்கள் எல்லாம் கூடவே நின்றார்கள்.

பானுவின் சடலம் எரிக்கப்பட்ட அன்று அவனுக்கு மற்றுமொரு விரக்தி வந்தது.

இரவு நேரத்தில் குடித்துக் கொண்டே அழுதபடி அவன் எழுதத் தொடங்கினான்.

(வளரும்)

கொறிப்பதற்குக் கொஞ்சம்!

பல்வேறு அலுவல்கள் காரணமாக அங்குமிங்கும் அலைய நேரிட்டபோது கவனத்தைக் கவர்ந்த சில சுவையான விஷயங்கள்:

- மந்தைவெளி பல்லவன் பேருந்து நிலையத்தின் கால அட்டவணையில் ''மகளிர் ஸ்பெஷல்'' வண்டிகளைக் குறிக்க அதன் அருகே 'விழி'யை வரைந்திருக்கிறார்கள்.

- எழும்பூர் இம்பாலா ஹோட்டலுக்கும் அதன் சமையல் அறைக்கும் இடையே உள்ள பகுதியில் வேறு ஒரு ஹோட்டல் நடைபெற்று வருகிறது.

- சைதாப்பேட்டையை 'சைதை' எனச் சுருக்கி அழைப்பார்கள். அதுபோல நுங்கம்பாக்கத்தை 'நுங்கை' என ஒரு கடையில் சுருக்கி எழுதியிருக்கிறார்கள்.

- ஒரு ஆட்டோ ரிக்ஷாவின் பின்புறம் 'TRY ME ONCE' என்று எழுதியிருந்தது. இரண்டாவது முறை ஏறமாட்டீர்கள் என்பதைக் குறிக்கவோ?

- 'மகப்பேறு' தெரியும். 'மகவேற்பு' என்றால் என்ன தெரியுமா? தத்து எடுத்தலை 'மகவேற்பு' எனத் தூய தமிழில் குறித்திருக்கிறது — டெய்லர்ஸ் சாலை பஸ் ஸ்டாப் அருகிலுள்ள ஒரு நிறுவனம்.

- 38-சி ஓட்டேரியில் நின்று புறப்பட்டது. பஸ்ஸிலிருந்து இறங்கிய ஒருவர் 'ஹோல்டான்... ஹோல்டான்' எனக் கதறியபடி ஓடிவந்தார். பஸ்ஸை டிரைவர் நிறுத்த, கண்டக்டர் ஓடி வந்தவரை வினவவும் 'என் டவலை பஸ்ஸில் விட்டுவிட்டேன்' என்றார் அவர். உடனே கண்டக்டர் ''உன் தலையிலே ஏதாவது இருக்காய்யா'' என்று எரிச்சலுடன் கூறிவிட்டு விசில் கொடுக்க பஸ் புறப்பட்டபோது பின்னே திரும்பிப் பார்த்தேன். ஓடிவந்தவர் பெரிய தலைப்பாகையுடன் அசடு வழிய நின்று கொண்டிருந்தார்!

- பெரம்பூர். மூன்று இளைஞர்கள் ஒரு சைக்கிளில் ஏறிக் கொண்டு ''ஓரம் போ... ஓரம்போ... ருக்குமணி வண்டி வருது...'' என ஆனந்தமாகக் கூச்சலிட்டுச் சென்று கொண்டிருந்தனர். ஒரு திருப்பத்தில் அவர்கள் திரும்பியதும் போலீஸ் லாரியுடன் நின்று கொண்டிருந்த ஏட்டு ஒருவர் ''வாங்கடா... வந்து வண்டியிலே ஏறுங்கடா...'' என்று அம்மூவரையும் இடைமறித்து லாரியில் ஏற்றிக் கொண்டு சென்றது பார்க்கப் பரிதாபமாகத்தான் இருந்தது.

- 'தங்கப் பதக்கம்' வெளிவந்தபோது போஸ்டரில் ஒரு மூலையில் காணப்பட்ட மகேந்திரனின் பெயர் இப்போது அப்படம் மறுபடியும் வெளியிடப்பட்டிருக்கும்போது டைரக்டரின் பெயர் மேலே பளிச்சென்று காணப்படுகிறது.

- தினமும் மத்தியான வேளைகளில் அரசினர் தோட்டத்தின் மரத்தடிகளில் 'ரம்மி' ஆட்டம் நடைபெறுகிறது.


- டி. வி. காண முடியாத (அ) துரதிருஷ்டசாலிகளான வெளியூர் நேயர்களுக்கு ஒரு செய்தி — ''முதன் முதலில் சினிமாவில் நான் சான்ஸ் கேட்டு ஒரு தயாரிப்பாளரை அணுகியபோது — வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் பல்லைப் பிடுங்கி எறிந்துவிட்டு வந்தால் சான்ஸ் தருவதாகப் படத் தயாரிப்பாளர் கூறினார். உடனே நான் பல்லைப் பிடுங்கி வந்தால் சான்ஸ் தருவதாக ஓர் ஒப்பந்தத்தை எழுதித் தருமாறு கேட்டேன். ஏனெனில் பல்லும் போய் சான்சும் போய் விடக் கூடாது பாருங்கள்... கேட்டபடி அவரும் சம்மதிக்க என் பல்லைக் காணிக்கையாக்கி நான் நடிகனானேன்...'' என்று 'மலரும் நினைவுகள்' என்ற தலைப்பில் மேஜர் சுந்தரராஜன் டீவியில் கூறினார்.

தொகுப்பு: பெம்ஜி





வட்டமேஜை



● என் அம்மா கல்கியில் வெளியான ஜோக் படித்துக் காட்டினுள் (10–2–80 இதழ்) அந்த ஜோக் என்னைப் பற்றியது என்று எனக்குத் தெரியும். நான் அதில் வரையப்பட்டுள்ள படம் மாதிரி இல்லே. வித்தியாசமாக இருக்கிறேன். இத்துடன் அனுப்பியுள்ள புகைப்படத்தைப் பார்த்து முடிவு செய்து கொள்ளுங்கள்.
மிச்சிகன், யு.எஸ்.ஏ. ராஜேஷ் ஹரி

● ஒரே கல்லில் இரண்டு மாங்காயா? சினிமாச் செய்தியைத் தந்த மாதிரியும் ஆயிற்று; பொங்கலின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டைச் சொன்ன மாதிரியும் ஆயிற்று என அட்டைக் கட்டுரை தந்துள்ளீர்.
ஒண்டிப்புதூர் சிந்தாமணி ஹக்கீம்

● ஏனய்யா, மஞ்சுவிரட்டில் காளைக்கு யாராவது ''மூக்கணாங் கயிறு'' போட்டிருப்பார்களா? ரஜினி பிடிக்கும் மாட்டுக்கு மட்டும் போட்டிருந்ததைக் கவனிக்கவில்லையா?
கோவை-38 அன்புதாசன்.

● தலையங்கம் பற்றி: இந்தப் பாரதிய ஜனதாவும், அன்று ஜனதா என்ற அவியல் ஆட்சியில் இடம் பெற்று, பதவி, பழிக்குப் பழி ஆகிய வெறிகளுக்கு இடையே சிக்கி, நாட்டைச் சீரழித்து, நாட்டில் எங்கே ''அரசியல் வெற்றிடம்'' ஏற்பட்டுவிடுமோ என்று எல்லோரையும் பயப்படச் செய்து லீலைகள் புரிந்த கட்சிகளுள் ஒன்றுதானே? ஜனசங்கம் மீண்டும் வேறு பெயரில் இயங்கத் தொடங்கியுள்ளது. 'புதிய பானையில் பழைய கள்' என்ற சொற்றொடர் இந்தக் கட்சிக்குப் பொருந்தும்.
தூத்துக்குடி-3 ஜி. குருமூர்த்தி

● இந்திய அரசியல் வரலாற்றில் பாரதிய ஜனதா கட்சியின் பம்பாய் மாநாடு ஒரு முக்கிய திருப்பம். இது ''சேற்றிலே முளைத்த செந்தாமரை'' என்று முதன் முதலில் கல்கி கார்ட்டூன் வெளியிட்டு, அதன் எதிர்காலத்தைக் கணித்தது. வட இந்திய மாநிலங்களில் உள்ள அதன் செல்வாக்கும், புகழும், தென்னிந்தியாவிலும் வீச வேண்டும்.
சிதம்பரம் சிவ. ராஜகுமார்

● ஜெயராதனின் மூடஜன்மங்கள் சிறுகதை. மூட நம்பிக்கை ஒழிக என்று கோஷமிட்டுக் கொண்டே மூட நம்பிக்கை வளர்ப்பவர்களைச் சுட்டிக் காட்டுவதாகவும், கட்சித் தொண்டர்கள், தலைவர்களின் மனப்பாங்கு அறியாது அடித்துக்கொள்ளும் நம் நாட்டு நிலையை உணர்த்துவதாகவும் விளங்குகிறது.
சென்னை-35 வி. சுப்ரமணியன்

● தங்கப்பன், சொடலை மட்டும் மூடர்கள் இல்லை! நெற்றியில் சாத்தப் போவது நமக்கெல்லாம் நாமம் என்று தெரிந்தும் வினைக ஓட்டுப் போடுகிறோமே நாம்தான் உண்மையான படித்த(?) 'மூட ஜன்மங்கள்'.
மதுரை-11 என். ஹரிஹரன்

● வெந்து தணிந்த காடுகள் தொடர் கதைக்கான ஜெயராஜ் படத்தில் ராதிகா தொலை பேசியில் பேசுகிறுள். ஆனல் தொலை பேசியின் ஒயர் இணைப்பு வரையப்படவில்லை. இவ்வளவு கவனக் குறைவு ஏன்?
கோவை எஸ். ஆனந்தகுமார்

● பாரத் எலெக்ட்ரானிக்ஸ் பிராமண சங்கம், புதுமையான முறையில் மணமகள் தேர்வு நடத்தியது, வரதட்சிணை ஒழிப்புக்கு ஒரு முன்னேடியாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. ஆனல் தேர்வு செய்யப்படாத பெண்களின் மனநிலையை நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் கூசுகிறது.
காரமடை பா. அன்பழகன்

● ''என் பெயர் அருண் குமார்'' கதை சற்றுக் குழப்பினுலும், ஆசிரியர் கதையை விறுவிறுப்புக் குன்றுமல் எழுதியிருக்கிறுர்.
பழவந்தாங்கல் ஆலைகூத்தன்

● 'கனவு எல்லாம்' என்ற காதல் கவிதை ஒண்டர்ஃபுல்! எழுதத் துடிக்கும் இளைஞர்கள் கல்லூரி மாணவர்களின் திறமையை வெளிக்கொணர்வதில் கல்கி ஆற்றிவரும் பணி பாராட்டத் தக்கது.
மைசூர்-4 பி. தங்கவேலு

● எறும்பு தின்றல் கண் தெரியும் என்ற சொற்கோவையை இது நாள் வரை முற்றிலும் தவருகப் புரிந்து கொண்டு உணவிலோ காப்பியிலோ எறும்பு கிடந்தால் பொருட்படுத்தாமல் இருந்து வந்தேன்.
மங்கையின் மதிநலம் கதையில் வாரியார் என் கண் திறக்கச் செய்தார்.
மதுரை டி. ஆர். அலமேலு

இன்னுமா இருக்கு!

கணியன்

ஒன்பதாம் வகுப்பு பி-பிரிவு. மூன்றாவது மணி அடித்த பிறகும் அமளி குறையவில்லை. சந்தைக் கடையைப் போல் சத்தம் வந்து கொண்டிருந்தது. மாணவர்கள் வகுப்பறைக்குள் அங்கும் இங்கும் ஓடிய வண்ணம் இருந்தனர். வழக்கத்துக்கு மாறாக கூச்சலும் குழப்பமும், பரபரப்பும் அடுத்த வகுப்பு ஆசிரியர்களை வாசற்படிக்கு அழைத்துவந்து நிறுத்தின. வகுப்பாசிரியர் சிவசங்கரன் வகுப்பறையில் நுழைந்தார். கனத்த மழை பொழியும் மேகம் போல், அவர் முகத்தில் கருமையும், கடுமையும் படர்ந்திருந்தன. என்னும் கொள்ளும் வெடிக்கும்; இடியும், மின்னலும் இருக்கும் என்பது தெளிவாகத் தெரிந்தது.

நிமர் அமைதி!

அதனைத் தொடர்ந்து, ஒரு மாணவனும், அவனுடைய தந்தையும் வாசற்படியில் வந்து நின்றனர். அவர்கள் முகத்தில் வருத்தம்! பையனுடைய தந்தை ஒரு வயதான மனிதர். காலத்தின் கீறல்கள் அவர் கன்னத்திலும் நெற்றியிலும் காணப்பட்டன. கிழிந்த சட்டையும் அழுக்கு வேட்டியும் அவரது ஏழ்மையின் எடுப்பான சின்னங்கள்.

பார்த்தாலே தெரியும் ஆசிரியர் சிவசங்கரன் பழமையின் சின்னம் என்று. ஒழுக்கம் அவருக்கு உயிர். உண்மை அவருக்குக் கண்கள். அவர் வகுப்பறையில் ஒரு முறை நோட்டம் விட்டார். மருண்ட மாணவர்கள் முகங்கள் இருண்டு கிடந்தன.

''யாரடா அவன் பேனாவைத் திருடியது?'' வெண்கலக் குரல் அலறியது, வெளியில் நின்றிருந்த பையனைக் காட்டி. வகுப்பறை அதை எதிரொலித்தது. வேறு பதில் இல்லை.

''சொல்ல மாட்டீர்களா?''

மீண்டும் குரல் ஒலித்தது; எதிரொலித்தது. வேறு பதில் இல்லை.

சிவசங்கரன் பெரியவரிடம் வந்தார்.

''ஐயா, நீங்க போங்க! சும்மா கேட்டாச் சொல்ல மாட்டானுக. கேக்கற மாதிரி கேட்டு, வாங்கற மாதிரி வாங்கித் தர்றேன். நீங்க போங்க!''

மாணவர்களுக்கு ஒரே நடுக்கம். ஒருவரையொருவர் பார்த்து விழிக்கின்றனர்.

''சாமி! எப்படியாச்சும் வாங்கிக் கொடுத்துடுங்க சாமி! முந்தாநாள்தான் ஏழுரை ரூபா போட்டு வாங்கிக் கொடுத்தேன். அழுது அழுது வாங்கிட்டு வந்தான். எழுதாமலே தொலைச்சுட்டான்!''

''சரி சரி... நீங்க போங்க... நான் கவனிக்கிறேன்.'' கிழவன் வெளியே போனான். பையன் உள்ளே போனான்.

சிவசங்கரன் மேசை அருகில் வந்து நின்றார். திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள் எப்படி இருந்திருப்பாரோ தெரியாது. ஆனால் இவரைப் போல் இருந்திருப்பார் என்று யூகிக்க இடமுண்டு.

• • •

அந்தப் பைலட் பேனாவை வாங்குவதற்கு மாணிக்கம் படாத பாடு பட்டான். பேனா ஏழுரை ரூபாய்தான் என்றாலும், வீட்டில் அவன் ஏழாவது பையன்; அவன் பெற்றோருக்கு அது எட்டாத தொகை! அழுது, அடம் பிடித்து, அக்கப்போர் செய்து மாணிக்கம்பேனாவை வாங்கி விட்டான். பேனாவைக் குத்திக் கொள்ளக் கூடச் சட்டையில் சரியான பை இல்லை. பாவம். ஆசையாக வாங்கிய மறுநாளே அது காணாமல் போக வேண்டுமா?

புதுப் பேனாவைக் கண்டதும், பெண்கள் புடவையைப் பார்ப்பது போல் பையன்கள் பேனாவை வாங்கிப் பார்த்தார்கள்.

''அழகான பச்சை நிறம்!''

''ரொம்பக் கூர்மையா எழுதுதுடா!''

பையன்கள் பாராட்டினர். முத்தையா பேனாவை வாங்கி ஆசை தீரத் தன் நோட்டில் கிறுக்கினான்.

''மாணிக்கம்! எங்கேடா வாங்கினே?''— முத்தையா.

''பக்கிங்காம் ஸ்டோரில்.'' — மாணிக்கம்.

''இன்னும் இந்தமாதிரிப் பேனா இருக்கா?''

''ஓ.... நிறைய இருக்கே...''

கடைசிப் பீரியட் மணி அடித்தது. மாணிக்கம் பேனாவை வாங்கித் தன் புத்தகப் பையில் போட்டான். எல்லோரும் விளையாடப் போனார்கள். இது தான் முதல் நாள் நிகழ்ச்சி!

மறுநாள் காலையில் பள்ளிக்குப் புறப்பட்ட மாணிக்கம் பையில் கையை விட்டான். 'குபீர்'என்றது. பேனாவைக் காணவில்லை. ஐயோ...! பையை உதறினான்.; வீட்டை அலசினான்; எல்லோரையும் விசாரித்தான். திட்டுக் கிடைத்தது தான் மிச்சம். அழுது கொண்டே அப்பாவுடன் வந்து ஆசிரியரிடம் முறையிட்டான்.

ஆசிரியர் சிவசங்கரனுக்கு முத்தையா மீது சந்தேகம். காரணம், அவன் ஒரு மாதிரி. சென்ற ஆண்டு ஒரு பேனாவைத்திருடிவிட்டான். அது உடனடியாகக் கண்டு பிடிக்கப்பட்டது. உதை

போட்டிக்கதை—19

விழுந்தது. தலைமை ஆசிரியரிடம் சென்றான். அவன் அப்பா வந்து நன்னடத்தை ஜாமீன் கொடுத்தார். இருந்தாலும் முத்தையா மீது ஆசிரியருக்குச் சந்தேகம்.

''டேய்! அவன் ரொம்ப ஏழை. அவன் கிட்டத் திருடறது வடிகட்டின பிச்சைக் காரத்தனம்!'' நொந்துபோய்ப் பேசினார் சிவசங்கரன்.

''சார், நாங்கள்ளாம் மொதல்லேயே விளையாடப் போயிட்டோம். எங்களுக்கு ஒண்ணுமே தெரியாது!'' என்றனர் சிலர்.

''ஏண்டா, சிவசாமி! நீ என்ன சொல்றே?'

''சார்! நான்.... முத்தையாதான்... 'மாணிக்கத்தின் பேனாவை அமுக்கிறேன் பார்; புதுப் பேனா வாங்கிட்டானும்; கும் மாளம் போடறான். அலற வைக்கிறேன் பார்!' ன்னு சொல்லிக்கிட்டிருந்தான்'' என்றான்.

கலகலப்பு. பிறகு அமைதி!

ஆசிரியருக்குக் கொஞ்சம் அவல் கிடைத் தது.

''ஏண்டா முத்தையா, உண்மையா?'' என்றார்.

''சார்... சார்! நான் சும்மா வெளை யாட்டுக்குச் சொன்னேன். உண்மையிலே அப்படிச் செய்யலிங்க. நான் பேனாவை வாங்கி எழுதிட்டுத் திருப்பிக் கொடுத்திட் டேன்!'' என்றான் திட்டவட்டமாக.

''போன வருசமும் இப்படித்தானே சொன்னே?''

''போன வருசம் தெரியாமப் பொய் சொல்லிட்டேன் சார். இப்பெல்லாம் திருந் திட்டேன். பொய் சொல்லலிங்க.''

''சரி, யார் எடுத்தாங்கன்னு உனக்குத் தெரியுமா?''

''அதெப்படிங்க எனக்குத் தெரியும்? நான் எடுக்கலே. அவ்வளவுதான்!'' மிடுக்கான பதில்.

''சரி... நீ போய் உங்கப்பாவைக் கூட் டிக்கிட்டு வா!''

''சார், நான்தான் பேனாவை எடுக்கலேயே, எதுக்காக எங்கப்பாவை அழைச்சிக்கிட்டு வரச் சொல்றீங்க? எங்கப்பா ரொம்பக் கோபக்காரர். எல்லாரையும் விட்டுட்டு என்னை மட்டும் பிடிச்சுக்கிட்டீங்களே, இது நியாயமா?''

''ஏண்டா, எங்கிட்டயே ஞாயம் பேசற அளவுக்கு வந்துட்டயா; ராஸ்கல்!'' சிவ சங்கரனுக்குச் சண்டாளமாகக் கோபம் வந்து விட்டது. அவரது பரபரத்த கைகள், முத் தையாவின் கன்னங்கள் மீதும், முதுகின் மீதும் விளையாடிவிட்டன. அவன் அலறி





அறிமுக எழுத்தாளர்

நான் கோவை நகரவை மேல் நிலைப் பள்ளி யொன்றில், கணித ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். தமிழ் இலக்கியத்தில் பற்றும் உண்டு; புலமையும் உண்டு. சிறுகதை, நாடகம், கவிதைகள் எழுதுவது எனது பொழுது போக்கு. அறிமு கம் இன்றி எனது கவிதைகள் சில வெளியானதுண்டு. கதையுல கில் முதன் முதலில் 'கல்கி'யில் அறிமுகம் ஆவது குறித்து மிகுந்த மகிழ்ச்சியும், பெருமை யும் அடைகிறேன்; காரணம், நான் பேராசிரியர் 'கல்கி'யின் காதலன்.

க. ஆ. சுப்பிரமணியன்



னான்; அழுதான்; பயந்துபோய் வெளியே ஓடினான். அவன் புத்தகங்களைத் தூக்கி வெளியில் எறிந்தார். ''பேனாவைக் கொண்டு வந்தால் உள்ளே நுழை. இல்லையென்றால் இதோடு தொலை, திருட்டுக் கழுதை!'' ஆசிரியர் அலறினார்.

கடந்த ஆண்டு விளையாட்டு வினையான கதை முத்தையாவின் மூளையில் சுழன்று கொண்டிருந்தது. ராகவனும், முத்தையாவும் நண்பர்கள். ஆனால் தீராத விளையாட்டுப் பிள்ளைகள். 'ஊமை' விளையாட்டு விளையாடுவார்கள். அதாவது 'கடத்தல்' விளையாட்டு! எப்படி? புத்தகம், நோட், பேனா, பென்சில், பை, செருப்பு முதலியவற்றுக்கெல்லாம் கால் முளைத்துக்கொள்ளும். திடீர் திடீரென்று காணாமல் போய் விடும். சுற்றி அலுத்து விட்டுப் பலபேர் கைமாறி உரிய இடம் வந்து சேர்ந்துவிடும்.

அன்று ராகவனுடைய பேனா பறந்து விட்டது. ராகவன் தவித்துக் கொண்டிருந்தான். தமிழாசிரியர் வகுப்புக்கு வந்தார். அவர் மிகவும் நல்லவர். யாரைப் பற்றியும் கவலைப்பட மாட்டார். எதையும் கண்டு கொள்ள மாட்டார். பாடத்தை அனுப்பிசகாமல் நடத்துவார். அன்று இராமன் சீதையைத் தேடி அலைந்து கொண்டிருப்பதை மிக உருக்கமாகச் சொல்லிக் கொண்டிருந்தார். ராகவனோ பேனாவைத் தேடவும் முடியாது தவித்துக் கொண்டிருந்தான்.

இரண்டாவது பீரியட் முடிந்தது. உடனடியாக உள்ளே நுழைந்தார் சிவசங்கரன்.

''ஆளுக்கொரு பேப்பர் எடுத்துக்கங்க; டெஸ்ட்!'' என்று சொல்லிக் கொண்டே போர்டில் சையன்ஸ் கேள்விகளை எழுதிப் போட்டுவிட்டு அமர்ந்தார். முன்னறிவிப்பில்லாத டெஸ்ட். ஆனால் என்ன? எல்லோரும் எழுதிக் கொண்டிருந்தார்கள். ராகவன் மட்டும் நெளிந்து கொண்டிருந்தான். ''காப்பியடிக்கிறானோ?'' சந்தேகப்பட்டார் சிவசங்கரன். எழுந்தார்; வந்தார்; பையன் நின்றான்; பேப்பர் பிளாங். 'பளார்... பளார்' என்று நான்கு வைத்தார். பிறகு தான் ''ஏன் எழுதவில்லை?'' என்று கேட்டார்.

''பேனாவை... எவனோ... திருடிக்கிட்டான் சார்...'' என்று விசும்பலுக்கிடையே சொன்னான் ராகவன். விளையாட்டு முற்றி வினையாகி விட்டதை முத்தையா உணர்ந்தான். நிலைமை இவ்வளவு மோசமாகும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. பேனா தன் பயணத்தின் இடையில் அந்தக் கட்டத்தில் அவனிடம் தான் இருந்தது. தலைக்கு மேல் வெள்ளம் போய்விட்டது..

ஆசிரியர் தம் பேனாவை ராகவனிடம் கொடுத்து எழுதச் சொல்லிவிட்டு, விசாரணையில் நுழைந்தார். ஒவ்வொரு பெஞ்சாக விசாரித்தார். யாரும் பேனாவைப் பார்த்ததாகச் சொல்லவேயில்லை. முத்தையாவும் 'இல்லை' என்று சொல்லி விட்டான். பிறகு ஐந்து பேரை ஆசிரியர் வெளியே அழைத்தார். அதில் முத்தையாவும் இருந்தான். தாமே சோதனை போட்டார். பேனா முத்தையாவின் இடுப்பில் இருந்து வெளி வந்தது. அவ்வளவுதான். மேல் கொண்டு என்ன நடந்திருக்கும் என்பதைச் சொல்ல வேண்டுமா? அவன் பள்ளியில் தொடர்ந்து படிப்பதே பெரும் பாடாகி விட்டது.

வம்பன் வெங்கு



செய்தி:
ஆந்திராவில் வரிகொடா கிளர்ச்சி வாபஸ்.

வெங்கு:
இனி வரியைத் தள்ளுபடி செய்யும் கிளர்ச்சி ஆரம்பமாகும் என எதிர்பார்க்கலாம்.

செய்தி:
அவுரங்காபாத்தில் வேலை தேடி வந்தவரைப் பிடித்து கு.க.

வெங்கு:
வேலைதேடி வருபவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க இதுவும் ஒரு வழிதானே?

செய்தி:
டாக்டர் சந்தோஷம் லோக் தளத்தை விட்டு ராஜினாமா.

வெங்கு:
சந்தோஷம்.

செய்தி:
அஸ்ஸாம் கவர்னராக சாரின் நியமிக்கப்படலாம்.

வெங்கு:
சாரின் [எடைக்கு எடை' சாரிடான்' வழங்கி நியமிக்கவும்.

செய்தி:
மணப் பெண்களைச் சித்திரிக்கும் வகையில் தபால் தலைகள்.

வெங்கு:
அத்தபால் தலைகளின் மீது முத்திரை குத்தும் வாய்ப்பை எங்களுக்குத் தர வேண்டும் என்கிறார்கள் சில மாமியார்கள்.

செய்தி:
தமிழில் புதிய எழுத்துக்களைச் சேர்க்க சி. எஸ். யோசனை.

வெங்கு:
தமிழின் தலையெழுத்து இப்படி ஆக வேண்டுமா?

செய்தி:
பங்காரப்பாவுக்கு இனி குண்டுராவ் மந்திரி சபையில் வேலை இல்லை.

வெங்கு:
ஆனால் குண்டு ராவ் மந்திரி சபைக்கு 'குண்டு' வைக்கும் வேலை இப்போது அவருக்குக் கிடைத்திருக்குமே...

—விருச்சிக ராஜ்

என்ன அலைகளில் சிக்கித் தடுமாறிக் கொண்டே நடந்து கொண்டிருந்தான் முத்தையா. எங்கே போவது? கேள்வி கேட்டுக் கொண்டே முத்தையா கடை வீதிக்கு வந்து விட்டான். ''பக்கிங்காம் ஸ்டோர்ஸ்'' என்ற வண்ணப் போர்டு வரவேற்றது. உள்ளே குழந்தைகளும், மற்றும் பலரும் நின்று கொண்டு வியாபாரம் செய்து கொண்டிருந்தனர். விதவிதமான பிளாஸ்டிக் பொருள்கள், பொம்மைகள் வெளியில் தெரிந்தன. நின்றான்.. யோசித்தான்...பிரச்சினை.... தீர்வு.... முயற்சி செய்வோம்....! துணிந்து கடைக்குள் நுழைந்து விட்டான்.

மாலை மணி மூன்று. ஆசிரியர் சிவசங்கரன் பாடம் நடத்திக் கொண்டிருந்தார்.

பூனை போல் முத்தையா வாசற் படியில் வந்து நின்றான். சிவசங்கரன் அவனை ஏற இறங்கப் பார்த்தார். முத்தையாவின் கை காணாமல் போன பேனாவை எடுத்து நீட்டியது. அவன் தலை குனிந்திருந்தது. கண்களிலிருந்து கண்ணீர் முத்துக்கள் கொட்டின. ''இந்த ஒரு முறை மன்னித்து விடுங்கள் சார்! இனி ஜென்மத்துக்கும் இது போல் செய்ய மாட்டேன்'' அவன் உதடுகள் துடித்தன.

''இரண்டாவது முறையாக ஒரு மாணவனை உண்மை பேச வைத்து விட்டோம்'' என்ற பெருமிதத்தில் ஆசிரியர் சிவசங்கரன், வெற்றிப் புன்னகை பூத்தார். முத்தையா விக்கி விக்கி அழுது கொண்டிருந்தான். ஆசிரியரோ, அவனையும் வகுப்பையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தார். ''ஏண்டாப்பா இந்தப் பாடு? முதலிலேயே உண்மை பேசியிருந்தால்...?'' அவர் பார்வைக்கு அதுதான் பொருள்.

கழுகுக்கு மூக்கு வேர்த்தது போல, மாணிக்கத்தின் கிழட்டு அப்பன் வந்து முத்தையாவுக்குப் பக்கத்தில் நின்றான். சிவசங்கரனின் முகம் பளிச்சென்று மலர்ந்தது. வாசல் பக்கம் ஓடிவந்தார். ''உங்க பேனா நல்ல பேனா... கெடச்சிருச்சு... இந்தாங்க'' என்று பேனாவை நீட்டினார்.

கிழவனோ ரெண்டு இருமல் இருமிவிட்டு, ''மன்னிச்சுக்கங்க சார்! சிரமங் கொடுத்துட்டேன். எங்க பேனா வீட்டிலேயே கெடச்சிருச்சு! எங்க சின்னப் பொண்ணு -- ஒன்னரை வயசுப் பொண்ணு -- பேனாவைப் பையிலேருந்து எடுத்து, ஊற வெச்சிருக்கிற நெல்லுக்குள்ளே ஒளிச்சு வெச்சிருக்கு! நெல்லை அவிச்சுக் காயப் போடறப்போ அதுல பேனா கெடந்துச்சு! மாணிக்கத்துக் கிட்டக் கொடுத்திருங்க சாமி... மன்னிச்சிடுங்க....!'' காய்ந்த சருகு காற்றில் பறந்து செல்வதைப் போல் கிழவன் நடந்து சென்று மறைந்தான். சிவசங்கரனின் இடது கையில் பளபளக்கும் புதுப் பேனா! வலது கையில் வளைந்து நெளிந்த பழைய பேனா! எது உண்மை? எது பொய்?

வகுப்பு மாணவர்கள் -- சிவசங்கரனையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

சிவசங்கரன் முத்தையாவையே பார்த்துக்கொண்டிருந்தார்.

முத்தையாவோ, தரையைப் பார்த்துக் கொண்டிருந்தான்!

''டாண் டாண் டாண்....'' பள்ளிக் கூடம் முடிந்தது.

அழகு நகரத்தின் ஆன்மா!

இ. முத்துராமலிங்கம்



குப்பத்துப் புறவெளியின்
கூன்முதுகுக் குடிசைகள்
இவை—
குடியரசு இந்தியாவின்
கூரைக் 'காலனி'கள்
தரையின் கொப்புளங்கள்
பூமியின் புண் வடுக்கள்

இங்கே—
ஆட்களைக் காட்டிலும்
அரசியல் கட்சிகளின்
கொடிக் கம்பங்களே
அதிகம்!

கொசுக்களை விடவும்
குழந்தைகளே மிகுதி

குடும்பங்களைப் பார்க்கிலும்
குழப்பங்களே ஏராளம்!

சாராயப் பானைகள்
காலியானால்தான்
இங்கே—
சாதப் பானைகளில்
நிரம்பும்.

இந்த—
குடிசை புரியின்
'குடிசைத் தொழிலி'ல்
காற்சிலம்பு அணியாக்
கண்ணகிகள்
மதுரையை எரிப்பதில்லை
பாவம்
மதுக்கலயங்களுக்குத்
தீ எரிக்கிறார்கள்!...
இந்த—
சாக்கடை ஓரத்துச்
சாக்குப் படுதாக்களுக்கு
வாக்குக் கேட்க மட்டுமே
நம்மால்
வலம்வர முடிகிறது...

—அழகு நகரத்தின்
ஆன்மாவில் காயம்
இதயத்தில் கசியும்
இரத்த ஒழுக்கு!

இந்த—
சமுதாயப் புண்ணுக்குச்
சரியான மருந்தில்லை;
சமத்துவம் மலர்கிறதாம்
சத்தியமாய் நம்புங்கள்!

வடபுலத்திலே ''போலோ வந்தே மாதரம்'' என்று பொதுமக்களைக் கூட்டித் தேச பக்தர்கள் கோஷித்திருக்கின்றனர். அதை 'வந்தே மாதரம் என்போம்' என்று பாடினார் பாரதியார். 'வந்தே மாதரம்' என்றால், தமிழிலே, தாயை வணங்குகிறோம்' என்று பொருள். அடுத்த வரியில் தூய தமிழிலே ''எங்கள் மாநிலத் தாயை வணங்குதும் என்போம்' என்று மொழி பெயர்த்துக் கொடுத்தார் பாரதி.

பாரதியார் தமிழைக் கொண்டு தேச பக்தியை வளர்த்தார். தேச பக்தியைக் கொண்டு தமிழை வளர்த்தார். அவர், தமிழ்ப் பற்றுக் காரணமாகத் தேச பக்திக்குப் பகையாகிவிடவில்லை. அது போல, தேசப் பற்றுக் காரணமாகத் தமிழ் பக்தியை வெறுத்துவிடவில்லை. தமிழ் மொழிப் பற்றையும் பாரத நாட்டுப் பற்றையும் பிணைத்த முதற் கவிஞன் பாரதியார்தான்!

பழம் பெரும் பாரதம்



ம. பொ. சி.

சிதம்பரம் பிள்ளையை அவர் கப்பல் கம்பெனி நடத்திய காலத்திலே 'வந்தே மாதரம் பிள்ளை' என்றுதான் மக்கள் அழைத்தார்கள். பாரதியார் 'வந்தே மாதரம் என்போம்' என்ற பாடலைப் புனைவதற்கு முன்பே, சிதம்பரனார் நெல்லை மாவட்டத்திலே ஊருக்கு ஊர் — தூத்துக்குடி நகரிலே தெருவுக்குத் தெரு கூட்டம் போட்டு, மக்களைக் கூட்டி வைத்து, 'வந்தே மாதரம்' என்று கோஷிக்குமாறு தூண்டினார்.

பாரதியார் வாழ்ந்த காலத்தில் பலரடங்கிய கூட்டத்திலே 'வந்தே மாதரம்' என்று உணர்ச்சியோடு கோஷிக்கத் துணிவு தேவைப்பட்டது. சிறை செல்லத் துணிந்தவன்தான் அப்படிச் சொல்ல முடியும் என்ற நிலைமையும் இருந்தது. அந்தச் சூழ்நிலையில்தான் மக்களைப் பார்த்து 'வந்தே மாதரம் என்போம்'என்றுபாடுகின்றார்பாரதியார்.

'கூட்டம் கூடி வந்தே மாதரம் என்று கோஷித்தாய் எமைத் தூஷித்தாய்' என்று கலெக்டர் விஞ்சு துரை சினங்கொண்டு கூறியபோது, 'வந்தே மாதரம் என்று உயிர் போகும்வரை வாழ்த்துவோம், சிரம் தாழ்த்துவோம்' என்று வ. உ. சி. பதிலளித்தார்.

''பாரதியார் பாடியுள்ள தேச பக்திப் பாடல்களிலே தலை சிறந்தது எது?'' என்று என்னை ஒருவர் கேட்டால், ''எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி'' என்று தொடங்குகின்ற பாடல்தான்'' என்பேன்.

இதற்கு 'நாட்டு வணக்கம்' என்று தலைப்புத் தந்திருக்கிறார். மூன்று செய்யுட்களைக் கொண்டது இப்பாடல்.

இதிலே பாரதியார் ஊனக் கண்களை மூடிக் கொண்டு, ஞானக் கண்களால் பாரத நாட்டைப் பார்க்கிறார். ஆம், ஆயிரமாயிரமாண்டுகள் முன்னே இந்த நாட்டில் வாழ்ந்த மக்களையெல்லாம் காண்கிறார். அவர்களுடைய அரும்பெரும் சாதனைகளையெல்லாம் கண்டு, நமக்கும் காட்டுகின்றார். இதோ முதல் செய்யுளைப் பார்ப்போம்.

''எந்தையுந் தாயு
மகிழ்ந்து குலாவி
இருந்தது மிந்நாடே — அதன்
முந்தைய ராயிர
மாண்டுகள் வாழ்ந்து
முடிந்தது மிந்நாடே — அவர்
சிந்தையி லாயிர
மெண்ணம் வளர்ந்து
சிறந்தது மிந்நாடே — இதை
வந்தனை கூறி
மனதி லிருத்தி யென்
வாயுற வாழ்த்தேனோ — இதை
வந்தே மாதரம்
வந்தே மாதரம்
என்று வணங்கேனோ!''

''எந்தையரும் முந்தையரும் வெந்ததைத் தின்று வாழ்ந்து, சாவு வந்தபோது செத்தொழிந்த மானிடப் பூச்சிகளா? இல்லை, இல்லை, இல்லை; அவர்களுடைய சிந்தையில் ஆயிர மாயிரம் எண்ணங்கள் வளர்ந்தன. மெய்ப்பொருளைப் பற்றிய உண்மைகளை யெல்லாம் கண்டார்கள். பிரபஞ்சத்தின் தோற்றம், வளர்ச்சி, மறைவு, ஆகியவற்றைப் பற்றிய அற்புதங்களை யெல்லாம் ஆய்ந்து அறிந்தார்கள். அறிந்த வழி, வேதாந்த சித்தாந்த சாத்திரங்களைத் தந்தார்கள், ராமாயண, பாரத, சிலப்பதிகார காப்பியங்களைப் படைத்தார்கள். மனு தருமம், திருக்குறள் போன்ற நீதி நூல்கள் யாத்தளித்தார்கள். இதனால் மனித சமுதாயத்தின் முன்பு பாரத சாதி தலை நிமிர்ந்து நிற்கச் செய்தார்கள்'' என்கிறார்.

ஒன்றா, இரண்டா? எத்தனையோ பெருமைகளை யெல்லாம் மனத்திலிருத்தி, இவற்றைச் சாதித்த எந்தையோருக்கும் முந்தையோருக்கும் வந்தனம் செலுத்தி, அவர்களையெல்லாம் தந்த பாரதப் பெருநாடு வாழ்க என்று வாயார வாழ்த்துவோம் என்று சொல்லிவிட்டு, 'வந்தேமாதரம், வந்தே மாதரம்' என்று கோஷிக்கிறார்.

இந்தப் பாடல் முழுவதையும் தேச பக்தியோடு பாடிப் பார்த்தால் பாரதியார் கண்ட பழம்பெரும் பாரதத்தை நம்மில் ஒவ்வொருவரும் பார்க்க முடியும்.

பாரதியார்,

''அணிசெய் காவியம் ஆயிரம் கற்கினும்
ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண்கிலார்''

என்று பாடியிருக்கிறார். எனவே உட்பொருளை உணர்ந்தறியப் பயில வேண்டும்.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543) Editor: K. Rajendran

புத்தாண்டு மணக்க

நரசூஸ்

காபி அளிக்கும் வெகுமதிகள்!





- 12 கிலோ நரசூஸ் காபிக்கு எவர்சில்வர் காபி டபரா செட்.
- 6 கிலோ நரசூஸ் காபிக்கு எவர்சில்வர் காபி டம்ளர்.
- 2 கிலோ நரசூஸ் காபிக்கு வண்ணத் துணிப்பை.
- 750 கிராம் நரசூஸ் காபிக்கு பெரிய எவர்சில்வர் ஸ்பூன்.
- 500 கிராம் நரசூஸ் காபிக்கு சிறிய எவர்சில்வர் ஸ்பூன்.

மொத்தமாகவோ, சில்லரையாகவோ வாங்கும் நரசூஸ் காபியுடன் கிடைக்கும் வெகுமதிக் கூப்பன்களைப் பெற்று வெகுமதிகளைப் பெறுங்கள்.

22-12-80 முதல் 21-2-81 வரை முடியும் விற்பனைக்கே இப்பரிசுகள் உரியவை.

ஜீவனுள்ள ஒரே காபி!

நரசூஸ்

"தெர்மலோ" காபி!



நரசூஸ் காபி கம்பெனி
சேலம் 636 007.
கிளைகள்: தமிழ்நாடெங்கும்.

ADWAVE/NCC/1578

சரியான வண்ணத்தைத் தீட்டுவதற்கு திட்டம் எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் சரியான சாயலைத் தேர்ந்தெடுப்பது.

வாருங்கள், நெரோலாக் பெயிண்ட்ஸ் அளிக்கும் வண்ணக்கோலங்களை தெரிந்து கொள்ளுங்கள்.

வண்ணங்களுக்கு என்றுமே ஒரு தனி சக்தியுண்டு. அவற்றின் அடிப்படைத் தன்மை, உளநூல் ரீதியின் பலன்கள், மற்றும் அவற்றின் ஒன்றுக்கொன்று உள்ள உறவு— இவற்றைப் பற்றி நீங்கள் நன்றாகத் தெரிந்து கொண்டால் உங்கள் இல்லத்துக்கு புகழ் பெறும்முறையில் வண்ணம் பூசுவதற்கு உங்களுக்கு உதவியாக இருக்கும்.



வண்ணங்களைப் பற்றிய சில முக்கியமான உண்மைகள் இதோ:


1. சில வண்ணங்கள் வெப்பமாக உள்ளன. (சிகப்பு, மஞ்சள், ஆரஞ்சு போன்றவை) வேறு சில குளுமையாக இருக்கின்றன. (நீலம், பச்சை, ஊதா போன்றவை).




2. சில வண்ணங்கள் ஒளியைப் பிரதிபலிக்கின்றன (வெள்ளை மற்றும் பேஸ்டல் போன்றவை) வேறு சில, ஒளியை கிரகித்துக் கொள்கின்றன. (கரும் நிறங்கள்)

3. ஒளியின் நிலைக்கேற்ப வண்ணங்களும் மாறுகின்றன. பெரிய, நன்கு வெளிச்சமுள்ள அறைகளில் கரும் நிறங்கள் அதிகமாக பளிச்சிடுகின்றன. பேஸ்டல் வண்ணங்கள் செயற்கை ஒளியில் மங்கலாக காட்சி அளிக்கின்றன.

4. இளம் வண்ணங்களில் அறைகள் பெரியதாகத் தோன்றுகின்றன. ஆனால் கரும் வண்ணங்களில் அறைகள் சிறியதாகத் தோன்றுகின்றன.



வண்ணங்களோடு குதூகலமடையுங்கள். தேர்ந்தெடுப்பதற்கு கணக்கற்று இருக்கின்றன. நீங்கள் விசேஷமாக உருவாக்குவதிலேதான் இருக்கிறது, வண்ணங்களின் தனித் தன்மையும் பயனும். இதை மட்டும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள், வண்ணப் பொருத்தம், சுவர்கள், மரம் மற்றும் உலோக மேற் பரப்புக்கு மட்டும் பொருந்தாது. வண்ணத்தின் பெருமையை உருவாக்குவதில் பர்னிஷிங் கூட பெரும் பங்கு வகிக்கிறது.



'All you wanted to know about Painting' என்ற எங்களின் நெரோலாக் பெயிண்ட்ஸ் இலவச ஆங்கில வெளியீட்டுக்கு எழுதவும். சரியான வண்ணங்களைத் தேர்ந்தெடுத்துப் பூசுவதால் அறையின் அழகு எப்படி அதிகமாகிறது என்பது அதில் விளக்கப்பட்டிருக்கிறது. கீழே தரப்பட்டுள்ள கூப்பனை நிரப்பி, எங்களுக்கு அனுப்பினால் போதும்.



நெரோலாக் பெயிண்ட்ஸ்

இல்லங்களுக்கு எழிலூட்டும் வண்ணங்கள்

தயவு செய்து நெரோலாக் பெயிண்ட்ஸ் கையேட்டின் ஆங்கிலப் பிரதி ஒன்று அனுப்பவும்.

பெயர் ....

முகவரி ....

.... பின் கோடு ....

குட்லாஸ் நெரோலாக் பெயிண்ட்ஸ் லிமிடெட்
விநியோக பிரிவு, தபால் பெட்டி எண் 16322
பம்பாய்-400 013

ULKA-GNP-168 TAM

168(V)